# வழிபாட்டுக் கோலங்கள்

A1240



ஆசிரியர்:
கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

A1240

Prof. V. SIVASAMY
UNIVERSITY OF JAFFNA

Prof. V. SIVASAMY
UNIVERSITY OF JAFFNA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழிபாட்டுக் கோலங்கள்

124486 SC

ஆசிரியர்:

கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்

வெளியீடு.

2012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைப்பு : வழிபாட்டுக் கோலங்கள்

ஆசிரியர் : கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்

பதிப்புரிமை : பேராசிரியர் அ. சண்முகதாஸ்

முதற்பதிப்பு : 2012

வெளியீடு : வலிகிழக்கு சைவ சமய அருள்நெறி மன்றம்

விலை : 260/=

ISBN : 978-955-906-00-0

பதிப்பு : குரு பிறிண்டேர்ஸ், ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.

Title : VALIPATTUK KOLANKAL

Author : Dr. Manonmani Sanmugadas

Copyright : Dr. Manonmani Sanmugadas

No of Copy : 300copes

Price : 260/=

ISBN : 978-955-906-00-0

Print by : GURU PRINTERS

39/2, Adiyapatham Road, Thirunelvely.

ISBN: 978-955-906-00-0

978955906



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

இன்று வழிபாடு பற்றிய சிந்தனை குறைந்து வருகிறது என்பதை எல்லோருமே உணர்கின்றனர். வழிபாடு மனித மனங்களைப் பண்படுத்தும். இக்கருத்தை எமது முன்னோர் தமது வாழ்வியலனுப மூலம் நன்கு அறிந்திருந்தனர். அதனை மீண்டும் எண்ணிப்பார்க்க வேண்டிய காலகட்டத்திலே நாம் இப்போது வாழ்ந்து கொண்டிருக் கிறோம். அதனால் வழிபாடு பற்றிய சிந்தனைகளை மீளாய்வு செய்து பகிர்ந்து கொள்வது எமது கடமையாகிறது. இந்தக் கடமையுணர்வின் வெளிப்பாடே இந்நூலாக்கமாகும்.

மனிதர்கள் வாழ்க்கையில் ஏற்படும் இன்னல்கள், துன்பங்கள், இடர்கள், அச்சங்கள், அவலங்கள் என்பவற்றில் இருந்து முற்றாக விடுபடுவதற்குரிய சிறந்த வழிகாட்டியே வழிபாடாகும். மனிதர்கள் ஒருவர் மீது மற்றொருவர் செலுத்துகின்ற அன்பு சிலவேளைகள் அற்றுப் போய்விடலாம். உடல்மீது மட்டுமே விருப்புக்கொண்டதாக இருக்கலாம். ஆனால் வழிபாடு எம்மை இறைவன்மீது அன்பு செலுத்த ஆற்றுப்படுத்துகிறது எமக்கென இருந்தவை எல்லாவற்றையும் இழந்தாலும் இறையன்பு எம்மை விட்டு ஒருபோதும் அகலாது. வழிபாட்டு நடைமுறைகள் உடலால் செய்யப்படும் போது உள்ளத்தில் ஓர் ஈர்ப்பு இறைவன் பால் ஏற்படும். அதனால் இறையன்பு உள்ளம் மட்டும் தொடர்புறும் தன்மையதாக நிலைத்து நிற்பது.

சமய குரவர்கள் இறைவன்மீது அன்பு செலுத்தும் வழிகளைக் காட்டிச் சென்றுள்ளனர். வயதில் மூத்தவரான அப்பர் வழிபாட்டிற்குத் தன்னை ஆட்படுத்தியவர். நித்தலும் கோயில் வழிபாடு செய்ய அறிவுறுத்தியவர். புலர்வதன் முன்னரே கோயிலுக்குச் சென்று அலகிட்டு, மெழுக்கிட்டு, பூமாலைபுனைந்து ஏத்தி புகழ்ந்து பாடித் தலையாரக் கும்பிட்டு, கூத்தாட வேண்டுமென்கிறார். எண்பத்தொரு வயது வரை இந்த உலகில் வாழ்ந்த அப்பர் பல்வேறு துன்பங்களை சந்தித்தவர். அவற்றையெல்லாம் வழிபாட்டால் வென்றவர். அவர் எமக்கொரு சிறந்த வழிகாட்டியாக விளங்குகிறார்.

கோயில் பற்றியும் இறைவனுடைய அருட்குணங்கள் பற்றியும் பாடப்பட்ட பாடல்கள் எம்மை இறையன்பு நிலை பற்றி அறியச் செய்பவை. எனவே அவற்றைப்பற்றியும் அடியார் வாழ்வியல் பற்றியும் அன்புநிலை பற்றியும் இன்றைய தலைமுறையினர் அறியும் வண்ணம் எழுத்துருக்கள் தேவைப்படுகின்றன. பக்தி நிலைக்கு அவர்களைப் பக்குவமாக ஆற்றுப்படுத்த வேண்டிய கடமையை இந்நூல் தொடுக்கப்பட்டுள்ள. கட்டுரைகள் நிறைவேற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முயல்கின்றன. பக்தியெனும் உள்ளக் கனலைக் கொழுந்து விட்டெரியச் செய்ய வேண்டும். உறங்கிக்கிடக்கும் அந்த உணர்வைத் தட்டியெழுப்ப வேண்டும். பக்தியுடன் செயற்பட வழிகாட்ட வேண்டும். நவயுகக் கவிஞன் பாரதி பக்தியுடையாரை வருமாறு இனம் காட்டுகின்றான்.

*"பக்தியுடையார் காரியத்திற்*
*பதறார் மிகுந்த பொறுமையுடன்*
*வித்து முளைக்கும் தன்மை போல்*
*மெல்லச் செய்து பயனடைவார்*
*சக்தி தொழிலே அனைத்துமெனிற்*
*சார்ந்த நமக்குச் சஞ்சலமேன்"*

(பாரதி : தெய்வப்பாடல்கள்)

எனவே எல்லோரையும் பக்தி நெறிபற்றிச் சிந்திக்க வைக்கும் கட்டுரைகளைத் தொகுத்து வழிபாட்டுக் கோலங்கள் என்ற பெயரில் நூல்வடிவமைத்துள்ளோம். இக்கட்டுரை யாவும் கடந்த 5 ஆண்டுகளில் பல்வேறு சஞ்சிகைகளில் உதிரியாக வெளி வந்தவை, அவற்றை ஒன்று திரட்டி நூலாகவெளியிட்டு ஒருபார்வையில் காண வழி செய்யப்பட்டுள்ளது. இத்தொகுப்புச் சிறப்பாகப் புலம் பெயர்ந்து வாழும் எம்மினத்தவரின் இளந் தலைமுறையினரைச் சமயவாழ்விலே நெறிப்படுத்தும் சிறப்பு நோக்குடனேயே தொகுக்கப் பட்டுள்ளது. அண்மையில் ஐக்கிய இராச்சியத்திற்கும் ஐரோப்பிய நாடுகளுக்கும் சென்றுவரும் வாய்ப்பு கிடைத்தது. அங்குள்ள வழிபாட்டுத்தலங்களைத் தரிசிக்கும் பேறுகிடைத்தது. அப்போது கண்ட அங்குள்ள அடியார்கள் பக்தி இலக்கியங்களைப் படிக்கும் வாய்ப் பற்றவர்கள் அவற்றைப்பற்றியறிய ஆவலுடன் இருப்பவர்கள் அவர்கள் இந்நூல் மூலம் பயன் பெறுவர் என நம்புகின்றோம்.

இந்நூலை வெளியிட ஆக்கமும் ஊக்கமும் தந்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பரமேஸ்வரன் ஆலயப் பிரதம குரு அவர்கள் என்றும் எம் நன்றிக்குரியவர் நூலை அழகுற அச்சிட்டு வெளிப்படுத்திய அச்சகத்தாருக்கும் கரம் குவிந்த நன்றிகள் பக்திக்கனலை என்னுள்ளே மூண்டெழச் செய்து அதைப்பரப்பப் பணித்து என்னை ஆட்கொண்டிருக்கும் பார்வதி பரமேஸ்வரனின் திருவடிகளுக்கு இவ்வழிபாட்டுக் கோலங்களைப் பணிவுடன் சிரம் தாழ்த்தி வழிபட்டுச் சார்த்துகிறேன்.

- கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளியீட்டுரை

சைவமும் தமிழும் காலத்தால் வரையறுக்கப்பட முடியாதவை. பல எதிர்நீச்சல்களுக்கு மத்தியில் நின்று வளமும் வளர்ச்சியும் பெற்று புத்துணர்வு, பொலிவுபெற்று இன்றும் வாழ்கின்றன. வேதங்கள், ஆகமங்கள், புராண இதிகாசங்கள் அதற்கு ஆதாரமாகவுள்ளன. சைவமக்கள் வாழ்வுக்கு வாழ்வியலின் பயன்களை வலியுறுத்துபவை ஆலயங்கள்

*ஆலய வழிபாடு குறித்து ஆங்கில கவிஞர் ஒருவர்.*

1. உலகோர் கனவிலும் பெற முடியாத மிகுந்த நலன்கள் பலவற்றை பிரார்த்தனை தரும் என்றார்.

"கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பது ஔவையார் வாக்கு

உள்ளத்தின் வளர்ச்சிக்கும் உயிரின் வளர்ச்சிக்கும் வழிபாடு முக்கியமாகும். எனவே மக்களின் சமுதாய வாழ்வின் முக்கியத்துவமாக விளங்குவதும் வழிபாடேயாகும்.

வழிபாட்டு முறைகளை ஆகமங்கள், தேவார, திருவாசங்கள், திருப்பாசுரங்கள் நமக்கு எடுத்தியம்புகின்றன. ஆகவே ஆலயங்கள் மண்ணில் நல்ல வண்ணம் வாழ வழிகாட்டும் நிறுவனங்களாக விளங்குவது அவசியம். அங்கு நடைபெறுகின்ற வழிபாடுகள் உற்சவங்கள் மக்கள் மத்தியில் வேற்றுமையில் ஒற்றுமையை காண்பவை. ஆண், பெண், இளைஞர், முதியோர் என்னும் வேறுபாடின்றி ஆலயத்தில் சேவைசெய்தல் அவசியம். அதேபோன்று வழிபாட்டுக் கருத்துக்களின் உண்மை அறிவினை போதித்தல் அவசியமாகின்றது. அதன் வழியாக சமூகத்தில் இறை நம்பிக்கை, சமயப் பண்பு, கலை, கலாச்சாரம் எழுச்சி பெற முடியும் தம்முடைய சிந்தனைக் கருத்தைப் புலப்படுத்தி, தம்முடைய இறை உணர்வுகளை நிலைநிறுத்த சமயத் தொண்டர்கள் சமுதாயத் தொண்டர்களாக மாற வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுவே நமது சைவ சமய அருள் நெறி மன்றத்தின் இலட்சியமாகும். அதனை மக்கள் மத்தியில் நிலைபெறச் செய்யும் நோக்குடன் வெளிவருவதே வழிபாட்டுக் கோலங்கள் என்னும் இந் நூலாகும்.

காலத்தின் தேவையாக வெளிவரும் இந்நூல் நூலாசிரியர் பல இடங்களில் இலகு நடையில் வழிபாட்டுக் கோலங்களை எடுத்தாண் டுள்ளார்.

நூலாசிரியரும் மதிப்புக்குரிய கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் அவர்கள் தமிழ்கூறும் நல்லுலகுக்கு கிடைத்த பெரும் பேறு. சமயப்பணி, இலக்கியப்பணி, தமிழ்ப்பணி ஆகியவற்றுடன் பண்பாடு, கலாச்சாரம் ஆகியவற்றுக்கு அளுமையுடன் சேவை செய்து வருபவர். இறையருளும் கலைவாணியின் அருளும் பெற்று சீரும் சிறப்புடனும் வாழ பிரார்த்திக்கின்றோம். இந்நூல் சிறப்பாக கல்விச் சமூகத்தினருக்கும் அறிவுசார்ந்த ஆன்மீக எழுச்சிக்கும் வழிகாட்டும் என்பது எமது நம்பிக்கை

*"மேன்மை கொள் சைவநீதி விளங்கு உலகமெல்லாம்"*

**சிவஸ்ரீ சோ. இ. பிரணதார்த்திஹரக்குருக்கள்,**
*தலைவர்,*
*வலி-கிழக்கு சைவசமய அருள்நெறி மன்றம்,*
*கோப்பாய்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | நல்ல மனம் உண்டாம் | 01 |
| 2. | தாயு நீயே தந்தைநீயே ! | 12 |
| 3. | நள்ளிருலில் நட்டம் பயின்றாடும் நாதன் | 17 |
| 4. | அனைத்திலும் மேவியிருப்பவளே ! | 30 |
| 5. | உலையிலே ஊதி உலகக் கனல் வளர்ப்பாள். | 36 |
| 6. | வணங்கும் பேய் வடிவம். | 47 |
| 7. | உலகளந்த நாயகிதாள் உரைப்பாய் நெஞ்சே ! | 56 |
| 8. | அன்னையவள் வையமெல்லாம் ஆதரிப்பாள் | 64 |
| 9. | தேச முத்துமாரி ! | 70 |
| 10. | தமிழர் வழிபாட்டில் இளமையின் செவ்நெறி | 79 |
| 11. | காலத்தை உணர்த்தும் கன்னியர் நோன்பு. | 95 |
| 12. | சிவபுராணம் காட்டும் சிறப்பு வழிபாடு. | 101 |
| 13. | திருக்கார்த்திகை விளக்கீடு | 107 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்ல மனம் உண்டாம்

(கலாநிதி. மனோன்மணி சண்முகதாஸ்)

இன்றைய உலக வாழ்க்கையில் ஏற்படும் இடர்களையும், துயரங்களையும், இன்னல்களையும் இடுக்கண்களையும் அவலங்களையும் போக்குவதற்கு என்ன வழியென்பதே பலருடைய கேள்வியாக உள்ளது. அதற்காக எமது முன்னோர் காட்டிய "வழிபாடு" என்னும் வழிகாட்டலைப் பற்றி மீண்டும் எண்ணிச் செயற்பட வேண்டியுள்ளது. குறிப்பாக எமது இளைய தலை முறையினரும் சிறாரும் தமது எதிர்கால வாழ்வியல் பற்றி மிகுந்த சிக்கல்களையே எதிர்கொள்ள வேண்டியுள்ளனர். இவர்களது வாழ்வியலைச் சீர் செய்யவேண்டிய முதன்மையான கடமையொன்று பெற்றோருக்கும் நலன்விரும்பிகளுக்கும் காத்து நிற்கின்றது. அதற்காக எமது முன்னோரின் வழிபாடு பற்றிய கருத்துக்களின் தடங்களைத் தேடிச் செல்ல வேண்டியுள்ளது அத்தகையதொரு புதிய தேடுதலின் போது கிடைத்த செய்திகளின் சுருக்கமான. தொகுப்பே இக்கட்டுரையின் உள்ளடக்கமாக அமைகிறது.

"வழிபாடு" பற்றிய தெளிவினை ஏற்படுத்தும் பயிற்சிக் களங்களாகக் கோவில்கள் அமைந்துள்ளன. அங்கு உறவும் ஊரும், நட்பும் ஒருகிணைந்து செயற்படுவது வழிபாட்டின் அடிப்படையான நோக்கமாக உள்ளது. பலருடைய நலன்களைப் பேணும், பண்பாடு கோயில் வழிபாட்டின் மூலம் பயிற்றப்பட்டது. தொடக்ககாலத்தில் மனிதன் இயற்கையை, அதன் பேராற்றலைக் கண்டு பணிந்து வழிபடத் தொடங்கினான். அந்த இயற்கை ஆற்றல்களை தனது தலை முறையினருக்கும் எடுத்துரைத்து வழிகாட்டினான். இத்தகைய வழி காட்டிகளை இளம் தலைமுறைகளும் சிறாரும் வணக்கத்திற் குரியோராகக் கருதி வாழ்ந்தனர், கோயில் என்னும் அமைப்புத் தோன்றிய போது "வழிபாடு" என்னும் வாழ்வியற் செயற்பாடு மாற்றமடையலாயிற்று. இயற்கையின் பேராற்றல்களை இறை உருவங்களாகக் கண்டு வழிபடும் புதியதொரு மரபு தோன்றியது. ஆனால் தொடக்க நிலையில் கோயில் என்பது பெருங்கட்டட அமைப்பாக இருக்கவில்லை. சிறியகொட்டில் அமைப்பாகவே இருந்தது. பெருமரத்தடியிலும், மலையிலும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீர்நிலைகளிலும் ஆற்றங்கரைகளிலும் இறைவன் உறையும் மாடங்கள் அமைக்கப்பட்டன. அங்கு ஆண்டுக்கொருமுறை மக்கள் சென்று இறைவனைத் தரிசனம் செய்து வழிபட்டனர். தமது விளைபொருட்களை மடையிட்டுப் பரவினர். பின்னர் அதனைப் பகுத்துண்டு மகிழ்ந்தனர். இதனால் "வழிபாடு" என்னும் செயற்பாடு "மடையிடல்" என்னும் செயற்பாட்டுடன் இணைந்து "திருவிழா" என விழா நிலையில் நடைபெறலாயிற்று.

இத்தகைய வழிபாட்டு நடைமுறை வளர்ச்சியில் இன்று விநாயகர் வழிபாடு முதன்மை பெற்றுள்ளது. வீடு, கோயில், சமூகம் என்ற பல்வேறு நிலைகளிலும் "விநாயகர் வழிபாடு" தொடக்க வழிபாடாகச் செயற்படுத் தப்படுகின்றது. இந்நிலை ஏன் உருவாயிற்று? என்ற கேள்வியும் எம் இளந்தலை முறையினரால் எழுப்பப்பட்டுவருகிறது. பண்டைய தமிழ் இலக்கியக் குறிப்புகள் சில இக்கேள்வியைத் தெளிவுபடுத்துவனவாக உள்ளன. மக்களிடையே பரவலான வழிபாட்டு நடைமுறைகளைப் பற்றி அறிவதற்கு புராண இதிகாசக்கதைகளும் உதவுகின்றன. விநாயகர் புராணம் விநாயகர் வழிபாடு பற்றிய தகவல்களைத் தருகின்றது. தனக்கு மேலாக எவரும் இல்லாது தானே தனி முதல்வனாக விளங்குபவர் விநாயகர். அவர் விக்கினங்களை நீக்கும் கடவுளாக வழிபடப்படுவதால் விக்னேஸ்வரர் என்றழைக்கப்படுகிறார். பிள்ளையார், கணபதி, கஜமுகன், பிரணவமூர்த்தி, வேழமுகன், கரிமுகன் எனப் பல்வேறு பெயர்களும் பெற்றுள்ளார். விநாயகருடைய பெருமைகளை அதர்வவேதத்தில் உள்ள கணபதி உபநிடதம் கூறுகின்றது. ஆகமங்களில் கணபதி பற்றிய செய்திகள் உள. காரணாகமம் 16 கணபதிகள் பற்றியும் பஞ்சபக்த விநாயகரையும் அவரது பஞ்சமுக தியானம், பிரதிஷ்டை பற்றியும் கூறுகிறது. விநாயக பரத்துவம் விநாயக மூர்த்தங்களின் வரலாற்றையும் திருவருட்சிறப்பையும் கூறுகின்றது.

தேவாரம் பாடிய அடியார்களும் ஔவையார், நக்கீரர், கச்சியப்பசிவாச்சாரியார், ஆதிசங்கரர் போன்றவர்களும் விநாயகரை வழிபட்டுப் பலபாடல்களைப் பாடியுள்ளனர். எத்தகையதொரு செயற்பாட்டைச் செய்யப்புகினும் விநாயகரைப் பணிந்து அதனைச் செய்யும் மரபும் நிலைபெற்றுள்ளது. செய்யுள் இலக்கியங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்றுவோர் விநாயகரை வழிபட்டுக் காப்புச் செய்யுள் பாடித்தொடங்கும் இலக்கியமரபும் உண்டு தேவாரங்களில் கணபதி என்ற பெயரில் விநாயகர் குறிப்பிடப்படுகிறார் இதனால் காணபத்தியம் என்ற வழிபாட்டு மரபும் தோன்றியது. தோற்ற நிலையில் யானைமுகம் விநாயகரை வேறுபடுத்திச் சிறப்புறச் செய்தது. வேழமுகத்தான், கடமாமுகத்தான், கடக்களிறு, தும்பிமுகத்தோன்றல், ஐங்கரத்து ஒரு களிறு, கரியானை, நற்குஞ்சரக்கன்று, கைப்போதகம், கரிமுகன், சித்தி வேழம், என வழங்கப்படும் பெயர்கள் இதற்குச் சான்றாகும். பஞ்சமுக விநாயகர் தோற்றமும் விநாயகருக்குச் சிறப்பாகக் கூறப்படுகிறது.

மகாகணபதி, சித்திகணபதி, சக்திகணபதி, மோட்சகணபதி, வித்தியாகணபதி, என்ற ஐந்து முகங்களோடு பஞ்சமுகவிநாயகர் விளங்குகிறார்.

விநாயகர் வழிபாடு பற்றிய தனிப்பாடல் ஒன்று வழிபாட்டினால் வரும் பயன்களைத் தொகுத்துக் கூறுகிறது.

*"ஏர் ஆனைக் காவில் உறை என் ஆனைக் கன்றளித்த*
*போர் ஆனைக் கன்றுதனைப் போற்றினால்- வாராத*
*புத்திவரும் பக்திவரும் புத்தி உற் பத்திவரும்*
*சத்திவரும் சித்திவருந் தான்"*

அழகிய திருவானைக் காவில் என் தாயாகிய பெண்யானை வடிவுடைய உமையம்மையாருக்கு மகனாகத் தோன்றிய விநாயகப் பெருமானை வழிபட்டால் அறிவு உண்டாகும், அன்பு உண்டாகும், நன்மக்கட்பேறு உண்டாகும், எண்ணிய செயல்களை முடிக்கும் ஆற்றல் உண்டாகும், எடுத்த செயல்களில் வெற்றியுண்டாகும். சிறார் கல்விப்பயிற்சியில் எளியமுறையில் நீதிநெறிகளைப் புகட்டும் நூல்கள் நம்முன்னவரால் இயற்றப்பட்டுள்ளன. ஆனாலவை முதியோரும் கற்றுப்பயனடையத் தகுந்தவையாய் உள்ளன இவற்றுள் ஔவையார் இயற்றிய ஆதித்திசூடி, கொன்றைவேந்தன் வாக்குண்டாம், நல்வழி என்னும் நான்கு நூல்களும் அதிவீரராம பாண்டியரின் வெற்றி வேற்கையும் குமரகுருபரசுவாமிகளின் நீதிநெறி விளக்கம் சிவப்பிரகாச சுவாமிகள் இயற்றிய நன்னெறி என்பன எக்காலத்துக்கும் ஏற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்துக்களைக் கூறும் நூல்களாகும். இவற்றுடன் உலக நாத பாண்டிதர் இயற்றிய "உலகநீதி" என்ற நூலும் பொதுவான பல நல்ல கருத்துக்களைச் சிறாருக்கு இயம்புகிறது. இந்நூல்களுக்கு இயற்றப்பட்ட கடவுள் வாழ்த்துப் பாடல்கள் விநாயகர் பெருமையை உணர்த்துகின்றன.

*" பிரணவப் பொருளாம் பெருந்தகை ஐங்கரன்*
*சரண அற்புத மலர் தலைக்கு அணிவோமே"*

*(வெற்றிவேற்கை)*

*"உலகநீதி புராணத்தை உரைக்கவே*
*கலைகளாய் வரும் கரிமுகன் காப்பு"*

*( உலகநீதி )*

*"மின் எறி சடாமுடி விநாயகன் அடிதொழ*
*நன்னெறி வெண்பா நாற்பதும் வருமே"*

*( நன்னெறி )*

*"பாலும் தெளி தேனும் பாகும் பருப்பும் இவை*
*நாலும் கலந்து உனக்கு நான் தருவேன் - கோலம் செய்*
*துங்கக் கரி முகத்துத் தூமணியே - நீ எனக்குச்*
*சங்கத் தமிழ் மூன்றும் தா."* *( நல்வழி )*

*"வாக்குண்டாம் நல்லமனம் உண்டாம் மா மலராள்*
*நோக்கு உண்டாம் மேனி நுடங்காது - பூக்கொண்டு*
*துப்பார் திருமேனி தும்பிக்கையான் பாதம்*
*தப்பாமல் சார்வார் தமக்கு* *(வாக்குண்டாம்)*

மேற்காணும் பாடல்களில் ஔவையாருடைய பாடல்கள் சிறுவர் உள்ளத்தில் வழிபாடு பற்றியதொரு தெளிவை ஏற்படுத்துவனாக உள்ளன. பால், தெளிந்ததேன், பாகு, பருப்பு என்னும் நான்கு சுவையான பொருட்களைக் கொடுத்து சங்கத்தமிழான இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழையும் தரவேண்டுமென ஔவையார் வேண்டுகிறார், ஏதாவது பொருளைப் பெறவிரும்பும் சிறுவர் தம்மிடம் உள்ளதைக் கொடுத்தும் வாங்கலாம் என்ற எண்ணமுடையவர். இச்சிறுவர் உளவியலை ஔவையார் மனங்கொண்டு கடவுள் வாழ்த்துப்பாடலை இயற்றியுள்ளார். வாய்க்குச் சுவையான பொருட்களைக் கொடுத்து விநாயகரிடம் தமிழறிவைப் பெறலாம் எனச் சிறுவருக்கு வழிபட வழிகாட்டுகின்றார். விநாயகர் சிறுவர் மனதைக் கவரும் வடிவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Prof. V. SIVASAMY
UNIVERSITY OF JAFFNA

கொண்டவர். யானை என்னும் பெரிய விலங்கு சிறுவர் மனதில் வியப்பை ஏற்படுத்துவது. எனவே “யானைமுகம்” கொண்ட விநாயகரையும் பேராற்றல் படைத்தவராகச் சிறுவர் எண்ணுவர். எனவே இக்குழந்தை உள்ளத்தின் இயல்பை நன்குணர்ந்து கடவுள் வாழ்த்தை ஔவையார் பாடியுள்ளார். தாய்மைப் பண்புடன் சிறுவரை வழிபாட்டிற்கு ஆற்றுப்படுத்துகின்றார். சிறுவர் நான்கு பொருள் கொடுத்து மூன்று தமிழைப் பெறலாம். இந்த வியாபார நோக்கை சிறுவருக்குப் புகட்டலாமா எனச் சிலர் வினவக்கூடும். ஆனால் இது வியாபார நிலையன்று நிலையற்ற வயிற்றுக்கு நாளும் வழங்கும் இனிப்பான பொருட்களை விட நிலையான செவிக்கு வழங்கும் அறிவே நன்மை தரும் என்பதை காப்புச் செய்யுளிலேயே புலப்படுத்துகிறார். கோலம் செய்த யானை முகத்தையுடைய விநாயகரைச் சிறுவர் மனங்களிலே பதிய வைக்கிறார்.

விநாயக வழிபாடு இளைஞர் வாழ்வியலையும் சீர்படுத்தும். இதனை ஔவையாருடைய “வாக்குண்டாம்” என்னும் கடவுள் வாழ்த்துப்பாடல் நன்குணர்த்துகிறது. வழிபாடு என்ன நன்மைகளைச் செய்யும் என வரிசைப்படுத்திக் காட்டியுள்ளார். மனம், வாக்கு, காயம் என்னும் மூன்றினாலும் வழிபாடு மேற்கொள்ளப்பட வேண்டும். மனதில் இறையாற்றலை நினைந்து சொற்களால் வாழ்த்தி பூக்களை இட்டு வழிபடும் மரபு நீண்ட காலமாகவே நடைபெற்று வருகிறது. ஆனால் அவ்வழிபாடு நடைமுறையை இடைவிடாது செய்ய வேண்டும். விநாயகரை மலரிட்டு இறைஞ்சும் பழக்கத்தை நாளாந்தம் கடைக் கொள்ள வேண்டும் . அது வாழ்வியலில் ஒரு ஒழுங்கை நிலை நிறுத்தும். சொல்வளம், மனவளம், செல்வவளம், என்பவற்றைத் தரவல்லது இடையறாத வழிபாடாகும். நாள் தோறும் மலர்பறித்து இட்டு சொல்மாலையால் ஏத்திவழிபட எல்லாம் கிடைக்கும் இது ஒரு பயிற்சி நெறியாக அமையவேண்டும் என்பதையே ஔவையார் குறிப்பிட்டுள்ளார் விநாயகரின் தோற்றத்தையும் நிறத்தையும் குறிப்பிட்டு மலர் சாற்றி மேலும் அழகுபடுத்தி வழிபடும் முறைமையையும் நினைவூட்டுகிறார். இளமைக்காலம் அழகை நாடி அலையும் பருவமாகும். மனதை வயப்படுத்தி விநாயகரை மேலும் அழகுபடுத்திப்பார்க்கும் போது மனம் பரவசப்படும். அப்பரவசமே வழிபாட்டு நெறியில் ஈடுபடச்செய்யும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வியலில் இறுதிவரை வழிபாடே துணைநிற்கும் என்பதை ஔவையார் நன்கு உணர்த்தியுள்ளார்.

இன்று இவ்வழிபாட்டின் தொடர்ந்த பழக்கமாக எதையும் எழுதும் போது பிள்ளையார் சுழி போட்டு எழுதும் நிலை காணப்படுகிறது. இது விநாயகரை வணங்கிக் கருமத்தை ஆற்றும் பண்பையும் அவருடைய உருவத்தின் குறியீடாகப் பிள்ளையார் சுழியைப் போடுவதன் மூலம் மனம் ஒரு வரையறையுள் நின்று செயற்பட வாய்ப்புண்டாக்கிறது கோயில் வழிபாட்டிலும் விநாயகரை முதலில் வழிபடும் மரபு தொடர்கிறது. "வேழமுகப்பாட்டு" என்னும் பாடல் சிறுவர் விநாயகரைத் தொழும் போது கூட்டுநிலையில் பாடுவதற்கு ஏற்றது. இப்பாடலில் கூறப்பட்டுள்ள விடையங்கள் விநாயகர் பெருமையையாவரும் அறிய உதவுகின்றது. மேலும் இப்பாடல் சிறுவர்களின் தமிழ்மொழிப் பயிற்சிக்கும் நன்கு உதவும்.

*சிந்தித்தவர்க்கு அருள் கணபதி சயசய*
*சீரிய ஆனைக் கன்றே சயசய*

*"அன்புடை அமரர்கள் காப்பாய் சயசய*
*ஆவித்துணையே கணபதி சயசய*
*இண்டைச் சடைமுடி இறைவா சயசய*
*ஈசன் தந்தருள் மகனே சயசய*
*உன்னிய கருமம் முடிப்பாய் சயசய*
*ஊர் நவ சந்தி உகந்தாய் சயசய*
*எம் பெருமான் இறைவா சயசய*
*ஏழ் உலகும் தொழ நின்றாய் சயசய*
*ஐயா கணபதி நம்பியே சயசய*
*ஒற்றை மருப்புடை வித்தகா சயசய*
*ஓங்கிய ஆனைக்கன்றே சயசய*
*ஔவியம் இல்லா அருளே சயசய"*

இப்பாடலில் தமிழ் உயிர் எழுத்துக்களை முன்னிறுத்தி வழிபட வழிகாட்டப்பட்டுள்ளது. விநாயகர் வழிபாடு இப்பாடலில் விளக்கப் பெற்றிருக்கும் முறைமை மொழிக்கல்விப் பயிற்சிக்கும் வழிகாட்டுவதாய் அமைந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் வாழ்வியலில் நிழல்தரு மரங்களினடியில் விநாயகர் உறைவதாக நம்பப்படுகின்றது. இன்னும் தெருவோரங்களிலும் நீர்நிலைகளின் கரையிலும் விநாயகர் எழுந்தருளியிருப்பார். விநாயகர்வழிபாட்டின் பரவலாக்கம் மக்களிடையே பரந்திருப்பதை கபிலதேவநாயனார் பாடலும் தெளிவுபடுத்தியுள்ளது.

*விநாயகனே வெவ்வினையை வேரறுக்கவல்லான்*
*விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே*
*விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினால்*
*கண்ணிற் பணிமின் கனிந்து.*

மக்களுடைய வெம்மையான துன்பங்களைப் போக்குவதற்கு நாள்தோறும் வழிபாடு செய்யும் மனப்பயிற்சி இன்றியமையாதது. விண்ணுக்கும் மண்ணுக்கும் நாதனாக விளங்குகின்ற விநாயகர் எல்லையில்லாத ஆற்றலுடையவராகக் கருதப்படுகிறார். பக்தியோடு வழிபடுவோரை விநாயகர் காப்பாற்றுவார் என்ற நம்பிக்கையும் மக்களிடையே வலுப்பெற்றுள்ளது. திருமந்திரம் இந்நம்பிக்கையை வருமாறு கூறுகின்றது.

*“ஐந்து கரத்தனை ஆனைமுகத்தனை*
*இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை*
*நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்*
*புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே”*

இப்பாடலில் விநாயகர் “நந்திமகன்” எனக்குறிப்பிடப்பட்டுள்ளார். திருமந்திரம் திருமூலரால் பாடப்பட்டது. பத்தாம் திருமுறையாக வகுக்கப்பட்டுள்ளது. பதினோராம் திருமுறையில் கபிலதேவநாயனார் இயற்றிய மூத்தநாயனர் திருவிரட்டை மணிமாலை, அதிரா அடிகள் இயற்றிய மூத்த பிள்ளையார் திருமும்மணிக்கோவை, நம்பியாண்டார் நம்பி இயற்றிய திருநாரையூர் விநாயகர் திருவிரட்டை மணிமாலை போன்ற நூல்கள் விநாயகரின் சிறப்புகளை விரிவாய்ப் பேசும் நூல்களாகும் விநாயகர் வழிபாட்டினால் பெறும் சிறப்புகளைப் பின்வரும் பாடலும் கூறுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*"திருவாக்கும் செய்கருமம் கை கூட்டும் செஞ்சொற்*
*பெருவாக்கும் பீடும்பெருக்கும் உருவாக்கும்*
*ஆதலால் வானோரும் ஆனைமுகத்தானைக்*
*காதலால் கூப்புவர் தங்கை"*

இக்காப்புச் செய்யுள் நிகழ்ச்சி தடங்கலின்றி இனிதே முடிதற் பொருட்டுப் பாடப்படும். அதற்கு விநாயகரையே வேண்டிப்பாடும் மரபு இன்றுவரை நிலைத்துள்ளது. முற்காலத்தில் சிவன் அல்லது திருமாலையே வணங்கிப்பாடிய பின்பு நூலை எழுதுவர். இடைக்காலத்தில் நூற் கடவுள் வணக்கமாகப் பிள்ளையாரைப் பாடும் வழக்கம் தோன்றியது. ஆனால் ஔவையார் பாடிய இரு பாடல்கள் சற்று வேறுபட்டமைந்துள்ளன.

*"ஆத்தி சூடி அமர்ந்த தேவனை*
*ஏத்தி ஏத்தித் தொழுவோம் யாமே"*

(ஆத்திசூடி: கடவுள் வாழ்த்து)

*"கொன்றை வேந்தன் செல்வன் அடி இணை*
*என்றும் ஏத்தி தொழுவோம் யாமே"*

(கொன்றைவேந்தன்: கடவுள் வாழ்துத்து)

சிவனைக் குறிப்பிட்டு விநாயகரை ஔவையார் வணங்கும் நிலை இங்கு உணரப்படுகிறது. சிறுவர்க்காக இயற்றப்பட்ட இவ்விருநூல்களும் நீதிநெறிகளைப் புகட்டும் நோக்குடையவை ஆத்திசூடி இரண்டு சீர்களால் ஆனது கொன்றை வேந்தன் ஒவ்வோர் அடியாக அமைந்தது. இளம் சிறுவர் மனதில் விநாயகர் பற்றிய எண்ணத்தைத் தெளிவுபடுத்த முயன்ற ஔவையார் காப்புப்பாடல்கள் காலத்தை வென்றுநிற்கும் பாடல்களாகும் பிற்காலத்தில் எழுந்த தமிழ் நூல்களில் விநாயக வழிபாடு சமூகநிலையில் நடைபெறவேண்டியதென வற்புறுத்தப்படுகிறது. பெரியபுராணம், கந்தபுராணம், திருவிளையாடற்புராணம், கோயிற் புராணம், விருத்தாசலபுராணம், சேக்கிழார் நாயனார் புராணம் போன்ற நூல்களிலே இணைந்துள்ள விநாயக வணக்கப் பாடல்கள் இக்கருத்தை விளக்கும் நல்ல சான்றுகளாய் உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*“எடுக்கு மாக்கதை யின்றமிழ்ச் செய்யுளாய்*
*நடக்கு மேன்மை நமக்கருள் செய்திடத்*
*தடக்கை யைந்துடைத் தாழ் செவி நீண்முடிக்*
*கடக்க ளிற்றைக் கருத்துளி ருத்துவாம்”* (பெரியபுராணம்)

இங்கு சேக்கிழார் தான் இயற்றப்போகும் பெரியதொரு நூல் நன்கு நிறைவேறவேண்டிக் காப்புச் செய்யுளை விநாயக வணக்கமாகப் பாடியுள்ளார். ஔவையார் சங்கத்தமிழில் ஒன்றான இயற்றமிழ் அருள வேண்டுமெனக் கேட்கிறார். சேக்கிழார் பாரிய முயற்சிக்கு விநாயகனை மனத்துள் இருத்திச் செயற்படுவதே நன்று என நம்பிப்பாடுகிறார் . அவர் மனத்துள் இருக்கும் உருவத்தைச் சொல்லோவியமாக முதற்பாடலிலே எழுதிவிடுகிறார் மனத்தால் வழிபடும் சமுகம் ஒன்றின் பிரதிநிதியாகச் சேக்கிழார் விளங்குகின்றார்.

*“மண்ணுல கத்தினிற் பிறவி மாசற*
*எண்ணிய பொருளெலாம் எளிதின் முற்றுற*
*கண்ணுதல் உடையதோர் களிற்று மாமுகப்*
*பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவோம்”*

(கந்தபுராணம்)

இங்கு கச்சியப்பர் தாம் எண்ணியவற்றை எளிதிற் பெறுவதற்கு வழி காட்டுகின்றார் களிற்று முகமுடைய விநாயகனின் மலரடிகளைப் பணிந்து வழிபட்டால் மண்ணுலக வாழ்வில் குற்றமின்றி வாழமுடியும். கச்சியப்பரின் பக்தி பணிந்து வாழும் சமய வாழ்வியலைச் சமுகத்திற்கு எடுத்துக்காட்டுகிறது. உலக வாழ்வியலில் நினைப்பவை கை கூட விநாயக வழிபாடே சிறந்தது எனக் கச்சியப்பர் இயம்பியுள்ளார் “மலரடி பணிந்து போற்றுவோம்” என்னும் தொடர் அவர் மனித சமுகத்தை வழிபாட்டின் பாற் செலுத்த விழைவதை விளக்கிநிற்கிறது.

*“உள்ளமெனுங் கூடத்தில் ஊக்கமெனுந்*
*தறி நிறுவி யுறுதியாகத்*
*தள்ளரிய வன்பெனுந் தொடர்பூட்டி*
*யிடை படுத்தித் தறுகட் பாசக்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*கள்ள வினைப் பசுபோதக் கவளமிடக்*
*களித்துண்டு கருணையென்னும்*
*வெள்ளமதம் பொழிசித்தி வேழத்தை*
*நினைந்து வருவினைகள் தீர்ப்பாம்"*

(திருவிளையாடற்புராணம்)

இப்பாடல் வழிபாடு செய்வதற்குரிய பயிற்சி நெறிகளை விளக்கியுள்ளது. வழிபாடு என்பது சிறுவயதில் பெரியோரைப் பார்த்துச் செய்யும் நடைமுறையாக அமையலாம். ஆனால் வளர்ந்தவர்களிடையே வழிபாட்டுணர்வு தோன்றச்சில ஒழுங்குமுறைகள் பேணப்பட வேண்டும். உள்ளத்தை முதலிலே பக்குவப்படுத்த வேண்டும். அதில் ஊக்கத்துடன் செயற்படுவதற்கான உணர்வை வளர்க்கவேண்டும். உள்ளத்திலே அன்பு என்னும் தொடர்பாடல் மூலம் வினைகளையும் பாசத்தையும் வேரறுக்க வேண்டும். அப்போது வேழமுகத்து விநாயகனின் கருணையை நாம் உணர்ந்து கொள்ளலாம் விநாயகன் நினைவால் வருகின்ற வினைகளை எல்லாம் களையும் ஆற்றலைப் பெறமுடியும். இத்தகைய உயர்ந்த மனப்பக்குவம் பெற்ற சமுகம் ஒன்று உருவாகினால் மக்கள் வாழ்வியல் சீராய் நடக்கும்.

எனவே இன்றைய காலகட்டத்தில் விநாயக வழிபாடு பல ஐயங்களை இளைஞரிடையே தோற்றுவித்திருப்பதற்கு முக்கிய காரணம் தெளிவின்மையே கடவுள் வழிபாடு இயற்கையானது நமது முன்னோரின் வாழ்வியலனுபவத்தாலும் எழுத்துப்பதிவுகளாலும் தொடர்ந்து வருவது எம்முடைய மனத்தைப்பக்குவப்படுத்தும் பண்புடையது நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் எனப்படும் பஞ்சபூதங்களால் உருப்பெற்ற இவ்வுலகத்தின் சீரான இயக்கத்தை விநாயக வழிபாடு நன்கு உணர்த்துகிறது. உருவவழிபாடு தோன்றுவதற்கு முன்னரே உள்ளத்தில் இயற்கையின் வரம்பில்லா ஆற்றலைப் பதித்துக் கொள்ள 'விநாயகர்' என்ற கருத்துத் தோன்றியிருக்க வேண்டும். பின்னர் ஆற்றல் பொருந்திய களிற்றின் முகமும் ஐந்து கரமுமுடைய உருவம் தோன்றியது கணங்களின் தலைவனாய், விக்கினங்கள் தீர்ப்பவனாய் பிள்ளையாராய் இன்று பல உருவில் விநாயகரை வழிபாடு செய்கின்றோம் . அதனைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர ஆற்றுப்படுத்திய கவிஞர்களின் பாரதி எமது காலத்தவன். பாரதி பாடிய விநாயகர் நான்மணிமாலை பாரத சமுதாயத்தை வழிபாட்டு நெறியில் செலுத்த விரும்பிப் பாடிய பாமாலையாகும். தன் வாழ்க்கையில் களிப்புடன் இருக்க கணபதியிடம் கேட்டவரம் வருமாறு அமைகிறது.

*"மணக்குள விநாயகா வான்மறைத் தலைவா*
*தனைத்தான் ஆளுந் தன்மை நான் பெற்றிடில்*
*எல்லாப் பயன்களும் தாமே எய்தும்*
*அசையா நெஞ்சம் அருள்வாய் உயிரெல்லாம்*
*இன்புற் றிருக்க வேண்டி நின் இருதாள்*
*பணிவதே தொழிலெனக் கொண்டு*
*கணபதி தேவா! வாழ்வேன் களித்தே"*

வழிபாடு பற்றிய உறுதியான நினைப்பே வாழ்வைச் செம்மை நெறியிற் செலுத்தும் ஔவை அன்று சொன்னதை பாரதியும் உணர்ந்து பாடினான் உலகம் உள்ளவரை வழிபாடு ஒன்றே மக்கள் மனதைச் சீர் செய்யும். உள்ளத்தில் மகிழ்வைப் பரப்பும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாயு நீ தந்தை நீயே

(கலாநிதி. மனோன்மணி சண்முகதாஸ்)

குழந்தைப் பருவத்திலே பெறுகின்ற அனுபவம் மனிதனுடைய முழுமையான வாழ்வுக்கும் உறுதுணையாக இருக்கும். இன்று உலகெங்கும் சிறுவர் பற்றியே பேச்சு. "குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்திலே" என எமது முன்னோர் கூறியது இன்று பொரு ளுள்ள தொடராக விளங்குகின்றது. மனித உணர்வுகளில் மிக உன்ன தமான, வியப்பான, உறவு தாயும் சேயுமாய் நிற்கும் உறவு தான். குழந் தையைக் கருவாக வயிற்றிலே சுமந்து, பெற்றெடுத்து, தன் உதிரத்தையே பாலாக ஊட்டி வளர்க்கும் தாய் மிக உயர்ந்தவள். அவள் தான் முன்னறி தெய்வம். "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என ஔவையார் பாடிய கொன்றை வேந்தன் தாயின் பெருமையைப் பதிவு செய்துள்ளது. தாயின் அன்பான அரவணைப்பும் பரிவான வளர்ப்பும் ஒரு குழந்தையை நல்லவனாக, வல்லவனாக, அறிவுள்ளவனாக ஆக்குகின்றது. குடும்பம் என்ற கட்டமைப்பில் தாயின் பொறுப்புத் தனித்துவமானது. அதனை உணர்ந்த நம் முன்னோர் தாய்மையைத் தெய்வக் குணமாகப் போற் றினர். அவள் ஒரு வழிகாட்டியாக மனித குலத்தைச் சிறப்பாக வழிநடத்து பவளாக விளங்கியயமையால் வழிபாட்டு நடைமுறைகள் பேணப்பட்டன.

தாயின் வழிகாட்டலில் குழந்தை தன்னையும் தன்னைச் சார்ந்த உறவுகளையும் தொடர்புகளையும் ஒழுங்காக அறிந்து கொள்கின்றது. பழந்தமிழ் பாடலான புறநானுற்றில் "ஈன்று புறந்தருதல் என் தலைக் கடனே" (புறநானூறு : 312) என ஒரு தாய் சொல்கிறாள். அவள் கூற்றில் அடங்கிய பொருள் பரந்தது. குழந்தையின் வளர்ப்புப் பணியில் தாயின் பங்களிப்பு எத்தகையது என்பதை விளக்குகிறது. புறநிலைக் கற்கை நெறிக்காகக் குழந்தை வீட்டை விட்டு வெளியே செல்லும் வரை தாயின் வழிகாட்டலில் குழந்தை வளர்கிறது. அவளையே தன்னுடைய தோழமையாக நம்பிக்கைக்குரியவராக எண்ணுகிறது. பால் நினைந்தூட்டும் அவள் அன்பும் துன்பம் துடைத்து நின்று வளர்க்கும் இரக்க நினைவும் குழந்தையை அவளே தன் தேவைகளை நிறைவேற்றும் வடிவாக கண்கண்ட கடவுளாக நினைக்க வைக்கிறது. தாயுடன் வாழும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வே இன்பமானது என உறுதியாக நம்புகிறது. அவள் கற்றுத் தருபவற்றை மனதிலே ஆழமாகப் பதிவு செய்து வைக்கிறது. தாய் அறிமுகம் செய்த தந்தையை உறவாக ஏற்று வளர்கின்றது.

இத்தகைய குழந்தைகளின் உள்ளத்தில் "இறைவழிபாடு" என்ற செயற்பாட்டைப் பயிற்றுவதும் தாயின் கடனாகின்றது தனது தாயின் பணிகளை நினைந்து தன் குழந்தையை வளர்க்கும் தாய் ஒரு பண்பாட்டுச் சங்கிலியின் இறுக்கமான இணைப்பாக விளங்குகிறாள். இறைவன் பற்றிய உண்மையான உணர்வை ஒரு குழந்தை தாயிடம் முதலிலே காண்கிறது. தான் விரும்புவதை நிறைவேற்றும் தாயின் கொடை உள்ளத்தைக் குழந்தை உணரும் போது அவளை வணங்க வேண்டும் என்று மனத்தில் வரித்துக் கொள்கிறது. தாயின் வழிபாட்டு நடைமுறைகளில் தானும் முழுமனதோடு இணைந்து கொள்கின்றது. இந்த உண்மையான குழந்தையின் வாழ்வியலைப் பெரிய புராணம் கதையாகக் கூறுகிறது.

124865C

*"பிரமபுரம் வேணுபுரம் புகலிபெரு வெங்குரு நீர்ப்*
*பொருவில் திருத் தோணிபுரம் பூந்தராய் சிரபுர முன்*
*வருபுறவஞ் சண்பைநகர் வளர்காழி கொச்சை வயம்*
*பரவுதிருக் கழுமலமாம் பன்னிரண்டு திருப்பெயர்த்தால்"*

(தி.தொ.பு திருஞான :14)

மேற்காட்டிய பாடல் 12 பெயர்களால் வழங்கப் பெற்ற ஒரு ஊரைக் குறிப்பிடுகின்றது. குழந்தைப் பருவத்திலேயே வழிபாட்டு நெறியை உணர்ந்து கொண்ட ஒரு குழந்தை பிறந்த ஊரின் சிறப்பு இவ்வாறு புகழப்பட்டுள்ளது. தாய் மரபும் தந்தை மரபும் சைவநெறி வழிவந்த மையால் அவர்களின் புதல்வன் சைவக்காவலனாய் தோன்றினான். சமணம் முதலிய பரசமயங்கள் தமிழர் சயம நெறியைப் பாழ்படுத்திய வேளையில் இக்குழந்தை பிறந்தது. குழந்தையை வளர்க்கும் போது தாய் தன் முலைப்பாலுடன் இறைவன் தாள் பரவும் அன்பு நெறியையும் உணர்த்தினார். குழந்தை தாயின் வழிபாட்டு நெறியினை நாளும் பொழுதும் மனத்தில் பொதிந்து வைத்துக்கொண்டது.

ஒரு நாள் தந்தை நீராடுவதற்காகப் புறப்பட்ட போது குழந்தையும் அவருடன் செல்ல விரும்பியது. அடம்பிடித்து அழுதது. தந்தை சினந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுத்தார். தாயின் பரிந்துரையால் தந்தை குழந்தையை உடன் அழைத்துச் சென்றார். அந்தக் கணத்திலேயே தன் தாயின் அன்பு நிலையை நன்கு உணர்ந்து கொண்ட குழந்தை தந்தையுடன் சென்றது. நீராடும் தந்தை நீரில் முங்கிய போது குழந்தை பதறியது. ஏங்கி அழுதது. கண் மலர்கள் நீர்த் ததும்பக் கைமலர்களைப் பிசைந்து வண்ணமலர் செங்கனிவாய் மணி அதரம் புடை துடிப்ப வெம்பி அழுதது. தன் துயர் தீர்க்கும் தாயை நினைத்தது. ஆனால் தாயோ அதன் அருகில் இல்லை. எனவே தாய் பயிற்றிய வழிபாட்டு நெறியை நினைந்து திருத்தோணி புரத்தின் கோபுரத்தை நோக்கி அம்மே! அப்பா! என்று கூவி அழுதது. குழந்தையின் நம்பிக்கை வீண்போகவில்லை. தாய் பயிற்றிய வழிபாட்டு நெறியே என்றும் எதற்கும் உதவும் என்ற உண்மை தெளிவாயிற்று. அழும் குழந்தையின் அருகில் பொற் கிண்ணத்திலே திருமுலைப் பாலுடன் உலகிற்கெல்லாம் தாயான இறைவி தோன்றினாள். பாலைக் குழந் தைக்கு புகட்டிக் கண்ணீரைத் துடைத்தருளினாள். தந்தையைக் காணாது துன்புற்ற குழந்தை பாலூட்டிய தாயின் பரிவால் அருளால் துன்பம் தீர்ந்து அமைதியடைந்தது. புதியதொரு அறிவு பெற்ற நிலையில் தாய் பயிற்றிய வழிபாட்டு நெறியின் அற்புதத்தை எண்ணி வியந்து நின்றது. பாலூட்டிய தாய் உரு மறைந்தது. நீராடிய தந்தை குழந்தையருகே வந்தார். குழந் தையின் கோலம் கண்டு சினந்தார். "யார் உனக்குப் பால் ஊட்டினார்"? என குழந்தையின் கடைவாயில் ஒழுகும் பாலைப் பார்த்துக் கேட்டார். அவர் மனதிலே பெரும் குழப்பம். பிரமாணக் குழந்தைக்கு பாலூட்டத் துணிந் தவர் யாராக இருக்கலாம் என எண்ணினார். ஆனால் குழந்தையோ குழப்பமடையவில்லை. தனக்குப் பாலூட்டியவளை யாரென பாடலால் விளக்கிக் கூறுகிறது. மூன்றே வயதான குழந்தை தன் அல்லல் தீர்த்தவரை அடையாளம் சுட்டிப் பாடுகிறது. வீட்டு நிலையில் தாய் சொல்லித் தந்த வழிபாட்டுப் பயிற்சியினால் மனங்கனிந்து சொல் மாலை தொடுக்கின்றது. எச்சில் பால் தந்தாரை அடையாளம் காட்டென்று தந்தை சிறியதொரு கோலை எடுத்துக் குழந்தையை மிரட்டுகின்றார். இளம் குழந்தை பயப் படாமல் தன் விரலால் சுட்டிக் காட்டுகின்றது. விண்ணிலே விடையேறி வந்த அம்மையுடன் காட்சி தரும் அப்பனைக் காண வைக்கின்றது. நெடுந் தமிழால் அத்தெய்வீகக் காட்சியை பார்த்துப் பரவசமாகப் பாடியது. அது காட்டிய அடையாளம் வருமாறு அமைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*“தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண்மதி சூடி
காடுடைய சுடலைப் பொடிபூசி யென்னுள்ளங் கவர்கள்வன்
ஏடுடைய மலரான் முனை நாட் பணிந்தேத்த வருள் செய்த
பீடுடைய பிரமா புரமேவிய பெம்மானிவனன்றே”*

அந்தக் குழந்தையின் தெளிவான பாடல் அதன் அன்னையின் பயிற்றுந் திறனைப் பறை சாற்றியது. வழிபாட்டு நெறியில் குழந்தை ஆழமாக ஈடுபட வைத்த தாய் அதன் செந்தமிழ் பயிற்சியிலும் சிறந்த கவனம் எடுத்ததைப் பாடல் தெளிவாய்க் காட்டுகிறது. தலைமுறை தலைமுறையாக நம்பிய வழிபாட்டு நெறியும் வழிபாட்டுச் சூழலும் எந்த விதமான முரண்பாடும் இன்றிக் குழந்தை மனதில் பதியும் வண்ணம் தாயின் வளர்ப்பு நிலை இருந்தது. தான் கண்ணால் நேரிற் கண்ட காட்சியை மிகவும் துல்லியமாக மொழியால் கூறும் திறமையைக் குழந்தை பெற்றிருந்தது. தாயின் அன்பான பண்பான வீட்டு நிலையான கற்பித்தல் வழிபாடு வாழ்வியலோடு இணைந்தது என்பதை குழந்தைக்கு நன்குணர்த்தியிருந்தது. ஆனால் தந்தையோ சமூக வயப்பட்ட ஏற்றத் தாழ்வுகளை மனதில் ஆழமாக பதித்து வைத்துக் குழந்தைக்குப் பாலூட்டியவர் யாரென அறிவதிலேயே குறியாயிருந்தார். ஆனால் குழந்தையோ தாயின் வழிபாட்டுப் பயிற்சியால் பெற்ற அசையாத நம்பிக்கை உண்மையானது என்பதை உணர்ந்து கொண்டமையால் அதனைத் தெளிவாகவே தந்தைக்குக் கூறுகின்றது. மனிதரில் ஏற்றத் தாழ்வு எதுவும் இல்லை. துன்புறுவாருக்கு உதவும் தொண்டு மனம் வேண்டும் அதுவே இறைவனின் அருட்கொடை என்பதைத் தானாக உணர்ந்த போது குழந்தை “ஞானக்குழந்தையாக” மாறிவிட்டது. தன் முன்னே தோன்றியரே உலகத்து உயிரினங்கள் அனைத்துக்கும் தாயும் தந்தையுமாவார் என உணர்த்துகிறது. சிவனை வழிபடும் சைவ சமயத்தவரின் அறியாமையைப் போக்கும் அறநெறிப் பணியில் குழந்தை அன்று தொட்டுத் தன்னை இணைத்துக் கொண்டது. ஆளுடைய பிள்ளையாராக ஞான சம்பந்தராக வழிபாட்டைப் பரப்பும் புதியதொரு இயக்கத்தை தொடக்கி வைத்தது. இதற்கான அடிப்படையான தகைமைகளைக் கற்பித்த பகவதியாரின் பணி இன்றைய பெண்கள் கடைப்பிடிக்க வேண்டியதாகும். தாயுடன் அறுசுவையை உணரும் குழந்தை ஞானச்சுவையையும் நன்குணர வேண்டும். கருவிலே குழந்தையைத் தாங்கும் தாய் தன் உள்ளத்திலே வழிபாடு பற்றிய தெளிவும் உறுதியுமுடையவளாயிருக்க வேண்டும். ஞானசம்பந்தரைப் பெற்ற பகவதியின் வழிபாடு பற்றிய தெளிவும் உறுதியுமே பிறசமயப் பரம்பலைத் தடுக்கும் ஆற்றலை ஞானசம்பந்தருக்கு நல்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தை நிலையிலிருந்து இளமை நிலைக்குச் செல்லும் போது ஐம்புலன்களின் செல்வாக்கால் வழிபாடு பற்றிய உறுதிகுலையும். இதனைச் சம்பந்தர் தனது வாழ்வியலில் கண்டார். எனவே தான் அதிலிருந்து மீள இறைவனையே வேண்டுகின்றார்.

*"தாயுநீயே தந்தைநீயே சங்கரனேயடியேன்*
*ஆயுநின்பாலன்பு செய்வானாதரிக்கின்ற துள்ளம்*
*ஆயமாய காயந்தன்னுளைவர் நின்றொன்ற லொட்டார்*
*மாயமே யென்றஞ்சுகின்றேன் வலிவலமேயவனே"*

இளமைக் காலத்தில் தலங்கள் தோறும் சென்று வழிபாட்டின் சிறப்பைப் பாடல்களால் எடுத்தோதிய பணி மீண்டும் சைவம் நிலை பெற வழி செய்தது. வழிபாடு பற்றிய தெளிவு குழந்தைகளுக்கும் இளைஞர் களுக்கும் ஏற்படுவதற்குத் தாய்மைப் பண்புடைய வழிகாட்டல் இன்றியமையாதது. பெற்றோருடன் வாழும் சிறுவரும் பெற்றோரைப் பிரிந்து வாழும் சிறாரும் வழிபாட்டில் நம்பிக்கை கொள்ள பயிற்சி அளிக்கப்பட வேண்டும். எல்லோருக்கும் தாயாகவும் தந்தையாகவும் இருக்கின்ற பேராற்றலைத் துணையாகக் கொள்ளும் மனப் பக்குவம் பயிற்றப்பட வேண்டும். "மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலக மெல்லாம்" என்ற குறிக்கோள் வாசகத்தை பொறித்து வைப்பதால் பயனேதுமில்லை. தாய் தந்தை பற்றிய செம்மையான பண்பு நலன் களைக் குழந்தைகளும் இளைஞர்களும் நன்குணர ஒரு புதிய ஆற்றுப்படுத்தல் தேவை. பிறந்து மொழி பயின்று கல்விப் பயிற்சிக்காக பள்ளி செல்லும் வரை அளிக்கப்படும் தாய்மையின் வழிபாட்டுப் பயிற்சி நெறிதான் சிறந்தது. நம் முன்னோர் பெற்ற பயிற்சி இதுவே. தற்கால விஞ்ஞான தொழில் நுட்ப வளர்ச்சியில் இறைவன் பேராற்றலை எண்ணிப் பாட யாருக்கும் நாவில்லை. கூட்டுவழிபாட்டில் நாட்டமில்லை. ஓசையிலும் ஒலியிலும் நிறைந்திருக்கும் இறையாற்றலை இயற்கை நிலையிலே வீட்டிலோ அல்லது வழிபாட்டு மன்றங்களிலோ குழந்தைகளும் இளை ஞர்களும் பெறுவதற்கும் வாய்ப்பு ஏற்படுத்த வேண்டும். இன்று இப்பணியை பெண்கள் முன்னெடுக்க வேண்டும். அறநெறி மன்றங் களிலும் இந்து மன்றங்களிலும் சைவபரிபாலன சபைகளிலும் தரும பரிபாலன சபைகளிலும் பெண்களின் வழிபாட்டுப் பயிற்றுதல் பணி இணைய வேண்டும். தாய்மையின் இயற்கையான வழிகாட்டலே இன்றைய காலகட்டத்திற்கு இன்றயமையாதது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதன்

(கலாநிதி. மனோன்மணி சண்முகதாஸ்)

மனிதனுடைய நாளாந்தக் கடமைகளில் வாழிபாடு இன்றி யமையாதது. தனக்கு முன்னே வாழ்ந்தவர்களுடைய வாழ்வியலின் வழிச் செல்வதே வழிபாடாகும். அன்னையும் பிதாவும் எமது முன்னறி தெய்வங்கள். ஆலயம் தொழுவது சாலவும் நன்று என உணர்ந்தவர்கள். எனவே எமது மூதாதையர் காட்டிய செவ்நெறியை நாமும் கடைப்பிடிக்க வேண்டியது முறைமை. ஆனால் நாம் வாழும் காலமும் சூழலும் இம் முறைமை பற்றிய ஐயங்களையும் முரண்பாடுகளையும் தோன்றச் செய்துள்ளன. அவற்றைக் கண்டு தெளிவுபடுத்திக் காலத்தோடு இணைந்து வருகின்ற வழிபாட்டு நெறியை எல்லோரும் கடைப்பிடிக்க உதவ வேண்டியது கற்றோரது தலையாய பணியாகும். அப்பணியைச் செய்வதற்கு வழிபாடு பற்றிய முன்னோர்களது பட்டறிவின் பயனாகப் பதிவு செய்யப்பட்டுள்ள பாடல்கள் நன்குதவும். எனக்கு மேலே என்னை வழிநடத்தும் ஒரு பேரருள் இருப்பதை உணர்ந்தவர் பலர். தமது உணர்வைப் பாடலாக்கிச் சென்ற அவருடைய பட்டறிவு எம்மையும் வழிநடத்தும்.

வழிபாடு செய்யப்படும் வேளைக்கேற்ப “சமயம்” எனப்பட்டது. செயற்பாட்டின் தீவிரத்திற்கேற்ப “மதம்” எனப்பட்டது. அடிப்படையான “வழிபாடு” என்ற நிலை தன்னளவில் செய்யப்பட்ட போது அதன் பயனும் சுயநலமாயிற்று. ஆனால் பலர் இணைந்து கூட்டு நிலையில் கூட்டு வழிபாடாக நடந்த போது பலருக்கும் பயன்தரும் வாழ்க்கையின் செல்நெறியாயிற்று. அதன் விளக்கத்தை தெளிவுபடுத்தும் முயற்சிகள் உலகெங்கும் நடைபெற்று வருகின்றன. ஒரு குறிப்பிட்ட நாளை அல்லது நாள்களை அல்லது ஒரு திங்களை அம்முயற்சிக்கென ஒதுக்கியும் நம் முன்னோர் நமக்கு வழிகாட்டியுள்ளனர். சிறப்பாகப் புராண இதிகாசம் என்றும் தேவாரம் திவ்விய பிரபந்தம் என்றும் அருட்பாடல்கள் என்றும் அவை இன்று எமக்குக் கிடைத்துள்ளன. அவற்றுள்ளே குறிப்பிடப் பட்டுள்ள செய்திகள் இன்று மீண்டும் எடுத்துரைக்கப்பட வேண்டியவை. எமது உள்ளத்திலே ஒளியேற்றும் சுடராக அவை பேணப்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலக்கடப்பிலும் சூழல் மாற்றத்திலும் நமது உடலின் தோற்றம் மாற்றம் பெறலாம். ஆனால் உள்ளத்து உணர்வுகள் மாறக்கூடாது. உள்ளத்து உணர்வுகள் தடம்புரளாமலிருக்க வழிபாடு தான் என்றும் துணை நிற்கும். அதனால் வழிபாடு பற்றிய தெளிவான எண்ணத்தைப் பலரோடும் பகிர்ந்து கொள்வது நல்லது. நாம் அறிந்ததை உணர்ந்ததைப் பரவசப்பட்டு நின்றதை உள்ளத்திலே நிறுத்தி நினைந்து உவப்பதை எழுத்தில் வடிப்பதால் எமது அடுத்த தலைமுறைக்கு ஒரு பதிவுத்தளத்தை உருவாக்கலாம் அது இன்றைய இணையத்தளம் போல உலகை வலம் வந்து கொண்டிருக்கும். அந்த வகையில் கச்சியப்ப சுவாமிகள் எழுதிய "சிவராத்திரி புராணம் என்ற நூல் கண்ணில் பட்ட போது அது சொல்லும் செய்தி தகவல்களாக நிலைபெற்று சிவராத்திரி விழாவாகச் செயற்படுவதைப் பற்றி மீளவும் எண்ணிப் பார்க்க நேர்ந்தது. வழிபாட்டினால் நாட்டில் வளமும் வசியும் பெருகும். நோயும் பிணியும் அருகும் துன்பமும் துயரும் விலகும். இடுக்கணும் இன்னலும் ஓய்ந்து போகும் மக்கள் வாழ்வில் வரும் இடரினும் தளரினும் மீள்வதற்கு இலக்கியப் பதிவுகளும் உதவும் என்ற அசையாத நம்பிக்கை ஒன்று நிலைத்திருந்தது. அந்தப் பதிவுகளில் "சிவராத்திரி புராணம்" இன்று எம் உள்ளத்தில் ஒரு நிலையான வழிபாட்டு மரபை உணர்த்தி நிற்கின்றது.

"சிவராத்திரி" என்பது சிவனுக்கெனத் தனியாக ஒரு நாளை ஒதுக்கி வழிபாடு செய்வதாகும். நம் முன்னோர் வீடு பேறு அளிக்கும் விரதங்களில் மாசி மாதத்திலே வருகின்ற மகாசிவராத்திரியை சிறப்பானதென கருதிச் செயற்படுத்தினர். அன்றைய இரவு செய்யும் வழிபாடு கோடி பாவங்களையும் போக்கிவிடும். அதனால் சிவனின் புகழைப் பேசும் நாளாகவும் சிவராத்திரி விளங்குகின்றது. புராணத்தில் சிவனே இவ்விரதத்தின் மேன்மையைத் திருமாலுக்கு விளக்கியுள்ளார். இதை விட வேதநிதியின் கதையும் வேடன் கதையும் சிவராத்திரியின் பயனை விளக்குகின்றன. வேத நிதி ஒரு ஆலயத்தில் விளக்கு அணையாமல் எரியச் செய்தான். ஆலயங்களில் விளக்கேற்றுதலால் ஞானம் உண்டாகும் அது ஒரு புண்ணியம். எனவே சிவராத்திரி நாளில் சிவாலயங்களில் விளக்கு ஏற்றுவோர் இம்மையிலும் மறுமையிலும் இறைவனால் இன்பம் பெறுவர் என்ற நம்பிக்கை இன்று வரை நிலைத்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பத்தவருக்கு உணவளிக்கவென வேட்டை மேற் சென்ற வேடன் பகல் பொழுது முழுவதும் முயற்சி பயனின்றிக் கழிய இரவுப் பொழுதையும் அடர்ந்த கொடிய விலங்குகள் வாழும் காட்டிலேயே கழிக்க நேர்ந்தது. அன்றிரவு ஏதாவது விலங்கை வேட்டையாடலாம் என்ற எண்ணத்துடன் விழித்திருந்து முயற்சி செய்தான். அங்கு வந்த மான்களைக் கொல்ல அவன் அம்பு தொடுத்த போது அம்முயற்சி நிறைவேறவில்லை. குறி தவறி அவன் உடல் அசைவால் வில்வ இலைகள் மரத்தினடியில் வீற்றிருந்த சிவலிங்கத்தின் மேல் விழுந்தன. அந்தச் செயற்பாடு அவன் உணர்ந்து செய்யாத வழிபாடு ஆனால் குடும்பத்தவர் பசியைக்களைய வேண்டுமென்ற பரந்த உள்ளத்தோடு செய்த பொது வழிபாடு அதுவே இன்று வரை நான்கு சாம வழிபாடாக வில்வ இலைகளைச் சொரிந்து நிற்கும் வழிபாடாகியுள்ளது. இறைவன் நாமத்தை அறியாதவர் அவன் திருமேனியில் சாத்தப்பெறும் மலர்களால் அவன் கோலப் புனைவு கண்டு பரவசமடைகின்றனர். சிவனின் நாமங்களில் அவன் சூடும் மலர்கள் இணைந்த நிற்கின்றன. பூவார்சடை, கொன்றை மாலை புரளும் அகலம், மருவார் கொன்றை மதி சூடி, கடியார் கொன்றையான், கொய்யணி மலர்க்கொன்றை சூடிய ஐயன், என சிலவற்றைக் காட்டலாம்.

வழிபாட்டிற்குரிய நேரம் எது என்பதும் இன்றைய அவசர வாழ்வியலில் ஐயத்துக்கிடமாகி விட்டது. ஒரு நாளின் தொடக்கத்தை வழிபாட்டுடன் தொடங்கும் முறைமையிருந்ததை திருநாவுக்கரசரும் ஆண்டாளும் மணிவாசகரும் தமது பாடல்களால் விளக்கியுள்ளனர். 81 ஆண்டுகள் வாழ்ந்த அப்பரென அழைக்கப்பட்ட நாவுக்கரசர் வாழ்க்கையில் வழிபாட்டின் செவ்நெறி பற்றிய ஐயம் ஏற்பட்டதால் பிறசமயம் சார்ந்தார். தமது முன்னோரது சிவவழிபாட்டால் துன்பங்கள் அகன்று இன்பமாய் வாழமுடியாது என்று நினைந்து சமண சமயத்தை ஏற்றார். ஆனால் அச்சமயம் தழுவிய போது அவருக்கேற்பட்ட சூலை நோயைச் சமணர்களால் மாற்றமுடியவில்லை. எனவே மீண்டும் தமது முன்னோருடைய வழிபாட்டு நெறியில் இணைந்து கொண்டார். நிலையான வழிபாட்டு நடைமுறை எது என்பதை உயர்ந்த அவர் நெஞ்சத்தை அழைத்துக் கூறும் செய்தி எல்லோருக்கும் ஏற்றாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*“நிலைபெறுமாறு எண்ணுதியேல் நெஞ்சே நீவா*
*நித்தலும் எம் பிரானுடைய கோயில் புக்குப்*
*புலர்வதன் முன் அலகிட்டு மெழுக்குமிட்டுப்*
*பூமாலை புனைந்தேத்தி புகழ்ந்து பாடித்*
*தலையினாற் கும்பிட்டுக் கூத்துமாடிச்*
*சங்கரா சயபோற்றி போற்றி என்றும்*
*அலைபுனல்சேர் செஞ்சடையெம் ஆதியென்றும்*
*ஆரூரா என்றென்றே அலறா நில்லே”*

எமது வாழ்க்கையில் நிலைபெற வேண்டுமாயின் எமக்கொரு வழிபாட்டுப் பயிற்சியே இன்றியமையாதது. கோயிலில் அத்தகைய பயிற்சியை தொடர்ந்து செய்ய முடியும். தனியாளாக இன்றிக் கூட்டாக இணைந்தும் செய்யும் வாய்ப்பு உண்டு விடிகாலை வேளையில் எழுந்து கோயிலுக்குச் சென்று சூழலை தூய்மை செய்யும் பணியை முதன்மை செயற்பாடாகச் செய்வது அப்பர் உள்ளத்தை நிறைவித்தது. மனித வாழ்வின் துன்பச் சுமையைக் குறைக்கும் அருமருந்தாக அமைந்தது. தன் நெஞ்சை வழிப்படுத்தி நல்வாழ்க்கை வாழ முடிந்தது. மணிவாசகரும் ஆண்டாளும் கூட இவ்விடிகாலை வழிபாட்டைப் பற்றி முறையே திருவெம்பாவை, திருப்பாவை எனும் பதிகங்களில் தகவல் தெரிவித்துள்ளனர் கூட்டு வழிபாட்டில் பெண்கள் இணைய ஆண்டாள் முன்னோடியாகச் செயற்பட்டாள். வீட்டுப் பணிகளுக்கும் குடும்பச் செயற்பாடுகளும் இடையூறு நேரா வண்ணம் ஆண்டாள் இளம் பெண்களை வழிநடத்தியதை திருப்பாவைப் பாடல்கள் மூலமாக இன்று அறிய முடிகின்றது. ஆண்டாளின் வழிகாட்டல் மணிவாசகரையும் ஈர்த்தது. பெண்களின் கூட்டு வழிபாடு பின்னைய தலைமுறையை வழி நடத்தும் என்ற உறுதிப்பாடு மணிவாசகர் உள்ளத்திலும் இருந்ததை திரு வெம்பாவைப் பாடல்கள் நன்கு உணர்த்துகின்றன. இத்தகைய விடிகாலை வழிபாட்டு நடைமுறை இன்றைய அவசர வாழ்வியலில் செயற்படுத்த முடியாத பயிற்சியாகக் கருதப்படுகின்றது. இயற்கையோடு இணையாத வாழ்வியலும் தொழில் நிலையும் கல்விச் செயற்பாடுகளும் இதனுடன் முரண்பட்டு நிற்பதால் பல ஐயங்களும் தோன்றியுள்ளன. இன்றைய நாளாந்தக் கடமைகளில் விடிகாலையில் வழிபாடு செய்யக் கோயிலுக்குப் போவது கடினமாக உள்ளது. இந்நிலையில் நாளாந்தக் கடமைகளைச் செய்வதே வழிபாட்டுக்கு நிகரான செயற்பாடு என்ற நிலைப்பாடும் தோன்றி விட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே முன்னோரின் முயற்சிகள் இன்றைய எம்முடைய தொழில்நுட்ப வாழ்வியலுக்கு பொருத்தமற்றவை என எண்ணிப்பார்க்கும் காலகட்டத்தில் நாம் நிற்கிறோம். "காலந்தான் எம்மை வழி நடத்துகின்றது" "காலத்தோடு நாம் சேர்ந்து செல்ல வேண்டும்" என்ற எண்ணங்களையும் எம் முன்னோர் கொண்டிருந்ததைச் "சிவராத்திரி வழிபாட்டு நடைமுறை" மிகத் தெளிவாகவே விளக்கி நிற்கின்றது. ஒரு நாளின் இரு பகுதிகளை இரவு பகல் எனப் பகுத்துத் தொழிற்பட்ட இயல்பான வாழ்வியல் எல்லோருக்கும் பொதுவானது. உலக மக்கள் அனைவரும் இதை ஏற்றுள்ளனர். இயற்கைக்கோள்களின் செயற் பாட்டால் இரவையும் பகலையும் கண்டு தமது செயற்பாடுகளையும் அதற்கியையத் திட்டமிட்டனர். இயற்கையின் பேராற்றலைக் கண்டு பணிந்து வாழ்ந்தனர். வழிபாட்டில் இயற்கைச் சக்திகளையும் இணைத்தனர் பருவமாற்றங்களை வழிபாட்டிற்குரிய காலத்தின் கணிப்பாகக் கொண்டு செயற்பட்டனர். பகலையும் இரவையும் இறைவன் தோற்றமாகக் காணும் வழிபாட்டு மரபு ஒன்றிருந்ததை திருஞான சம்பந்தரின் பாடலொன்று இன்றும் விளக்கி நிற்கின்றது.

*"இரவொடு பகலதாம் எம்மானுன்னைப்*
*பரவுதல் ஒழிகிலேன் வழியடியேன்*
*குரவிரி நறுங்கொன்றை கொண்டணிந்த*
*அரவிரி சடைமுடி யாண்டகையே*
*அன்ன மென்னடை யாளொடும்*
*அதிர் கடல் இலங்கை மன்னை*
*இனமார்தரு தோள் அடர்த்திருந்தனை புகலியுளே"*

இப்பாடலில் சம்பந்தர் தன்னை "வழியடியேன்" எனக்குறிப் பிடுகின்றார். தனக்கு முன்னரே வாழ்ந்த தலைமுறைகளின் வழிபாட்டு நெறியிலேயே தானும் செயற்படுவதைத் தெளிவாக உணர்த்தியுள்ளார். இரவும் பகலும் இறைவனை வழிபாடு செய்யும் ஒரு பண்பட்ட வாழ்வியல் அவர் காலத்தில் இருந்தது. அவர் வாழ்ந்த சூழல் வழிபாடு பற்றிய தெளிவான கருத்தை சிறுவயதிலேயே அவரது உள்ளத்தில் உருவாக்கியிருந்தது. அதனால் வழிபாட்டின் பயன் பற்றி அழகு தமிழிலும் இசைத் தமிழிலும் பல தேவாரப்பாடல்களைப் பாடமுடிந்தது. 3 வயதி லிருந்து 16 வயதுவரை வழிபாடு செய்து நல்ல பேறைப் பெற்ற சம்பந்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய சிறாரின் வழிபாட்டுப் பயிற்சிக்கு உகந்த ஆசிரியர் என்றால் மிகையாகாது. "பரவுதல் ஒழிகிலேன்" என்ற அவருடைய கூற்று தொடர்ந்து செய்த வழிபாடு பற்றி விளக்குகிறது. வழிபாட்டு நடைமுறைகளில் சில முறைமைகள் இருந்ததையும் அது உணர்த்துகிறது. இறைவனுக்குரிய தோற்றம் கண்டும் வழிபடல் ஒரு முறை இன்னொன்று இறைவனுடைய அருட் செயல்கள் பற்றி முன்னோரிடம் பெற்ற தகவல்களை எண்ணி வியந்து வழிபாடு செய்வது. தம் பெற்றோரிடம் பெற்ற வழிபாட்டுப் பயிற்சியின் மூலமும் இறைவன் பற்றி தகவல்கள் அவருக்குக் கிடைத்தன. அதை விடத் திருக்கோயில் வழிபாடு அவருக்கு இன்னொரு சிறந்த பயிற்சிக் கூடமாக விளங்கியது. கோயிலின் கோபுரத்தை வணங்குவதே ஒரு வழிபாடு. தூரத்தில் நின்றும் இறைவனை மனதிலே நினைவுபடுத்த வானுயர்ந்த கோயிற் கோபுரங்கள் வழிகாட்டின. வெறும் கட்டடமாக அன்றி இறைவன் வீற்றிருந்து எம்மை வழிப்படுத்தும் பண்பாட்டு நிலையத்தின் திசைகாட்டியாகக் கோபுரம் விளங்குகின்றது. இரவிலும் இறைவன் உறையும் இடத்தைக் காண்பதற்கு உதவுகிறது.

இரவு வேளையில் இறைவழிபாடு செய்வதற்கு எல்லோருக்கும் வழிகாட்டுவதே சிவராத்திரியாகும். முழு இரவும் விழித்திருந்து வழிபாடு செய்ய ஓராண்டில் ஒரு நாள் ஒதுக்கப்பட்டிருப்பது தனிச்சிறப்பாகும். அந்நாளில் செய்யும் வழிபாட்டில் உள்ளம் ஒருமித்து நிற்கும். பகல் வேளையில் ஏனைய கடமைகளுக்கு நடுவே உள்ளத்தை அலைய விடாது ஒரு நிலைப்படுத்துவது பலருக்கும் கடினமானது. தொழில் நிலையும் அதற்கான சீருடைகளும் கருவிக்கையாட்சியும் கோயிலுள் சென்று வழிபாடு செய்வதற்குத் தடையாகக் கூட அமையலாம். அத்தகைய சிக்கல் நிறைந்த வேளைகளில் வழிபாடு தேவையற்றது என்ற எண்ணம் கூட ஏற்படலாம். வழிபாட்டுச் செயற்பாடுகள் கருத் தற்றவையாகக் கூடத் தென்படலாம் இந்த வாழ்வியல் பயன்பெற மாற்றியமைக்கப்பட வேண்டியது என்பதை அன்றே எம்முன்னோர் நன்குணர்ந்து செயற்பட்டதை இன்றைய "சிவராத்திரி வழிபாடு" சான்று காட்டி நிற்கிறது.

"இறைவன் நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதன்" எனச் சிவபுராணம் பாடிய மாணிக்கவாசகர் குறிப்பிடுகின்றார். தில்லையிலே கூத்தாடும் சிவன் நடனம் நள்ளிருளில் நடைபெறுகிறது. அந்தத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருநடனத் தோற்றத்தை எல்லாக் கோவில்களிலும் காணும் வகையில் சித்திரங்களும் சிற்பங்களும் அமைக்கப்பட்டுள்ளன. அந்த அழகிய நடனக் காட்சியைக் கண்டு மகிழ இரவில் வழிபாடு செய்வதற்குக் கோவிலுக்குப் போவதையும் சம்பந்தர் பாடல் பண்ணமைந்த தமிழில் பக்குவமாய் பதிவு செய்துள்ளது.

*"இரவிடை ஒள்ளெரியாடினானும் இமையோர் தொழச்*
*செருவிடைமுப்புரந்தீ எரித்த சிவலோகனும்*
*பொருவிடை ஒன்று உகந்தேறினானும் புகலிநகர்*
*அரவிடை மாதொடும் வீற்றிருந்த அழகனன்றே"*

இறைவனுடைய தோற்றத்தில் நடனமாடம் தோற்றமே மிக அழகான தோற்றமாகும். இரவில் கையில் ஒளிரும் எரியேந்தி ஆடும் அற்புத நடனம் அனைவரையுமே கவரக்கூடியது. விண்ணவர்கள் இறைவனைத் தொழும் காட்சியை இன்னொரு சொற் சித்திரமாகச் சம்பந்தர் பாடியுள்ளார். முப்புரங்களையும் தீயால் எரித்த அந்தப் போர்க்காட்சி இன்னொரு சொற் சித்திரமாக வடிக்கப்பட்டுள்ளது. வெள்ளையேற்றில் விரும்பி ஏறிவரும் சிவனின் தோற்றத்தையும் அடுத்துக் காட்டுகிறார். எல்லாவற்றிற்கும் மேலாக பாம்பணிந்து அருகே உமையாளொடு வீற்றிருக்கும் அழகுக் கோலத்தை சம்பந்தர் வரைந்து காட்டியிருப்பது சிறப்பானது. இறைவனை அம்மை அப்பனாக உணர்ந்து வழிபாடு செய்த சம்பந்தர் உள்ளத்தில் இருவரும் இணைந்திருக்கும் காட்சியே பதிந்து கிடக்கிறது. அவருடைய மூன்று வயதிலே பெற்ற அனுபவம் இளமை நிலையிலும் இன்பம் தந்தது. புகலியூர் கோவில் அழகினையும் இறைவனுடைய திருவருள் நிலைகளையும் பாடலில் பாடிய சம்பந்தர் ஒரு வரலாற்றுக் கடமையை நிறைவு செய்துள்ளார். இன்று சிவராத்திரி நாளிலே கோயிலுக்கு வழிபாடு செய்யச் செல்லும் சிறுவர்களும் இளைஞர்களும் சம்பந்தரின் வழிபாட்டு நெறியை உணர வேண்டும். கோயில்களில் உள்ள சிற்பங்களும் சித்திரங்களும் நம் முன்னோரின் கற்கை நெறிகள் என்பதைத் தெளிவாக விளங்கிக் கொள்ள வேண்டும்.

எனவே சிவராத்திரி வழிபாடு பலருடைய பயன்பாட்டிற்குமாக கோயில்களும் நடைபெறும் செயற்பாடு என்பதை நாம் நன்குணர்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்படவேண்டியுள்ளது. இதற்கெனக் காலங்காலமாக இருந்த செயற்பாடுகளை தெளிவாக விளங்கிச் செயற்பட வேண்டியுள்ளது. கோவிலில் இரவு முழுவதும் தங்கியிருந்து வழிபாடு செய்யும் நாள் என்பதால் அதற்குரிய வகையில் வழிபாட்டு நடைமுறைகள் முன்னோரால் வகுக்கப்பட்டுள்ளது. ஓரிரவை நான்கு பகுதிகளாகப் பகுத்து வழிபாடு செய்தனர். கச்சியப்பரின் சிவராத்திரி புராணம் அவ்வழிபாட்டு நடைமுறைகளை வருமாறு விளக்கியுள்ளது.

"நான்கு சாமங்களிலும் தன்மனத்தில் உள்ள வேண்டுதல் களையும் சேர்த்து அத்தியாதிப் பிரயோக மாகிய சங்கற்பம் செய்து ஸ்தாபித லிங்கத்தையும் பார்த்திவ லிங்கத்தையும் பக்தியோடு பூசிக்கவேண்டும். பால், தயிர், நெய், தேன் சர்க்கரை முதலியவற்றால் அவற்றிற்குரிய மந்திரங்களைக் கூறி அபிஷேகம் செய்ய வேண்டும். பின்பு உலர்ந்த துணியால் சிவலிங்க மூர்த்தியை உபசாரமாக ஒற்றி சுகந்த பரிமள சந்தனம் சாற்றி முதல் சாமத்தில் அரிசி கூஷசுதையும் இரண்டாவது சாமத்தில் றவை அட்சதையும் மூன்றாவது சாமத்தில் கோதுமை அட்சதையும் நான்காவது சாமத்தில் அரிசி, உழுந்து, பயறு, தினை, அல்லது ஏழு விதமான அட்சதையையும் சமர்ப்பிக்க வேண்டும் மலர்கள் முதல் சாமத்தில் சதபத்திரம் கரவீரம் முதலியனவும் இரண்டாம் சாமத்தில் தாமரை மலரும், வில்வமும் மூன்றாவது சாமத்தில் அறுகும் ஆத்தியும் நான்காம் சாமத்தில் நறுமணம் கமழும் மலர்களால் சிவ நாமங்களால் அல்லது குரு தந்த மந்திரத்தால் அர்ச்சிக்க வேண்டும். நிவேதனம் முதல் சாமத்தில் சுத்தா அன்னம் கறிவகைகள் பல காரங்களும் இரண்டாம் சாமத்தில் பரமா அன்னம் லட்டு முதலியனவும் பலகாரமும் மூன்றாம் சாமத்தில் மாவாற் செய்த நெய் சேர்த்த பலகார வகையும் பாயாசமும் நான்காம் சாமத்தில் கோதுமை சர்க்கரை நெய்சேர்த்துச் செய்த மதுரமான பலகாரங்களையும் பழங்களையும் சேர்க்க வேண்டும் முதல் சாமத்தில் வில்வம் பழத்தையும் இரண்டாம் சாமத்தில் பலாப்பழத்தையும் மூன்றாம் சாமத்தில் மாதுளம் பழத்தையும் நான்காம் சாமத்தில் பல வகையான பழங்களையும் சமர்ப்பித்து தாம்பூல தட்சணைகளோடு சாமங்கள் நான்கிலும் பிராமணர்களுக்குப் போசனம் முதலியன செய்விக்கவேண்டும்". (தகவல் : புலவர் ஸ்ரீ விசுவாம்பா விசாலாட்சி மாதாஜி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற் கூறப்பட்ட வகையில் கோயில்களிலே சிவராத்திரி வழிபாடு இன்றும் நடைபெறுகிறது. இளந்தலைமுறையினரும் இந் நடைமுறைகளில் பங்கேற்கும் போது முன்னோரது வழிபாட்டின் முறைமையில் மாற்றங்களும் ஏற்பட்டுள்ளன. ஓர் இரவு முழுவதும் இறைவனையே நினைந்து சில கிரியைகளைச் செய்ய வேண்டும் என்ற ஒரு வரையறையை முன்னோர் வகுத்திருந்தனர். இரவின் இருள்களையக் கோயில்களிலே விளக்கேற்றல் எல்லோராலும் செய்யப்பட்டது. நல்லிரவில் நடனம் செய்யும் இறைவன் கோலத்தைக்காண ஒளிகாலும் விளக்குகள் ஏற்றப்பட்டன. இறைவனுக்கு மடையிடும் பொருட்களிலும் காலத்தின் விளைபொருட்களுக்கு ஏற்ப மாற்றங்கள் தோன்றின. முழு இரவும் விழித்திருக்க இசை, நடனம், உரை, போன்ற நிகழ்ச்சிகளும் புகுத்தப்பட்டன. இவை வாழும் சூழலுக்கு ஏற்ப வந்து இணைந்தவையே. ஆனால் அவற்றில் வரம்பு மீறல்கள் தோன்றிய போது தான் சிவராத்திரி வழிபாடு பற்றிய விமர்சனக் கருத்துகளும் தோன்றின. வீட்டில் இருந்து சிவராத்திரி அன்று விழித்திருந்து வழிபடலாம் என்ற கருத்து இன்று பலமடைந்து வருகிறது. ஆனால் இவ்வழிபாட்டின் அடிப்படையான கருத்து அதுவன்று. கூட்டுவழிபாட்டு நடைமுறை ஒன்று எம்மவரிடையே நிலை பெற்று இருந்ததையே சிவராத்திரி வழிபாடு உணர்த்தும் உண்மையான கருத்தாகும். வழிபாடு பற்றிய தெளிவு பெற்ற திருநாவுக்கரசர் அதனைத் தான் பாடிய திருத்தாண்டகத்தில் மிக நயமாகக் காட்டியுள்ளார்.

12486 SC

*"இரவும் பகலுமாய் நின்றார் தாமே*
*எப்போதும் என் நெஞ்சத்துள்ளார் தாமே*
*அரவமரையில் அசைத்தார் தாமே*
*அனலாடி அங்கை மறித்தார் தாமே*
*குரவங் கமழும் குற்றாலர் தாமே*
*கோலங்கண மேன்மேலுகப்பார் தாமே*
*பரவுமடியார்க்குப் பாங்கர் தாமே*
*பழனநகரெம் பிரானார் தாமே*

"பரவும் அடியார்களுக்கு பாங்கன்" என்ற தொடர் கூட்டு வழிபாட்டின் பயனை நன்கு உணர்த்தி நிற்கின்றது. தன்னைப் போல பிறரையும் எண்ணி வாழும்மனப்பக்குவம் கூட்டுவழிபாட்டினால் ஏற்படும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லோரும் இணைந்து வழிபாடு செய்யும் நிலையிலும் சிவராத்திரி வழிபாடு சிறப்புப் பெற்றுள்ளது. ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் நினைவாக இருக்கும் இறைவன் கோயிலில் திருவுருவாகக் காட்சி அளிப்பான் அக்காட்சியைக் காண்பவர் தத்தம் மனப்பக்குவ நிலைக்கேற்ப அதனைக் கண்டு மகிழ்வர். சிவனின் திருநடனத்தைக் கண்டு பரவசம் அடையாதவர் பக்தியுணர்வற்றவரே. நாவுக்கரசரின் பாடல் சிவனின் திருக்கோலத்தை அகக்கண்ணில் படிய வைக்கின்றது. வழிபாட்டால் உள்ளத்தில் உவகை தோன்றும் உறுநோய், சிறுபிணி யாவும் தீரும். என்ற நம்பிக்கை நாவுக்கரசருக்கு இருந்தது. தனது வாழ்க்கையில் ஏற்பட்ட அனுபவம் வழிபாட்டு நெறியை நாடவைத்தது. இறைவன் நினைவில் மட்டுமன்றிக் கோயில் திருத் தொண்டின் மூலமும் வழிபாட்டை நீண்ட காலம் தொடர முடிந்தது.

ஒருநாளில் பகலும் இரவும் என இரு பகுதிகள் இருப்பினும் இறைவனை வழிபட ஏற்றது சிவராத்திரியே. சம்பந்தரும் அப்பரும் வயதில் வேறுபட்டவர்கள். இளமையும் முதுமையுமாய் இருந்தவர்கள். எனினும் பக்தி நெறியில் ஒன்றாய் இணைந்து பணி செய்தவர்கள். இறை உணர்வினால் இணைந்தவர்கள். சிவனின் நாமம் பாடி வாழ்ந்தவர்கள். “நமசிவாய” என்ற ஐந்தெழுத்து மந்திரச் சொல்லால் சிவன் புகழ் பரப்பியவர்கள். வழிபாட்டிற்குரிய மந்திரமாக ஐந்தெழுத்தை எல்லோரும் சொல்லிப்பயன் பெறலாம். அதற்குரிய ஒரு இரவாகவும் சிவராத்திரி அமைகிறது. அந்த நாள் மாசிமாதத்தில் வரும் கிருஷ்ணபட்ச சதுர்த்தசி யாகும். அன்று நள்ளிரவு வரை மட்டும் விழித்திருந்து வழிபாடு செய்தாலே பாவங்கள் யாவும் தீருமென்பார். எனவே நாம்வழிபாடு செய்வதற்கு நேரமில்லையே என வருந்தவேண்டியதில்லை. ஓராண்டில் ஓரிரவில் விழித்திருந்து வழிபாடு செய்வதன் மூலம் எம் மனக்குறையைத் தீர்த்துக் கொள்ளலாம். அதற்கான வழிபாட்டு நடைமுறைகளைப் பற்றி அறிய வேண்டும். முன்னைய இலக்கியப் பதிவுகளை இன்றைய காலச் சூழலுக்கு ஏற்ற வகையில் தெளிவான கருத்துக்களாக வெளியிட வேண்டும்.

இன்று எமக்குக் கிடைத்திருக்கும் நூலான “சிவராத்திரி புராணம்” பற்றிப் பலரும் அறிய வேண்டும். புராணம் செய்யுள் வடிவிலே இயற்றப்பட்டதால் அதற்கு உரை விளக்கம் தேவைப்பட்டது. எனவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் அச்சுவேலியில் காசியிலிருந்து வந்து வசித்த வரதராச பண்டிதரால் இயற்றப்பட்ட சிவராத்திரி புராணத்திற்கு உடுப்பிட்டியைச் சேர்ந்த ம.குமாரசூரியபிள்ளையால் ஓர் உரை எழுதப்படடுள்ளது. வாய் மொழிக் கல்வி மரபிலிருந்து எழுத்துமொழிக்கல்வி நடைமுறையான போது செய்யுள் மரபில் இருந்து உரை நடை மரபும்தோன்றியது. அதனால் உரை நூல்களை எழுதிப் பணிபுரிந்த நமது ஈழத்தறிஞர்கள் வழிபாட்டு மரபு மறையாமல் பாதுகாத்துள்ளனர் எனலாம். சிவராத்திரி புராணத்துக்கு உரையெழுதிய ம.குமாரசூரியபிள்ளை நூலாசிரியரைத் தன்முகவுரையில் வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

*"இலங்காபுரியிலே செந்தமிழ் நாவலர் செறிந்து சூழ்இய*
*யாழ்ப்பாணத்து அச்சுவேலியில் இற்றைக்கு ஏறக்குறைய*
*இருநூறு வருடங்களுக்கு முன் ஸ்ரீ காசியம்பதியிலிருந்து வந்து*
*வசித்தவரும் பாரத்துவாசகோத்திர அரங்கநாத அந்தணாளர்க்குத்*
*தவக்குழவியாயுற்பவித்தவரும் சுன்னாகவாசியும் வரகவியும்*
*பிள்ளையார் கதை, ஏகாதசிப்புராணம் முதலிய நூல்களைப்*
*பாடியவருமாகிய வரதராசபண்டிதர் சிவராத்திரி விரதத்தின்*
*பெருமையை யாவருமறிந்துய்யும் பொருட்டு தில்லைவனத்*
*தறிஞர் சிலர் கட்டளையிட்டபடி வடநூல்களிலுள்ள*
*சிவராத்திரி மான்மியங்களைத்திரட்டி ஒரு புராணமாகப் பாடினார்"*

அவரது நூல் வழிபாட்டு நடைமுறைகளை ஆவணப்படுத் தியதுடன் மட்டுமன்றிப் பொருட்சுவையும் சொற்சுவையும் கொண்டதால் புலவரை மகிழ்வித்த நூலெனவும் சிறப்புப் பெற்றது. அக்கால்த்திலேயே நூற்சிறப்புப் பாயிரம் பாடிய ஈழத்துப் புலவர்களும் ஆசிரியரது சிறப்புக்களைப்பதிவு செய்துள்ளனர். யாழ்ப்பாணத்தைச்சேர்ந்த மயில்வாகனப்புலவ ரது பதிவு வருமாறு அமைந்துள்ளது.

*பரதராசனுய ரசல ராசன் மகள் பங்க னன்புதரு பண்புசேர்*
*விரதராசசிவ நிசியினி னீள் சரித மிகவி ளங்கிட விளம்பினான்*
*கரத ராசனையமொழியரங்கனருள்கருணைமாரிநிகர்பருணிதன்*
*வரத ராசன் மறை வாண ராசன் மிகு மதுர வாசுகவி ராசனே"*
இப்படலில் வரும் *"சிவநிசியினீள் சரிதம்"* என்ற தொடர்

சிவராத்திரியைக்குறித்து நிற்கிறது. யாழ்ப்பாணத்தைச்சேர்ந்த சின்னத்தம்பிப் புலவரின் பதிவு வருமாறு அமைந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*“மைத்தவிடப் பணிப்பணியான் வராசனமுஞ்சராசனமுமலையாக் கொண்ட
சித்தனுயர் சிவநிசிமான் மியமதனை செந்தமிழாற் றெரித்தல் செய்தா
னத்தகைய பாரத்து வாசகோத் திரனரங்க னருளு மைந்தன்
சத்தபுரி களிற்காசி நகர்வரத பண்டிதன்முத்தமிழ்வல் லோனே”*

இப்பாடலில் வரும் “சிவநிசி மான்மியம்” என்ற தொடர் கவனிக்கத்தக்கது.

இந்நூலுக்கு உரைச்சிறப்புப் பாயிரமாக இணைக்கப்பட்ட பாடல்களில் வரும் தொடர்கள் எமக்கு காலத்துக்கேற்ற வகையில் இவ்வழிபாட்டின் பெயர்கள் வழங்கப்பட்டதை உணர்த்துகின்றன. “உலகம் போற்றிடு நற்சிவராத்திரி”, “சிவநிசி வரலாறு”, “சிவனிரவின் பெருமை”, “பரமனிசிபுராணம்”, “சிவநிசியின்மேன்மை”, சிவநிசி புராணம் எனப் பல பெயர்களால் “சிவராத்திரி புராணம்” என்னும் வழங் கப்பட்டுள்ளதை 1913 ஆம் ஆண்டு பதிக்கப்பட்ட சிவராத்திரி புராணம் என்னும் நூல் மூலம் அறியக்கிடக்கின்றது. இந்நூலில் அமைந்துள்ள சிவராத்திரி மான்மியச் சுருக்கம் சிவராத்திரி விரதம் பற்றிய பல தகவல்களைத் தொகுத்துத் தந்துள்ளது.

சிவன் இரவாகிய விரதம் காலக்கணிப்பு நிலையில் உத்தமத்திலுத்தமசிவராத்திரி, உத்தமசிவராத்திரி, மத்திம சிவராத்திரி, அதமசிவராத்திரி என நால் வகைப்படும். அபிஷேகம் செய்ய வேண்டிய முறைமை பற்றியும் அர்ச்சனை விதிகள் பற்றியும் இந்நூல் விளக்கமாகக் கூறுகிறது. முதலில் அபிஷேக முறைமை வருமாறு விளக்கப்பட்டது.

முதற்சாமம் - பஞ்ச கௌவியம் (பசுவின் பால், தயிர், நெய், கோசலம், கோமயம்)
இரண்டாம் சாமம் - பஞ்சாமிர்தம் (தேன், சர்க்கரை, தயிர், பால், நெய்)
மூன்றாம்சாமம் - தேன்
நான்காம் சாமம் - கருப்பஞ்சாறு

| **சாத்தும் பொருள் :** | **மலர்கள்** | | **நிவேதனம்** |
|---|---|---|---|
| முதற்சாமம் - சந்தனம் - | வில்வம் | - தாமரை | பருப்பு அன்னம் |
| இர.சாமம் - அகில் | தாமரை | துளசி | பாயாசம் |
| மூன்.சாமம் - கர்ப்பூரம் - | சண்பகம் | - வில்வம் | எள்அன்னம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்.சாமம் - குங்குமம் - நத்தியாவர்த்தம் - நீலோற்பலம் சுத்த அன்னம்

பஞ்ச வில்வங்களான வில்வம், நொச்சி, மாவிலங்கை, முட்கிளுவை, விளா, என்பவற்றையும் சாத்துவது நன்று வேதம் ஓதி வழிபட முடியாதவர் பரமனுக்குரிய ஐந்தெழுத்தை உச்சரித்து அன்புடன் பூசை செய்யலாம். 24 ஆண்டுகள் சிவராத்திரி விரதமிருப்பதும் முன்னைய தலைமுறையினரது முறைமையாயுள்ளது.

தற்காலத்திலே கோவில்களிலே நடைபெறும் வழிபாட்டு நடைமுறைகளுக்கான விளக்கத்தைத் தேடுவோருக்குச் சிவராத்திரி புராணம் ஒரு தகவல் களஞ்சியமாக விளங்குகிறது. ஈழத்திலே சிவவழிபாடு பேணப்பட்டு வந்தமைக்கும் இந்நூல் சான்றாகவுள்ளது. மேலும் சிவராத்திரி அன்று சிவலிங்கத்தை வழிபடும் மரபும் காணப்படுகிறது. சிவனுடைய அருவ நிலையை ஊனக் கண்களால் எளிதில் காணமுடியாது. ஆனால் பல்வேறு அங்கங்களைக் கொண்ட உருவ நிலை எளிதில் விளங்கக் கூடியது. அருவமும் உருவமும் இணைந்த அருவுருவமாகிய நிலையே இலிங்கம். கருவறையிலே மூலமூர்த்தியாக விளங்கும் இலிங்க நிலையானது பல்வேறு மூர்த்தி பேதங்களின் மூல அடிப்படையாகும். அதனால் இலிங்கத்தை வழிபாடு செய்வது சிறந்ததெனக் கருதப்படுகிறது. கந்தபுராணம் இலிங்கோற்பவ மூர்த்தி ஜோதிப் பிழம்பாகத் தோன்றிய நேரமே "சிவராத்திரி" எனக் காட்டுகிறது. மாசி மாதத்தில் கிருஷ்ண சதுர்த்தசி திதியின் அர்த்த ராத்திரியே இலிங்கோற்ப காலம் என்பர். நள்ளிரவில் இறைவன் நடனமாடும் தோற்றத்தை மணிவாசகர் பாடினார். சிவராத்திரி புராணம் இலிங்க வழிபாட்டு நிலையை நன்கு விளங்கிச் சிவராத்திரி வழிபாடு பற்றிய தகவல்களையும் தருகின்றது. அவற்றைப் பற்றிய தெளிவை அனைவரும் பெற வேண்டுமானால் கோவில்களில் "சிவராத்திரி வழிபாடு" ஆண்டு தோறும் கூட்டு நிலையில் நடைபெற வேண்டும்.

*வாழி மாதவர் வாழி மனுநெறி*
*வாழி மாநிலம் வாழிநல் வானினம்*
*வாழி நான்மறை வாழி மழை முகில்*
*வாழி வைதிக சைவ வழக்கமே.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனைத்திலும் மேவியிருப்பவளே!

(கலாநிதி. மனோன்மணி சண்முகதாஸ்)

மனித வாழ்க்கையில் எதிர் கொள்ளும் துன்பங்களை எப்படி வெல்வது? இதுவே இன்று எல்லோருடைய உள்ளத்திலும் உறைந்திருக்கும் கேள்வியாகும். உணவு, உடை, உறையுள் என்னும் இன்றியமையாத தேவைகளைக் கூட நிறைவு செய்ய முடியாத நிலையில் பலருளர். இவர்களுடைய துன்பத்தை எப்படித் தீர்ப்பது. அன்றாடம் செய்யும் முயற்சியால் ஈட்டும் பொருள்வளம் போதாமையால் ஏழ்மையில் நலிவோரைப் பற்றி உலக நாடுகள் ஒன்று கூடி ஆய்வு செய்கின்றன. உணவைத் தேடி அலையும் சிறார்களைப் பாதுகாக்கப் பெருமுயற்சியில் ஈடுபட்டுள்ளனர். ஏறக்குறைய ஒரு நூற்றாண்டு காலமாக இது நடைபெற்று வருகின்றது. இயற்கையின் சீற்றத்தால் இன்னல்களை அனுபவிக்கும் மக்களுக்கு ஏற்ற உதவிகளைச் செய்யப் பல செயற்றிட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. ஆனால் இன்னமும் இந்த அவலநிலை மாறவில்லை.

இந்நிலையில் துன்புறும் மக்களைப் பற்றி எண்ணிப் பார்த்து நாமும் செயற்பட வேண்டியுள்ளது. ஏற்றதொரு வழியை அறிந்து எல்லோருக்கும் அதை எடுத்துக் கூறி மகிழ்வான சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டியுள்ளது. மனித முயற்சியை விட மேலான ஒரு ஆற்றலிடம் சென்று அதைப் பணிந்தால் இத்தேவைகளை நிறைவேற்றலாம். என்ற நம்பிக்கை முற்காலத்தில் இருந்தது. மனித நிலையில் பட்ட வேதனைகளையெல்லாம் தெய்வத்திடம் எடுத்துச் சொன்னால் நன்மை கிடைக்கும் என்ற அசையாத நம்பிக்கை கொண்ட பாவலர் பலர் இருந்துள்ளனர். அவர்களுள் மக்கள் கவிஞர் பாரதி குறிப்பிடத்தக்கவன்.

பாரதியின் பிறப்புச் சூழலும் வளர்ப்புச் சூழலும் வழிபாட்டில் நம்பிக்கையுடைய சூழலாக இருந்தமையால் பாரதியில் உள்ளத்திலும் வழிபாட்டால் எல்லாவற்றையும் பெறலாம் என்ற அசையாத நம்பிக்கை நன்கு வேரூன்றியிருந்தது. எனவே தன் கவிதையில் அந்த அனுபவத்தைப் பொறித்து வைத்துள்ளான். மொழிப்பற்றும் நாட்டுப் பற்றும் கொண்டிருந்த பாரதி வழிபாட்டால் எதையும் சாதிக்கலாம் எனச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாற்றியுள்ளான். சக்தியை வழிபடும் முறைமையைப் பாடிவைத்துள்ளான். மனித நிலையிலே நாம் படும் துன்பங்களையெல்லாம் சக்தியிடம் விண்ணப்பம் செய்ய வேண்டும் என்பதே பாரதியின் முடிவான கருத்தாகும். தன் வாழ்க்கையில் மகிழ்ச்சிக்குத் தடையாக இருப்பவற்றை அகற்ற வேண்டுமென சக்தியிடம் விண்ணப்பிக்கின்றான். "மகாசக்திக்கு விண்ணப்பம்" என்ற பாடலில் பாரதி விண்ணப்பிக்கும் விடயங்கள் எல்லோருக்கும் பொதுவானவை.

மனிதனுடைய துன்ப நிலைகளை அப்பாடலில் பாரதி விளக்கிக் கூறுவது சிறப்பாயுள்ளது. ஒரு படிமுறை வளர்ச்சியில் தனது உணர்வுகளை வெளிப்படுத்தி அதனைச் செம்மை செய்யுமாறு வேண்டுகின்றான் அவன் உணர்வு நிலையை வரிசைபடுத்தும் பாங்கு சிறப்பாயுள்ளது. மனித உள்ளத்தைத் தீய நெறிவயப்படுத்தும் உணர்வு மோகமாகும். மோகவயப்பட்டவர் தன்னிலை மறந்து செயலாற்றுவர். மோகம் என்பது ஒரு மயக்க உணர்வாகும். காமவயப்பட்ட போது இந் நிலையேற்படும். இளமைக் காலத்தில் மட்டுமன்றி முதுமையிலும் கூட மோகவயப்பட்டு நிற்பவருளர். பாரதியின் சிந்தனையில் மனிதன் அனுபவிக்கும் துன்பங்கள் யாவற்றிற்கும் இம்மோகமே காரணம் எனத் தோற்றியுள்ளது அதனால் கவிதையில் அதை முன்னிறுத்தி பாடியுள்ளார். மகாசக்திக்கு விண்ணப்பம் என்னும் கவிதையின் முதல் பகுதியில் இதனைக் கூறும் பாங்கு சிந்தனைக் குரியது.

*"மோகத்தைக் கொன்றுவிடு - அல்லாலென்றன்*
*மூச்சை நிறுத்திவிடு*
*தேகத்தை சாய்த்துவிடு - அல்லாலதில்*
*சிந்தனை மாய்த்து விடு*
*யோகத் திருத்திவிடு - அல்லாலென்றன்*
*ஊனைச் சிதைத்துவிடு*
*ஏகத்திருந்துலகம் - இங்குள்ளன*
*யாவையும் செய்பவளே!*

பாரதி தனது இளமைக் கால துன்பியல் உணர்வைக் கவிதையிலே சொற்களில் வடித்துள்ளான். மோகவயப்பட்டதால் ஏற்பட்ட துன்பத்தால் உயிரை விட்டாலும் பரவாயில்லை என்ற நிலைக்கு வருகிறான். உடலால் ஏற்படும் துன்பத்தை வெல்ல "மோகம்" பற்றிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தனையை ஒழிக்க வேண்டும். யோகநிலையில் வாழ வேண்டும். அல்லது ஊனால் இயன்ற உடம்பைச் சிதைத்து விட வேண்டும். பாரதியின் உள்ளத்தில் உடலால் ஏற்பட்ட துன்பத்தைத் துடைத் தெறிவதற்கு வழிபாடு தான் சிறந்த வழி எனத் தோன்றுகிறது. உலகத்துள்ளயாவற்றையும் இயக்குகின்ற சக்தியிடம் விண்ணப்பித்து துன்பந் தீர்ந்து வாழலாம் என்ற நம்பிக்கை பாரதிக்கு இருந்துள்ளது. மூச்சை நிறுத்துவதும் தேகத்தைச் சாய்ப்பதும் மனிதனால் திட்டமிட்டுச் செய்ய முடியாதவை. யோக நிலையில் உள்ளம் ஒருமைப்பட்டு நின்றால் துன்பந் தீரும் என்ற நம்பிக்கையைப் பாரதி தன் முன்னோர்களிடம் பெற்றுக் கொண்டான்.

பாரதியின் உள்ளத்தில் உடல் தேவைகளால் மட்டுமன்றி வேறு வழிகளால் ஏற்படும் துன்பங்கள் மனிதனால் வெல்லக் கூடியவை என்ற உணர்வு இருந்துள்ளது. பிற தொடர்புகளால் ஏற்படும் துன்பங்களையும் நினைத்துப் பார்க்கிறான். மனித வாழ்க்கையில் சுமைகளால் ஏற்படும் துன்பம் பற்றியும் கவிதை பாடியுள்ளான். நல்லவர்களையும் கெட்டவர்களையும் அறிந்து கொள்ளப் பக்தி நெறியும் உதவும். புற நிலைத் துன்பத்தை விடுத்து அகநிலை வயப்பட்ட துன்பங்களையும் பகுத்துக் காட்டுகிறான்.

*"பந்தத்தை நீக்கிவிடு - அல்லாலுயிர்ப்*
*பாரத்தைப் போக்கிவிடு*
*சிந்தை தெளிவாக்கு - அல்லாலிதைச்*
*செத்த உடலாக்கு*
*இந்தப் பதர்களையே - நெல்லாமென*
*எண்ணியிருப்பேனோ*
*எந்தப் பொருளிலுமே - உள்ளே நின்று*
*இயங்கியிருப்பவனே!"*

மனிதனுடைய துன்பங்களுக்கு அவனுடைய பந்தங்களும் காரணமாகும். தனி மனிதன் ஒருவன் திருமணம் என்ற பந்தத்தினால் குழந்தைகளைப் பெற்றுத் தேவைகள் பெருகத்துன்புறுகிறான். இது பாரதியின் வாழ்விலும் நடந்துள்ளது. பந்தத்தை அடையாமல் சிந்தை தெளிவாக இருந்தால் துன்புறவேண்டியதில்லை. ஆனால் பந்தம் ஏற்பட்டால் துன்பத்தைச் சந்திக்க நேரிடும். அதனால் உடலை செத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Prof. V. SIVASAMY
UNIVERSITY OF JAFFNA

உடலாக்கும் படி பாரதி பராசக்திக்கு விண்ணப்பிக்கின்றான். ஆனால் அவன் தன்னுடைய அறிவு நிலையால் துன்பத்தை வெல்ல எண்ணுகின்றான். துன்பத்தைத் தரும் விடயங்களை இனங்கண்டு அவற்றைத் தீர்க்க முயல்கிறான். பதர்களை நான் நெல் என எண்ணி வாழமாட்டேன் எனத் தெளிவுடன் கூறுகிறான். இத்தகைய தெளிவை பாரதி பெற்றமைக்கு காரணம் அவனுடைய வழிபாட்டுச் சிந்தனையே.

தெய்வம் பற்றிய பாரதியின் தெளிவான கருத்தை "எந்தப் பொருளிலுமே இயங்கியிருப்பவளே" என்ற அடி காட்டுகிறது. கற்ற கல்வியும் தாய் தந்தை அளித்த வழிபாட்டுப் பயிற்சியும் பாரதியின் சிந்தனையில் நல்ல தெளிவை ஊட்டியிருந்தன. அதனால் சக்தியின் முழுமையான வியாபகத்தையும் உளமார உணர்ந்திருந்தான். எல்லாவற்றிலும் சக்தி நிறைந்திருப்பவள். அனைத்துப் பொருளின் இயக்கமாகவும் உள்ளவள். ஆனால் பாரதியின் விண்ணப்பம் இன்னொரு உண்மையையும் கூறுகிறது. எத்துணைத் தெளிவு பெற்ற உள்ளமானாலும் அடுக்கடுக்காகத் துன்பங்களை எதிர் கொள்ளும் போது சோர்ந்து விடும். அவ்வேளையில் வழிபாடு தான் மனிதனின் சோர்வைப் போக்கி மீண்டும் வாழ வைக்கும்.

பக்தியோடு தெய்வத்தை வழிபாடு செய்து முழுமையாகத் தன்னை அர்ப்பணிக்கும் தன்மை வேண்டும். மனம் உருகி தெய்வத்திடம் வேண்டுதல் செய்யும் வேளை தான் பக்தியின் பரவச நிலையாகும். "அழுதால் உன்னைப் பெறலாமே" என மணிவாசகர் பாடியது பாரதியின் நினைவில் நிறைந்திருந்தது. மனிதன் தன் செயற்பாடுகளால் தனக்கு ஏற்படும் துன்பங்களை நீக்க முடியாத நிலைகள் ஏற்படும் போது வழிபாடு செய்வதைத் தவிர வேறு வழியில்லை. என்பதைப் பாரதி தனது அனுபவமாக எடுத்துப் பாடியுள்ளார். அதனால் அவனின் வேண்டுகோள் அனைவர் உள்ளத்தையும் தொடும் அனுபவமாகி விடுகிறது.

*"உள்ளம் குளிராதோ - பொய்யாணவ*
*ஊனம் ஒளியாதோ*
*கள்ளம் உருகாதோ - அம்மா பக்திக்*
*கண்ணீர் பெருகாதோ*
*வெள்ளக் கருணையிலே - இந்நாய் சிறு*
*வேட்கை தவிராதோ*
*விள்ளற் கரியவளே - அனைத்திலும்*
*மேவியிருப்பவளே!"*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துன்பஞ் சூழும் வேளையில் ஆற்றுவதற்கு யாரும் இல்லாத நிலையில் பாரதியின் கவிதை ஒரு வழிகாட்டுதல் செய்கின்றது. சக்தியிடம் துன்பத்தைச் சொல்லியழுவதால் பயன்கிடைக்கும். ஆணவத்தால் நமக்கு ஏற்படும் துன்பங்களை ஊனம் ஒழிவது போல அது ஒழியும் போது தான் விலக்க முடியும். உள்ளத்தில் எதையும் ஒழித்து வைக்காமல் கள்ளமின்றி வழிபாடு செய்தால் கண்ணீர் பெருகும். கவலைப்படும் போது எமக்கு எமது கையைப் பற்றிப் பரிவுடன் யாராவது ஆறுதல் சொல்லித் தேற்ற மாட்டார்களா என ஓர் ஆதங்கம் தோன்றுவது இயல்பு. பிறருடைய தொடுகையை எதிர்பார்க்கையில் அது கிடையாது போனால் உள்ளம் உடைய கண்ணீர் பெருகும். மனித வாழ்வில் இத்தகைய வேளைகளை நாம் எதிர்கொள்ளும் போது இறை சிந்தனையை இறுக்கப் பற்றிக் கொள்வதே சிறந்தது. நமது கண்ணீரைப் பக்திக் கண்ணீராக மாற்ற வேண்டும் பாரதி சக்தி வழிபாட்டில் தனது துன்பங்களைக்களையப் பழகியவன். தெய்வத்தின் அருள் வெள்ளத்தில் பக்திக் கண்ணீரைச் சொரியும் போது உள்ளத்தில் படிந்திருக்கும் வேட்கை தவிரும். உலகெங்கும் நிறைந்திருக்கும் பேராற்றல் படைத்த சக்தியின் அருளால் எல்லாம் நலமாய் நடைபெறும் என்ற நம்பிக்கையே எமது வாழ்வுக்கு உறுதுணையாக அமையும். நாம் பெற்றுள்ள சொந்த பந்தங்களால் எமது துன்பங்களை முற்றாகக்களைய முடியாது. ஆனால் எங்கும் மேவியிருக்கும் சக்தியை நம்புவதால் உள்ளத்தில் அமைதி ஏற்படும்.

பாரதி காட்டும் வழிபாட்டு நடைமுறை அனைவருக்கும் பொதுமையாக உள்ளது. ஏற்றத் தாழ்வு இன்றி எல்லோரும் தெய்வீக நிலையில் ஒருங்கிணைய முடியும் திண்ணிய நெஞ்சத்தோடு நல்ல எண்ணத்தோடு இருப்பின் துன்பம் ஏற்படாது. தெளிந்த நல்லறிவுடன் செயற்பட்டால் கவலைக்கு இடமில்லை. நாம் பண்ணிய பாவங்களை எல்லாம் வழிபாட்டால் இப்பிறவியலேயே தொலைத்து விடலாம். நம்மைச் சார்ந்தவர் நமக்கு மிக நெருக்கமானவர்களால் ஏற்படும் துயரத்தைப் போக்குவதற்கு சக்தியின் தாள் பணிவதே நன்று. துயர் தந்தவர்களால் துயர் தீரவேண்டும் என எதிர்பார்ப்பதால் மேலும் துன்பம் ஏற்படலாம். எனவே எமது உள்ளத்தை அமைதிப்படுத்துவதற்கு எம்மை நாமே பக்குவப் படுத்தும் பயிற்சியை மேற்கொள்ள வேண்டும் இத்தகைய உளப் பயிற்சியை வழிபாட்டால் பெறமுடியும் பாரதி இப்பயிற்சியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கொண்டு வாழ்ந்தவன். பக்தி நிலையில் அவன் பெற்ற மனவுரம் பாடல்களிலே பதிவு செய்யப்பட்டுள்ளது.

*"மொய்க்குங்கவலையைப்போக்கி*
*முன்னோன் அருளைத் துணையாக்கி*
*எய்க்கும் நெஞ்சை வலியுறுத்தி*
*உடலை இரும்புக்கிணையாக்கி*
*பொய்க்குங் கலியை நான் கொன்று*
*பூலோகத்தார் கண்முன்னே*
*மெய்க்குங் கிருத யுகத்தினையே*
*கொணர்வேன் தெய்வ விதியிஃதே!"*

என்னும் கவிதையில் பாரதியின் வழிகாட்டல் தெளிவாகத் தெரிகிறது. காலத்தையும் சூழலையும் கருத்திற் கொண்டு அதற்கேற்றபடி வாழ்வு நடத்த பாரதி காட்டும் வழியே பயனுடையது. உள்ளத்தையும் உடலையும் தறி கெட்டுப்போகாமல் அடக்கியாளப்பக்தி என்னும் உணர்வு நிலை தேவை. மனித வாழ்வை மகிழ்வுடன் கழிக்க மனதில் சலனமில்லாமல் மதியில் இருள் தோன்றாதிருக்க வழிபாடு செய்ய வேண்டும். இயற்கைச் சக்திகளிலே தெய்வத்தின் தோற்றத்தைக் காண முடியும் அதை உளமார வழிபட்டால் உள்ளம் அமைதி பெறும். மகாசக்தியைக் கண்ட பாரதியின் கவிதை எம்மையும் பக்தி நெறியில் செல்ல வைக்கும் ஆற்றல் உடையது.

*" சந்திர னொளியில் அவளைக் கண்டேன்*
*சரண மென்று புகுந்து கொண்டேன்*
*இந்திரியங்களை வென்று விட்டேன்*
*எனதென ஆசையைக் கொன்று விட்டேன்"*
*பயனென்னாமல் உழைக்கச் சொன்னாள்*
*பக்தி செய்து பிழைக்கச் சொன்னாள்*
*துயரிலா தெனைச் செய்து விட்டாள்*
*துன்ப மென்பதைக் கொய்து விட்டாள்!"*

இதுவே வாழும் வழியாகும். பாரதி பாடல் மந்திரச் சொல்லாக நின்று மகிழ்வு தருகிறது

❑❑❑



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலையிலே ஊதி உலகக் கனல் வளர்ப்பாள்.

(கலாநிதி. மனோன்மணி சண்முகதாஸ்)

தமிழர் பண்பாட்டில் வழிபாடு பெறும் சிறப்பிடம் தனித்து வ மானது. மனித வாழ்வியலில் எதிர் கொள்ளும் துன்பங்களை வென்றெடுக்க வழிபாடே பெரிதும் துணை புரியும். நமது முன்னோரது வரலாறுகள் இந்த உண்மையைத் தெளிவாகவே உணர்த்தியுள்ளன. மனித வாழ்வின் படிமுறை வளர்ச்சியில் வழிபாட்டுப் பயிற்சியும் இணைய வேண்டும். காலத்தின் கடப்பையும் வாழ்வின் தேவையையும் வழிபாட்டு நடைமுறைகள் கூர்மையாகக் காட்டுகின்றன இயற்கையின் தோற்ற வேறுபாடு பருவ மாற்றங்கள் என்பன வழிபாட்டுடன் நன்கு தொடர்பு படுத்தப்பட்டுள்ளன. மனித உடல் வளர்ச்சியும் உணர்வு நிலை வளர்ச்சிகளும் வழிபாட்டுடன் இணையும் பக்குவ நிலையால் வாழ்க்கை அமைதியாகவும், மகிழ்வாகவும், நிறைவாகவும் இருக்கும். இத்தகைய நன்மைகளைத் தரும் வழிபாடு பற்றிய தெளிவும் அறிவும் பயிற்சியும் இன்று பெரிதும் வேண்டப்படுபவை. எனவே அது பற்றிய சில கருத்துக்களை முன்வைக்கவே இக்கட்டுரை முயல்கிறது.

"அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்", "தாயிற் சிறந்தொரு கோவில் இல்லை" என்ற முன்னோரின் கூற்றுக்களை இன்று ஆழமாக நோக்குமிடத்து வழிபாட்டின் மூல ஊற்றை உணரமுடிகிறது. தமிழர் பண்பாட்டில் தாயைத் தெய்வமாகப் போற்றும் பண்பு நலன் சிறப்பானது. கருவொன்றைத் தன் வயிற்றிலே தாங்கித் தன் குருதியிலே அதனை வளர்த்து ஈன்று புறந்தரும் தாயின் கடன் ஒப்பற்றது. குழந்தைக்கு முலைப்பால் ஊட்டிப் பிணிகளிலிருந்து பாதுகாத்து வளர்க்கும் பண்பு தெய்வக் கொடையானது. இன்றைய விஞ்ஞானம் குழந்தைப் பேற்றை வணிகப்பேறாக்கி விட்டது. ஆனால் நமது முன்னோர் வாழ்வியலில் மக்கட் பேறு தெய்வக் கொடையென நம்பப்பட்டது. அதனால் தாயின் பணியும் பங்கும் பெரிதும் மதிக்கப்பட்டன. குழந்தையின் முன்னறி தெய்வமாகத்தாய் வழிபடப்பட்டாள். தாய்மையின் பண்பு நலனுக்குப் பெண்மையின் தனித்துவமான ஆற்றல்களும் உரம் சேர்த்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்மையின் தனித்துவமான ஆற்றல்கள் காலங் காலமாகப் பலராலும் வியந்தும் விமர்சிக்கப்பட்டும் வருகின்றன. மனித வாழ்வு முற்று முழுதாக இயற்கையோடு ஒட்டியதாக இருந்த போது பெண்மையின் பேராற்றல் பெரிதும் மதிக்கப்பட்டது. ஆனால் மனித வாழ்வில் செயற்கையான செயற்பாடுகள் சேர்ந்த போது பெண்மையின் பேராற்றல் புறந்தள்ளப்பட்டது. வழிபாட்டு நிலையில் பெண்ணின் மதிப்பும் குறைவடைந்தது. பருவ வளர்ச்சிக்கோல நிலையில் மட்டுமே பெண்மை பேசப்படலாயிற்று. பெண்மையின் கொடை நிலைகள் விஞ்ஞானத்தின் விந்தையான செயற்பாடுகளால் நிறைவேற்றப்பட்ட போது பெண்மையின் பங்களிப்பும் குறைவடைந்தது. ஆனால் இயற்கையின் சீற்றம் வெளிப்படும் வேளையில் விஞ்ஞானம் செயலிழந்து நிற்கையில் மீண்டும் பெண்மையின் பேராற்றல் பற்றிய எண்ணம் தோன்றுகிறது. பெண்ணிடம் புதைந்து கிடக்கின்ற ஆற்றல்களை முன்னோர் உணர்ந்து வழிபட்ட நிலைகளை மீள நோக்கும் செயற்பாடும் தோன்றுகிறது.

இந்த நிலையைத் தெளிவாக விளங்கிக் கொள்ள மக்கள் கவிஞன் பாரதியின் பாடல்கள் நன்குதவும். வாழ்க்கையில் வறுமையின் பிடியிலே சிக்கித் தவித்த பாரதி வழிபாட்டையே துணையெனக் கொண்டான். அவன்பாடிய எளிய தமிழ்க் கவிதைகளில் தெய்வப் பாடல்களும் நிறைய உண்டு. மரபான வழிபாட்டு வாழ்வியலில் வந்த பாரதி துன்பந்தீர அதுவே பிறர்க்கும் உதவும் என நம்பினான். பாரதி பாடிய தோத்திரப் பாடல்களில் சக்தியை வியந்து பாடிய பாடல்களே அதிகம். சக்தியை வழிபாடு செய்து அனைத்தையும் பெறலாம் என அவன் வழிகாட்டினான். புதுமைப் பெண் பற்றிய சிந்தனையே, சக்தியின் பேராற்றல் கண்ட பாரதியின் புதிய சிந்தனையாகும். சக்தி வழிபாட்டிற்காக ஒதுக்கப்பட்ட காலம் ஒன்று அவன் காலத்தில் மரபாக இருந்தது. அது நவராத்திரி வழிபாடாகும். முன்னோரின் வழிபாட்டு நடைமுறைகளில் பெண் தெய்வ வழிபாடும் இடம் பெற்றிருந்தது. பாரதி பாடிய நவராத்திரிப் பாட்டு இதற்கு நல்லதொரு சான்று.

*“சத்ய யுகத்தை அகத்திலிருத்தி*
*திறத்தை நமக்கருளிச் செய்யும் உத்தமி”*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனப் பாரதி பாடுகிறான். எமக்குரிய ஆற்றல்களை நல்கும் சக்தியை வழிபடல் நன்று. இதை விடப் பாரதி பாடிய நவராத்திரிப் பாட்டு மரபு மரபாக வந்த பெண்மையைத் துதிக்கின்ற வழிபாட்டு நிலைகளைத் தெளிவாகப்புலப்படுத்துகின்றது. மனிதனுக்குத் தேவையான ஆற்றலை மூன்று பெண்மையின் பேராற்றல்களாக பாரதி இனங்காட்டுகின்றான். பராசக்தி, வாணி, ஸ்ரீதேவி பார்வதி எனப் பெண்தெய்வங்களாகப் பெண்மையின் பேராற்றல் வழிபடப்பட வேண்டுமெனப் பாரதி ஒரு வரையறை செய்துள்ளான். மலைமகள் , கலைமகள், திருமகள் என மூன்று வடிவங்களாக நாம் வழிபடும் தெய்வங்களின் ஆற்றல் பெண்களிடம் இயற்கையின் கொடையாக இருப்பதை உணர வைக்கிறான். அது ஒன்றாகி நிற்கும் நிலையும் உண்டு என்பதையும் தெளிவு படுத்தியுள்ளான். அதனைப் பின்வரும் பாடல் காட்டுகின்றது.

*"மாதா பராசக்தி வையமெல்லாம் நீ நிறைந்தாய்*
*ஆதாரம் உன்னையல்லால் ஆரெமக்குப் பாரினிலே*
*ஏதாயினும் வழி நீ சொல்வாய் எமதுயிரே*
*வேதாவின் தாயே மிகப்பணிந்து வாழ்வோமே"*

இந்தப் பாடலில் பாரதி காட்டும் வழிபாட்டு மரபு தாய்மையினை வழிபடும் மரபின் தொடர்ச்சியை விளக்குகிறது. தாயின் பரிவும் அன்பும் குழந்தையின் தேவைகளை உடனுக்குடன் நிறைவேற்றும் உலகத்திலே தாயன்புக்கு நிகரானது எதுவும் இல்லை என்பர். "எனக்கு ஆதாரம் நீயே" எனப் பாரதி பாடும் போது தன் குழந்தையனுபவத்தை நினைந்தே பாடுகின்றான். இந்த அனுபவம் உலகத்துப் பிறந்த அனைவருக்குமே பொருந்தும். வயிற்றுப் பசியை உணர்ந்து பாலூட்டும் தாயின் அரவணைப்பு எல்லாக் குழந்தைகளாலும் உணரப்பட்ட அனுபவமே. எதையும் தாயிடம் கேட்டுப் பெறும் குழந்தையின் குறை நிரப்பும் தெய்வீகப் பண்பு தாயின் சிறந்த குணநலமாகும். எமக்காகத் தனது உயிரைத்தரவல்ல அந்த ஒப்பற்ற தாய்மையை வணங்கினால் அவள் ஏதாவது நல்ல வழி கூறுவாள் எனப் பாரதி பாடியுள்ளான். தாயைப்பணிந்து வாழ்வதே சிறந்தது என்ற ஒரு அறிவுரையையும் இப் பாடல் மூலம் பாரதி கூற முற்படுகிறான். வீட்டு நிலையில் மட்டுமன்றி நாட்டு நிலையில் மட்டுமன்றி பரந்த உலக மட்டத்திலே கூட எமக்கு ஆதாரமாக இருக்கக் கூடியது பெண்மையின் பேராற்றலை வழிபடுவதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது தான் பாரதியின் முடிவாக உள்ளது. குழந்தைப் பருவம் முதல் முதுமை வரை இந்த வழிபாடு தான் தேவையென உணர்த்துகின்றான்.

பெண்மையின்பேராற்றல்களை மூவகைப்படுத்திச் சிறப்பாகக் காட்டும் முயற்சியையும் பாரதி மேற்கொண்டுள்ளான். பூமகள், கலைமகள், திருமகள் என மூன்று உருவங்களாக அந்த ஆற்றலை எமது முன்னோர் வழிபாட்டு மரபு முன்னரே உணர்த்தியுள்ளது. மூன்று தெய்வ நிலைகளும் மூன்று வாழ்வியல் தேவைகளை உணர்த்தும் உருக் களாயுள்ளன. வாணி, ஸ்ரீதேவி, பார்வதி எனத் தெய்வ நிலையில் மூன்று ஆற்றல்கள் வழிபடப்பட்டன. வாணி பற்றிய பார்வதியின் பாடல் பின்வருமாறு.

*"வாணி கலைத் தெய்வம் மணிவாக் குதவிடுவாள்*
*ஆணிமுத்தைப்போலே அறிவு முத்து மாலையினாள்*
*காணுகின்ற காட்சியாய்க் காண்பதெலாங் காட்டுவதாய்*
*மாணுயர்ந்து நிற்பாள் மலரடியே சூழ்வோமே.*

கலைக்குத் தெய்வமாகிய வாணியின் தன்மைகளை விளக்கும் பாரதியின் பாடலில் புதைந்திருக்கும் பெண்மையின் பேராற்றலான அறிவுத்திறன் மானிடர்களுக்கு மிகவும் இன்றியமையாதது. அறிவின் திறத்தை வெளிப்படுத்துவது வாக்குத் திறனாகும். "தகை சான்ற சொற்காத்துச் சோர்விலாள் பெண்" என வள்ளுவர் பெண்மையின் வாக்குத் திறனை விளக்கினார். பெண்ணின்பேச்சு இடத்திற்கேற்பச் செயலுக்கேற்ப அமைந்திருக்கும். முத்துப்போல அறிவு முத்தை உதிர்க்கும் ஆற்றல் பெண்ணுக்கு உண்டு எனப்பாரதி கூறுகிறான். பெண் பல்வேறு அணிகலன்களால் தன்னை அழகு செய்பவள். அவளுக்கு "அறிவு" என்னும் முத்துமாலை அழகுக்கு அழகு செய்வதாய் உள்ளது. பாரதியின் "புதுமைப் பெண்" என்னும் கவிதையில் பெண்ணை "மதுரத்தேமொழி மங்கையர் " என்று குறிப்பிட்டுள்ளான். பேச்சாற்றல் கொண்ட பெண்மையின் அறிவு "காணுகின்ற காட்சியாய்க் காண்ப தெல்லாங் காட்டுவதாய் மாணுயர்ந்து நிற்கும் "எனப் பாரதி கூறுவது அவன் காண விரும்பிய புதுமைப் பெண்ணின் கோலமாகும். பெண்ணின் மலரடியைச் சூழ்ந்து வாழ்வதே நல்லது. என்ற பாரதியின் கூற்று பெண்ணின் தாயன்பை நாடி நிற்பதே நல்லதென உணர்த்துகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*"மனிதர் தம்மை அமரர்களாக்கவே
ஆற்றல் கொண்ட பராசக்தி யன்னை நல்
அருளினாலொரு கன்னிகையாகியே
தேற்றி உண்மைகள் கூறிட வந்திட்டாள்"*

எனப் "புதுமைப் பெண் " என்ற பாடலின் அடிகள் இக் கருத்தை மனித வாழ்வியல் நிலையில் பெண்மையின் தோற்றம் தெய்வத்தின் தோற்றமே எனவும் பெண்ணின் பேச்சு உண்மையான தெய்வத்தின் கூற்று எனவும் விளக்கி நிற்கின்றன. பாரதியின் ஸ்ரீதேவி பற்றிய பாடல் பெண்மையின் பிறிதொரு ஆற்றலை வெளிப்படுத்திக் காட்டுகிறது.

*"பொன்னரசி நாரணார்தேவி புகழரசி
மின்னுநவ ரத்தினம் போல் மேனியழகுடையாள்
அன்னையவள் வையமெல்லாம் ஆதரிப்பாள் ஸ்ரீதேவி
தன்னிரு பொற்றாளே சரண்புகுந்து வாழ்வோமே"*

மனித வாழ்வியலுக்குச் செல்வம் தேவை. விரும்பியதைப் பெற பொருட்செல்வம் வேண்டும். "பொன்னரசியின் பொற்றாளை" வணங்கினால் நாம் மகிழ்வாக வாழ்வு நடத்தலாம் எனப் பாரதி கூறுகிறான். நாரணன் தேவியான ஸ்ரீதேவி செல்வம் தருபவள். இந்த வையம் முழுவதும் ஆதரிப்பதற்கு அவளுடைய அருள் தேவை. பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லையென்றார் வள்ளுவர். பொருட் செல்வம் பேணும் பெண்ணின் குணநலன் வாழ்க்கைக்கு வளம் தரும். எனவே செல்வம் தரும் ஆற்றல் பெண்ணின் தனிச்சிறப்பாய் அமைய வேண்டும். செல்வத்துடன் மேனியழகையும் பெண்மை கொண்டிருப்பது பிறிதொரு சிறப்பு. செல்வச் சிறப்புப் பெற்ற பெண்மையின் கால்களைச் சரணாகக் கொண்டு வாழ்வதே நன்று என்ற பாரதியின் கருத்தே நவராத்திரி வழிபாட்டு நடைமுறையில் நடு மூன்று நாட்களையும் ஸ்ரீதேவி வழிபாட்டிற்கெனச் சிறப்பாக ஒதுக்கப்பட்டதன் விளக்கமாகவுள்ளது.

பார்வதியைப் பற்றிய பாரதி பாடிய பாட்டு நமது உலகியல் வாழ்வில் பெண்மையின் ஆற்றல் எவ்வாறு இணைந்திருக்கின்றது. என்பதை விளக்குகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*“மலையிலே தான் பிறந்தாள் சங்கரனை மாலையிட்டாள்*
*உலையிலே ஊதி உலகக் கனல் வளர்ப்பாள்*
*நிலையில் உயர்ந்திடுவாள் நேரே அவள் பாதம்*
*தலையிலே தாங்கி தரணிமிசை வாழ்வோமே”*

இப்பாடலில் உலக வாழ்வியலில் பெண்மையின் சிறப்பிடம் துலக்கமாகக் காட்டப்பட்டுள்ளது. பெண் தனித்து பணி செய்யும் பிறவி அன்று அவள் ஆணுடன் இல்லறத்திலே இணைந்து பணி செய்யும் நிலையில் உலகையே வளர்க்கின்ற பெரும்பணி செய்யும் ஆற்றலுடையவளென்பது உணரப்படுகின்றது. மலையிலே பிறந்த பார்வதி சங்கரனை மாலையிட்டு மனைவியாக வாழும் நிலையை பாரதி எடுத்துக் கூறுவதற்கு ஒரு காரணம் உண்டு. ஆணும் பெண்ணும் இணைந்து வாழும் வாழ்வு இல்லறம் எனப் பேசப்பட்டது. இல்லறம் நன்மக்கள்பேறால் சிறப்புறும் மனைமாட்சிக்கு நன்கலமாக அமைவது நன்மக்கள் பேறாகும். பார்வதி சங்கரனை மாலையிட்டு இல்லறம் நடத்தியதாகக் கூறுவதால் தெய்வீக நிலையிலும் மனித நிலையிலும் ஒரு ஒழுங்கான வாழ்வியல் நடைமுறையிருப்பது உணர்த்தப்படுகின்றது. உலையிலே ஊதி உணவு ஆக்கும் பெண்மையின் பெரும் பணியை பாரதி தெய்வீக நிலையிலும் எடுத்துக் காட்டுவது தமிழர் வழிபாட்டு நடைமுறையின் சிறப்பாகும். மனித நிலையிலே தெய்வங்ளை இணைக்கும் “பாவனாசக்தி” பக்தியின் உயர்ந்த பக்குவநிலை ஆழ்வார்களும் நாயன்மார்களும் அந்நிலையில் வழிபாடு செய்தனர். பாரதியின் உள்ளத்திலும் பெண்மையின்பேராற்றல் வழிபாட்டிற்குரியது என்ற தெளிவு ஏற்பட்ட போது தெய்வீக வாழ்வுக்கும் மானிட வாழ்வுக்கும் உள்ள வேற்றுமை விலகிப் போயிற்று.

“உலையிலே ஊதி உலகக் கனல் வளர்ப்பாள் ”என்னும் அடி இந்தப் பக்குவ நிலையை நன்றாக உணர்த்தி நிற்கின்றது. தாய்மையின் உயர்ந்த நிலையையும் தன்னைச் சார்ந்த அனைவரையும் தாய்மை உணவளித்துக் காக்கும் உயர்ந்த கொடை மரபையும் பாரதி மனத்துள் வாங்கிப் பாடியுள்ளமை புலனாகின்றது. எனவே தாயின் பாதங்களை தலையிலே தாங்கி வாழவேண்டும் என்று அறிவுறுத்துகின்றான். பராசக்தியைப் பணிந்து வாழச் சொன்னான் வாணியின் மலரடியைச் சூழ்ந்து நிற்கச் சொன்னான் ஸ்ரீதேவியின் தாளைச் சரண்புகச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொன்னான். பார்வதியின் பாதத்தைத் தலையிலே தாங்கச் சொன்னான். அன்னை என்னும் வடிவிலே அந்த மூன்று சக்திகள் இருப்பதை நாம் உணர வேண்டும். பாரதியின் இலக்கு இதுவே. நவராத்திரிப் பாட்டுத் தாய்மையைப் போற்றுவதுடன் அதனை இருநிலைகளில் வைத்து நாம் நோக்குவதற்கும் வழி செய்துள்ளது. பெண்மையின்பேராற்றலை வழிபடுவதற்குபாரதி காட்டும் நடைமுறை நவராத்திரி விழாவாக இன்றுவரை நிலைத்துள்ளது.

நடைமுறை வாழ்வியலில் நவராத்திரி வழிபாடு இப்பண்பு நலனை நன்கு விளக்கும் வகையில் நடைபெறுகிறது. துர்க்கை, மகாலக்குமி, சரஸ்வதி என்னும் மூன்று பெண் தெய்வங்களையும் வழிபட ஒன்பது நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. பத்தாம் நாள் விஜயதசமி என நிறைவு நாளாக அமைந்துள்ளது. அழிவுசக்தி , ஆக்கசக்தி, அறிவுசக்தி என மூன்று பேராற்றல்களை நாம் பெறுவது நவராத்திரி வழிபாட்டின் பயன் என்ற நம்பிக்கையும் நம்மிடையே வேரூன்றியுள்ளது. வையம் முழுவதையும் படைத்தளிக்கின்ற மகாசக்தியின் புகழை வாழ்த்தினால் நாம் செய்யும் வினைகள் அனைத்திலுமே வெற்றியுண்டாகும். எமது உடலில் உள்ள சக்தியை ஆக்க பூர்வமான செயற்பாடுகளுக்கு பயன்படுத்த வேண்டும். பராசக்தியின் புகழ்பாடுவதால் நூறுவயது புகழுடன் வாழலாம் என பாரதி சக்தி வழிபாட்டின் பயன் கூறுகின்றான்.

*"மாறுதலின்றி பராசக்தி தன்புகழ்*
*வையமிசை நித்தம் பாடுகின்றோம்*
*நூறு வயது புகழுடன் வாழ்ந்துயர்*
*நோக்கங்கள் பெற்றிட வேண்டுமென்றே"*

மகாலக்குமியை வழிபடுவதால் ஆக்க சக்தியினைப் பெறலாம் வாழ்வில் வறுமை நீங்கிச் செல்வச் செழிப்புடன் வாழ அவள் அருள்புரிவாள். நாம் செய்யும் வினைகளில் அழகும் பொழிவும் அவள் தருவாள். நமது வேதனைகளையும் வெறுப்புக்களையும் நீக்க நல்ல செயற்பாடுகளைச் செய்ய அவள் அருள் தேவை. எனவே அவள் வாழும் இடங்களை நாம் அறிந்திருக்க வேண்டும். என்பதால் பாரதி தனது பாடலில் அவள் வாழுமிடங்களை வரிசைப்படுத்திக் கூறியுள்ளான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பொன்னிலும் மணிகளிலும் - நறும்
பூவிலும் சாந்தினிலும் விளக்கினிலும்
கன்னியர் நகைப்பினிலும் - செழுங்
காட்டிலும் பொழிலிலும் கழனியிலும்
முன்னிய துணிவினிலும் - மன்னர்
முகத்திலும் வாழ்ந்திடும் திருமகளைப்
பன்னி நற்புகழ் பாடி - அவள்
பதமலர் வாழ்த்தி நற் பதம் பெறுவோம்"

உலகிலுள்ள அழகான பொருட்களெல்லாம் இந்த ஆக்க சக்தியின் உறைவிடமாம் பொன், மணி, நறும்பூ , சாந்து, விளக்கு, கன்னியர் நகைப்பு, செழுங்காடு, பொழில், கழனி, முன்னியதுணிவு, மன்னர் முகம் என மகாலக்குமி உறையும் இடங்கள் எல்லாம் அழகும் செழுமையும் வளம் பெற்றவையாயுள்ளன. இதனை அறிவிக்கும் செயற்பாடாக நவராத்திரி வழிபாட்டிலே "கொலுவைக்கும் நடைமுறை இன்று வரை தொடர்கிறது. நவாராத்திரி கொலுவிலே எவற்றை வைக்க வேண்டும் என்ற ஐயப்பாட்டை பாரதியின் பாடல் தெளிவாக்கும். நவராத்திரி வழிபாட்டில் கன்னியர் முக்கியப்படுத்தப்படுவதன் நோக்கத்தையும் பாரதியின்பாடல் விளக்கி நிற்கின்றது. அழகிய ஆடைகள் அணிந்து அணிகலன்கள் பூண்டு அழகுக் கோலத்துடன் வலம் வரும் இளம் பெண்களின் சிரிப்பிலே மகாலக்குமி இருப்பாள். பெண்மையின் அழகுக்கோலம் வழிபாட்டுக்குரியதாக சிறப்புப் பெற்றிருப்பதையே இது உணர்த்துகின்றது. இதே போன்று பாரதி கலைமகளின் உறைவிடங்களையும் வரிசைப்படுத்திக் கூறுகிறான்.

"வெள்ளைத் தாமரைப் பூவில் இருப்பாள்
வீணை செய்யும் ஒலியில் இருப்பாள்
கொள்ளை இன்பம் குலவு கவிதை
கூறுபாவலர் உள்ளத்திருப்பாள்
உள்ளதாம் பொருள் தேடியுணர்ந்தே
ஓதும் வேதத்தில் உள்நின்று ஒளிர்வாள்
கள்ளமற்ற முனிவர்கள் கூறும்
கருணை வாசகத்துட் பொருளாவாள்"
"மாதர் தீங்குரற் பாட்டில் இருப்பாள்
மக்கள் பேசும் மழலையில் உள்ளாள்
கீதம் பாடும் குயிலின் குரலைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*கிளியின் நாவை இருப்பிடம் கொண்டாள்*
*கோதகன்ற தொழிலுடைத்தாகிக்*
*குலவு சித்திரம் கோபுரம் கோயில்*
*ஈதனைத்தின் எழிலிடை யுற்றாள்*
*இன்பமே வடிவாகிடப் பெற்றாள்"*

வீணையின் ஒலியிலும் பாவலர் உள்ளத்திலும், வேதத்தின் உட்பொருளிலும் முனிவரின் கருணை வாசகத்துள்ளும் மாதர் பாட்டிலும், மக்கள் மழலையிலும், குயிலின் குரலிலும், கிளியின் நாவிலும், சித்திரம், கோபுரம், கோயில் என அறிவு சக்தியின் உறைவிடங்களைப் பாரதி எடுத்தியம்பியுள்ளான். நவராத்திரி விழாவிலே இசைக் கருவிகளும் இனிய பாடல்களும் தொடர்புற்ற தன்மையைப் பாரதியின் பாடல் விளக்குகின்றது. நவராத்திரி விழாவின் நிறைவு மூன்று நாட்களும் அறிவு சக்தியான கலைமகளை வழிபடுவதற்கு ஒதுக்கப்பட்டுள்ளன. அந் நாட்களில் இசை நிகழ்ச்சிகளும் கலை நிகழ்ச்சிகளும் கோல அழகும் இடம் பெறுகின்றன. கலையுடன் தொடர்புடைய கலைமகளை வழிபடும் போது கலைத் தொழில் புரிவோர் தமது கருவிகளை அவளுடைய பாதங்களில் வைத்து வழிபடும் மரபு ஒன்றும் நடைமுறையில் உண்டு. கருவிகளை இயக்காமல் கலை மகலைப் பாடிப் பரவி பத்தாம் நாள் மீண்டும் தமது தொழில் நுட்பக் கருவிகளை இயக்கும் மரபு நிலவி வருகிறது. இதனைப் பாரதியின் பாடலும் சுட்டுகிறது.

*"வஞ்சமற்ற தொழில் புரிந்துண்டு*
*வாழும் மாந்தர் குல தெய்வ மாவாள்*
*வெஞ்ச மர்க்குயி ராகிய கொல்லா*
*வித்தை யோர்ந்திடு சிற்பியர் தச்சர்*
*மிஞ்ச நற்பொருள் வாணிகஞ் செய்வோர்*
*வீரமன்னர் பின்வேதியர் யாரும்*
*தஞ்ச மென்று வணங்கிடும் தெய்வம்*
*தரணி மீதறிவாகிய தெய்வம்"*

நவராத்திரி வழிபாடு சகல தொழிலாளர்களையும் இணைக்கும் ஒரு வழிபாடாகவும் விளங்குகின்றது. வழிபாட்டு நடைமுறையில் ஒன்றான கொலு வைத்தல் இதனை சான்று காட்டுகின்றது. கொலுவிலே வைக்கப்படும் பொருட்கள் இத் தொழிலாளர் ஒன்றிணைப்பைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டுகின்றது. இத்தகைய கொலுவைக்கும் நடைமுறை ஒன்று ஜப்பானிய நாட்டிலும் இன்று வரை நடைமுறையில் உள்ளது. அவர்களுடைய கொலு அணிவகுப்பிலே மன்னர், படைவீரர், மக்கள், மிருகங்கள், மலர்கள், பறவைகள், இசைக்கருவிகள், தொழிற் கருவிகள் என எல்லாம் அடங்கும். தமிழர் நவராத்திரி விழா போல் அந்நாட்டவர் பெண் குழந்தைகளை முக்கியப்படுத்தும் விழாவிலே இத்தகைய கொலு அலங்காரத்தைச் செய்கின்றனர். அன்றைய தினம் பெண் குழந்தைகளுக்கு மரபான ஆடை அணிந்து கல்விப் பயிற்சி, இசைக் கருவிப் பயிற்சி அளிக்கும் நடைமுறையும் இன்று வரை நிலவுகிறது.

பெண்மையின் ஆற்றலை வழிபட்டு வணங்குவது உலக மக்கள் அனைவருக்கும் நலன் தருவதாகும். இந்த உலகளாவிய வழிபாட்டு மரபை பாரதியும் எடுத்துக் கூறியுள்ளான்.

*"ஊணர் தேசம் யவனர்தஞ் தேசம்*
*உதய ஞாயிற் றொளி பெறுநாடு*
*சேண கன்றதோர் சிற்றடிச் சீனம்*
*செல்வப் பார சிகப்பழந் தேசம்*
*தோண லந்த துருக்கம் மிசிரம்*
*சூழ்கடற்கப் புறத்தினில் இன்னும்*
*காணும் பற்பல நாட்டிடை யெல்லாம்*
*கல்வித் தேவியின் ஒளிமிகுந்தோங்க"*

பாரதியின் வழிபாட்டுச் சிந்தனை வீடு தாண்டி, நாடு தாண்டி உலகெங்கும் வியாபித்து நிற்கின்றது. சிதறிக்கிடக்கும் உறவுகளையும் நட்புகளையும் வழிபாடு ஒன்றிணைக்கும். கூட்டுவழிபாடு ஒற்றுமையைப் பலப்படுத்தும். அந்த வழிபாட்டு மரபைப் பேணி வளர்க்கும் பொறுப்பு பெண்களுக்கே உரியது. தாய்மை நிலையில் பெண் செய்கின்ற பணிகள் உலகம் சமமாய் இயங்க வழிவகுக்கும். இருபதாம் நூற்றாண்டில் பாட்டுத்திறத்தாலே இந்த வையத்தைப் பாலித்திட எண்ணியவன் பாரதி. பாட்டுக் கலந்திட ஒரு பத்தினிப் பெண்ணும் கவிதைகளும் பராசக்தியின் காவலும் பாரதி கேட்டவை. இந்த வரம் உலக மக்கள் அனைவரும் கேட்டுப் பெற வேண்டிய இன்றியமையாத வரமாகும். பெண்மையைப் போற்றி வழிபாட்டைத் தொடர்வதால் உள்ளம் தூயமை அடையும் உலகம் சமநிலை பெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்மையின் பேராற்றலை இன்று எல்லோரும் உணரும் வகையில் உலகெங்கும் நவராத்திரி வழிபாடு நடைபெறுகின்றது. பாரதி குறிப்பிட்ட நாடுகள் தவிர்ந்த ஏனைய நாடுகளிலும் புலம் பெயர்ந்த நமது தமிழ் உறவுகளும் நட்புகளும் இந்த வழிபாட்டை தொடர நல்வாய்ப்புப் பெற்றுள்ளனர். கவின் கலைகளின் பரிமாற்றம், தொழில் நுட்பங்களின் பரிமாற்றம், உணர்வுகளின் பரிமாற்றம் என்பன உலகெங்கும் நடைபெற நவராத்திரி விழா நன்கு பயன்படுகின்றது. வாழ்வின் அவலங்களில் இருந்து விடுபட வழிபாடு தான் உதவும். எமது முன்னோர் செயற்படுத்திய நடைமுறைகளின் ஆழமான பொருள் காலம் கடந்து நிற்பதை இப்போது உணரமுடிகின்றது. வழிபாட்டால் அடைய விரும்புவதை அனைவர்க்கும் உணர்த்துவதே எமது கடன்.

*"எண்ணிய முடிதல் வேண்டும்*
*நல்லவே எண்ணல் வேண்டும்*
*திண்ணிய நெஞ்சம் வேண்டும்*
*தெளிந்த நல் லறிவு வேண்டும்*
*பண்ணிய பாவமெல்லாம்*
*பரிதிமுன் பனியே போல*
*நண்ணிய நின்முன் இங்கு*
*நசிந்திடல் வேண்டும் அன்னாய்."*

(பாரதி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வணங்கும் பேய் வடிவம்

(கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்)

உலகத்து மக்களை அன்புநெறியிலே ஆற்றுப்படுத்தும் அரிய பணியை ஏற்றிருப்பவர் பெண்களே மனித விழுமியங்களை எல்லோரும் உணரும் வகையில் பெண்கள் தொண்டு செய்து பெருமை பெற்ற வரலாற்றைப் பெரியபுராணம் கூறுகிறது. 63 அடியார்களின் வரலாற்றைப் பாடிய சேக்கிழார் அன்புநெறியைக் காட்டிய பெண்களின் வரலாற்றையும் பெருமைப்படுத்தியுள்ளார். பெண்மையின் வசதி காட்டல் வழிபாட்டு மரபையே தோற்றுவித்தது என்ற உண்மையை உலகம் உணரச் செய்தவர் சேக்கிழாரே இன்று பெரியபுராணத்தை மீள்வாசிப்புச் செய்ய விழைபவர் காலத்தின் போக்கைக் கணித்து வரலாற்றைப் புரட்டிப் பார்க்கின்றனர். ஆனால் இயற்கை நிலையில் உள்ளதை உள்ளவாறு உணர்த்தும் சேக்கிழாரின் பாடல் மரபு, பெண்மையின் பக்திநெறியைத் தனித்துவப்படுத்திக் காட்டும் பாங்கில் சிறப்பாக வெளிப்பட்டு நிற்கிறது. மனத்தினால் செம்மைப்பட்டவர் வாழ்வு பிறரையும் நல்வழிப்படுத்த வல்லது அதுவே இன்றுவரை அடியார் வழிபாடாக நிலைத்து நிற்கிறது. அடியார் வரிசையில் பேய் வடிவம் வேண்டிய புனிதவதியின் கதை பெரியபுராணத்தில் ஒரு புதிய வழிபாட்டு மரபை இனங்காட்டுகிறது.

## வாழ்வியலில் பக்தி நெறி

மனிதன் வாழும் நிலையிலே பக்தி உணர்வுடன் வாழ முடியும் அன்பு செய்வதையே தொண்டாக்கிப் பிறர் நலம் பேணும் பணியை இயற்கை நிலையிலே பெற்ற பெண்கள் இதற்குச் சான்றாக இருப்பதைச் சேக்கிழார் விளக்குகிறார் வணிகர் குல வாழ்வியல் புதியதொரு பக்தி மரபைத் தோற்றுவித்த நிலையைப் புனிதவதி என்னும் வணிகர் குலப் பெண்ணின் வாழ்வியலூடாக வெளிப்படுத்திக் காட்டுகிறார் காரைக்கால் என்னும் சிற்றூரில் வணிகர் குலத் தலைவன் தனதத்தன் தவமிருந்து பெற்ற திருமடந்தை புனிதவதி பிள்ளைக்கலி தீர்க்கப் பிறந்தவள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்மகவு பெற்றெடுத்த தனதத்தன் அவளை வழிபாட்டு மரபில் வளர்க்கும் முறைமையைச் சேக்கிழார் சிறப்பாகச் சுட்டிக்காட்டுகிறார் புனிதவதி நடைபயிலும் பருவத்திலும் மொழிபயிலும் பருவத்திலும் இறைவழிபாட்டு நெறியை உணரும் வகையில் வளர்கிறார். இச்செய்தி குழந்தைப்பருவத்திலே பயிற்றப்படும் பண்பாட்டுக் கல்வியை உள்ளடக்கிக் காட்டுகிறது. பெற்றோரின் வளர்ப்பு நிலை ஒரு வழிபாட்டு நெறி தழுவி நின்றதைக் காட்டும் சேக்கிழார் புனிதவதியின் உள்ளத்தில் பக்தி உணர்வு ஊற்றெடுக்கப் பெற்றோரே காரணம் என்பதையும் தெளிவுபடுத்தியுள்ளார். அதனை வருமாறு கூறுகிறார்.

*"பல்குபெருநற் கிளை உவப்பப் பயில் பருவச் சிறப்பெல்லாம்*
*செல்வமிகு தந்தையார் திருப்பெருகும் செயல்புரிய*
*மல்கு பெரும் பாராட்டின் வளர்கின்றார் விடையவர் பால்*
*அல்கிய அன்புடன் அழகின் கொழுந்தெழுவதென வளர்வார்."*

சிவன் மீது ஆராத அன்பு செலுத்தும் பயிற்சி புனிதவதிக்குப் பயிற்றப்பட்டது. அதுவே அவளுக்கு அழகைக் கொடுத்தது சிவவழிபாடு அவள் மனத்தைச் செம்மைப்படுத்தியது பொருள் பெருக்கும் வணிகர் வாழ்வியலில் வழிபாடு சிறப்பாகப் பேணப்பட்டதால் புனிதவதியின் வளர்ச்சி நிலையிலும் அது இணைந்திருந்தது. அடியாரைத் தொழுது வாழும் குணநலம் அவளுக்கு இயல்பாயிற்று

**அன்பின் வடிவம் .**

புனிதவதியின் வளர்ச்சி நிலையில் பக்தி இணைந்தமையால் அவள் தோற்றம் அன்பின் வடிவமாயிற்று உடல் வளர்ச்சியில் செழுமை வெளிப்புறத்தே நன்கு தோன்ற உள்ளத்திலே அன்பு நெறியின் வளர்ச்சியும் தோன்றியது. அவள் இவ்விவாகப்பருவத்தில் பயின்ற பண்புநெறி அன்பு நெறியை ஆற்றுப்படுத்தும் ஆற்றலை வளர்த்தது பண்டைய வாழ்வியல் மரபில் பருவம் அடைந்த இளம் பெண்கள் வீட்டை விட்டு வெளியே செல்வதில்லை அதனால் அவர்களுடைய அறிவும் ஆற்றலும் குறைவுபட்டன என்று கூறுவதற்கில்லை இவ்வாழ்க்கைக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரிய பயிற்சியும் பட்டறிவும் அவர்களுக்கு வீட்டிலே புகட்டப்பட்டது. இல்லத்தை நிர்வகித்து "இல்லாள்" என்னும் தகுதிப்பாட்டைப் பெற அதுவே உதவியது கன்னிமை காக்க வழிபாட்டுப் பயிற்சியும் அன்பு நெறியும் இன்றியமையாதது என்பதை அவர்கள் உணர வழி வகுக்கப்பட்டிருந்தது சேக்கிழார் இவ்விவாகப்பருவத்திலிருந்து மணம் முடித்து இல்லறத்தைப் பேணும் நிலையையும் புனிதவதியின் வரலாற்றிலே விளக்கியுள்ளார். அவர் பயன்படுத்தும் சொற்கள் புனிதவதியின் வரலாற்றிலே விளக்கியுள்ளார் அவர் பயன்படுத்தும் சொற்கள் புனிதவதியின் பண்பட்ட வளர்ச்சியைச் சுட்டி நிற்கின்றன.

சேயிழையை மகட்பேச, பெருமகள் எனப் புனிதவதியைக் குறிப்பிடும் சேக்கிழார் அவள் திருமணம் பற்றி வருமாறு குறிப்பிடுகிறார்.

*"அளி மிடை தார்த் தனதத்தன் அணிமாடத்துள் புகுந்து*
*தெளிதருநூல் விதிவழியே செயல்முறைமை செய்தமைத்துத்*
*தளிரடி மென் நகை மயிலை தாதவிழ் தார்க் காளைக்குக்*
*களிமகிழ் சுற்றம் போற்றக் கலியாணஞ் செய்தார்கள்"*

திருமணம் பெண்மையின் வளர்ச்சியில் ஒரு முக்கியமான கட்டமாகும் பெற்றோரின் அன்புக்கும் மேலாகப் புதியதொரு அன்பு நிலையை உணரும் வேளையில் பெண்மையின் அன்புவடிவம் மேலும் துலக்கம் பெறும் கன்னி என்ற நிலை மாறி மனைவி துணைவி, இல்லாள் எனச் சிறப்புப் பெயர் பெறும் நிலையாகும். பண்டைய காலமுதல் இன்றுவரை மாறாத பண்பாட்டுநிலை இதுவாகும் மனையறம் செய்யும் பெண்மையின் புதிய ஆற்றலைச் சேக்கிழார் சிறப்பாகப் பேசுகிறார் அன்பு நெறியில் நிற்கும் புனிதவதியின் கொடை மரபையும் சுட்டியுள்ளார் அடியவர்களுக்கு அமுதளிப்பதும் செம்பொன்னும் நவமணியும் செழுந்துகிலும் தகுதியறிந்து கொடுக்கும் உரிமையும் கடமையும் பெண்ணுக்கிருந்தன. வேண்டுவார் தகுதி கண்டு பரிவுடன் கொடை நல்கும் அன்புவடிவமாகப் புனிதவதியைச் சேக்கிழார் காட்டுவது பெண்மைக்கு வழங்கப்பட்ட சிறப்பைக் காட்டிநிற்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பண்பின் வடிவம்

இல்வாழ்க்கையின் சிறப்புக்கு விளக்கம் தரும் வள்ளுவர் குறள் புனிதவதியின் வாழ்வியலை விளங்கிக் கொள்ள உதவும் நல்லதொரு சான்றாகும்.

*"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கைப்*
*பண்பும் பயனும் அது"*

வீட்டிலிருந்து பெண் நடத்தும் வாழ்க்கைக்கு அன்பும் அறமும் உறுதியான அடித்தளமாக இருப்பவையாகும் மனையறத்தின் பண்பு இதுவே மற்றவர் மீது அன்பு செலுத்தவும் பிறருக்குத் தேவையானதைக் கொடுக்கவும் பயிற்சி நல்கும் சிறந்த கல்விக் கூடமாக வீடு விளங்க வேண்டும் அந்தப் பண்பான பயிற்சியை வழங்கும் தாய்மையே சிறந்த வாழ்வியலின் வழிகாட்டி இந்த உண்மையை உலகம் அறிந்திருந்தும் அதை உணராத நிலையும் உண்டு என்பதையே சேக்கிழார் எடுத்துரைக்கின்றார்.

புனிதவதியின் கணவன் பரமதத்தன் வணிகத்தொழிலில் வல்லவன் ஆனால் அன்பு நெறி வயப்படாதவன் இந்த முரண்பாடு புனிதவதியின் இல்லறத்தை எவ்வாறு பாதித்தது என்பதையே பெரிய புராணம் சொல்கிறது. அழகும் பொருளும் ஒன்று பட்டால் போதாது பண்பு நிலையும் ஒருமைப்பட வேண்டும்.

## பொறாமையின் வடிவம்

புனிதவதியின் அன்புநெறி அனைவரையும் பேணும் பண்புநெறியாகும் ஆனால் அவள் கணவன் பரமதத்தனோ வணிக நெறியில் நிற்கும் ஆண் மகன் தன்னிடம் வரும் வணிகர்களோடு பழகும் பாங்குடை நெறியை நன்கறிந்தவன். மாங்கனி இரண்டு வணிகர் கொடையாகப் பெற்ற போது அதை இல்லத்திற்கு அனுப்புகிறான் அதனை மதிய உணவுடன் சுவைப்போம் என மனதுள் திட்டமிட்டிருந்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Prof. V. SIVASAMY

அவ்வேளையில் வீட்டிலே பசியோடு வந்து சிவனடியாருக்கு அதில் ஒன்றைப் புனிதவதி கொடுத்து விட்டாள். தொண்டர் வீடு வந்தால் அவருக்கு ஏற்றது கொடுக்கும் கடமை நெறி நின்று புனிதவதி விருந்து அளிக்கின்றாள். நாதன் அடியாரைப் பசி தீர்க்கும் கடமையில் ஒன்றி அவர் பாதம் விளக்க நீர் முன்னளித்து பரிகலம் வைத்து இன்னடிசில் ஊட்டினார் கறியமுது முடியாத நிலையில் திரு அமுது ஊட்ட சோற்றமுதோடு கணவன் அனுப்பிய இரு மாங்கனிகளில் ஒன்றைப் படைத்தாள் அடியாரும். புனிதவதியின் அமுதூட்டும் அன்னை வடிவம் கண்டு வாழ்த்திப் போனார். நல்விருந்து போன பின்பு கணவன் வரவே கடப்பாட்டில் அவனுக்கு உணவு ஊட்டுகிறார் கறிகளுடன் உணவு உண்டு மகிழ்ந்த கணவன் உண்ண மாங்கனியையும் கலத்தில் அளிக்கின்றாள். மாங்கனியின் சுவையால் மகிழ்ந்தவன் மற்றதையும் கேட்கிறான் புனிதவதி உள்ளே சென்று இறைவனை வேண்டி இன்னொரு மாங்கனி கரத்தில் பெற்று அவனுக்கு அளிக்கின்றாள் முன்னையதைவிட இந்தக் கனியின் சுவை மேம்பாட்டிருப்பதை வணிக நெறி நின்று கணவன் உணர்கிறான். மனைவியிடம் காரணமும் கேட்கிறான் ஈசனருளால் பெற்றதைப் புனிதவதி உரைத்தபோது அவன் பொறாமையின் வடிவமானான். அவன் தோற்றத்தைச் சேக்கிழார் சொல்லோவியமாகக் காட்டுகிறார்.

*"ஈசனருள் எனக்கேட்ட இல்இறைவன் அது தெளியான்*
*வாசமலர் திரு அனையார் தமைநோக்கி மற்றிதுதான்*
*தேசுடைய சடைப் பெருமான் திருவருளேல் இன்னமுமோர்*
*ஆசில்கனி அவனருளால் அழைத்தளிப்பாய் என மொழிந்தான்"*

பொருள் கொடுத்தே எதையும் வாங்கும் பண்புடைய பரமதத்தனுக்கு மனைவியின் கூற்று நம்பமுடியாததாக இருந்தது ஆனால் அவள் இறையை வேண்டி இன்னொரு கனியைப் பெற்று அவன் கையில் கொடுக்க அந்த இல் இறைவன் அதிர்ச்சியடைந்தான். அவன் கையில் கொடுத்த கனி உடனே மறைந்து விட்டது பயத்தால் உள்ளம் தடுமாற தன் மனைவியை "அணங்கு" எனக்கருதி ஒருவருக்கும் ஒன்றுமே சொல்லாமல் ஊரைவிட்டே ஓடிவிடுகிறான். வணிகம் செய்யும்



Prof. V. SIVASAMY
UNIVERSITY OF JAFFNA
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்குடன் பொருள்களை மரக்கலத்தில் ஏற்றி கடல்வழி செல்கிறான் தன் நோக்கத்தை மனைவியிடம் உரைக்க முடியாத கோழையாக அவன் போன போது புனிதவதி அவன் பொறாமை வடிவத்தைக் கண்டும் காணாதவள் போல அன்பு நெறியில் அவன் வரவைக் காத்திருக்கிறாள்.

## தந்தை வடிவம்

ஊர் கடந்த பரமதத்தன் வணிகத்திறமையால் பல்பொருளீட்டி னான் அவன் செல்வச் செழுமையாய் அவ்வூர் வணிகன் பெற்ற கன்னி யொருத்தியை வதுவை செய்து வாழ்கிறான். முதல் மனையாள் புனித வதியை முற்றாக மனதிலிருந்து வெளியேற்றி இரண்டாவது மனைவியை மகிழ்வுடன் வைத்திருக்கிறான். அதன் பயனாக அழகிய பெண் மகவொன்றுக்குத் தந்தையாகிறான். அவன் வடிவம் வேறுபட்டது ஆனால் பெற்ற குழந்தைக்குப் "புனிதவதி எனப்பெயரிட்டு பக்தியின் வடிவான மனைவியை குழந்தையின் உருவிலே நினைவில் நிறுத்தி வாழ்கிறான். தந்தையான போது தான் அவன் அறிவு தெளிவடைகின்றது தெய்வம் தொழு குலமாக வணிகர் குலம் வாழ்ந்ததை உணர்கிறான். பரமதத்தன் புனிதவதியோடு சேர்ந்து வாழவேண்டும என நினைத்த உறவினர் அவனோடு அவளைச் சேர்த்து வைத்து மனையறம் பேண விரும்பு கின்றனர். பரமதத்தன் மறுமணம் செய்து வாழ்வதை அறிந்த போது புனிதவதியையும் அவனிருப்பிடம் சேர்க்க அழைத்துச் செல்கின்றனர்.

பரமதத்தன் வாழும் ஊர் சென்று செய்தி அனுப்புகின்றனர் ஆனால் அவனோ அச்சமடைகிறான். மனைவியைக் கைவிட்டு மற்றொருத்தியை மணந்து குழந்தைக்கும் தந்தையான குற்றவாளியாகப் புனிவதியிடம் சரண் புக எண்ணுகிறான். அதனை உடனே செயற்படுத்தி யதை சேக்கிழார் கூறும் பாங்கு சிறப்புடைத்து.

*"தானும் அம்மனைவியோடும் தளர்நடை மகவினோடும்*
*மானிளம் பிணைபோல் நின்ற மனைவியார் அடியில் தாழ்ந்தே*
*உமதருளால் வாழ்வேன் இவ்விளங்குழவி தானும்*
*பான்மையால் உமது நாமம் என்று முன் பணிந்து வீழ்ந்தான்."*



Prof. V. SIVASAMY
UNIVERSITY OF JAFFNA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுமணம் செய்து குழந்தையோடு வாழும் தந்தை என்ற தகுதிப்பட்ட வாழ்க்கையை முந்திய மனையாளிடம் இரந்து நிற்கிறான் உன்னை நான் மறக்கவில்லை. உன் பெயரைக் குழந்தைக்கு இட்டு உன்னை நான் நெஞ்சில் நினைந்து வாழ்கிறேன் எனப் பன்னி உரைக்கின்றான். அவனுடைய வேண்டுதல் மனையறம் செய்யும் நினைவோடு வந்த புனிதவதியைச் சிந்திக்கவைக்கிறது. அவனுடைய தந்தைவடிவம் தன்னை முற்றாக அவன் மறந்து வாழ்ந்ததைச் சான்று காட்டி நின்றது அவன் காலில் வீழ்ந்து வணங்கியது புனிதவதியின் நினைவில் சுமந்த இல்லற வாழ்வை அக்கணமே துறக்கும் துணிவைத் தந்தது. தன் பெயரைத் தாங்கி நின்ற அவன் குழந்தை அதனுடைய எதிர்காலத்துப் பண்பட்ட வாழ்க்கை எல்லாமே தனது அழகிய வடிவத்தை மாற்றுவதன் மூலம் செம்மையும் சீரும் பெறும் என்பதை நன்கு உணர்த்தியது. உறவினர் முன்னிலையில் தன் குற்றத்தை ஒத்துக் கொண்ட பரமதத்தனின் தன்னை முழுவதுமாக அடைக்கலமாக்கும் பக்திநிலை பலரையும் தெளிவுபடுத்த வேண்டும் எனவே உலக வாழ்வைத் துறக்கும் உறுதி பூண்டு இறைவனிடம் வேண்டுகிறார்.

*ஈங்கு இவன் குறித்த கொள்கை இது இனி இவனுக்காகத்*
*தாங்கிய வனப்பு நின்ற தசைபொதி கழித்திங்குன் பால்*
*ஆங்குநின் தாள்கள் போற்றும் பேய்வடிவு அடியேனுக்குப்*
*பாங்குற வேண்டும் என்று பரமர் தாள் பரவி நின்றார்.*

## பேய்வடிவம்

புனிதவதியின் வேண்டுதல் பலித்தது அன்று இல்லறம் பேணவென மாங்கனி கேட்டுப் பெற்றாள் இன்று துறவறம் பேணவென பேய்வடிவு கேட்டுப் பெற்றாள் வனப்பை எல்லாம் உதறி என்பே உடம்பாக பேய் வடிவாக வானமும் மண்ணும் எல்லாம் வணங்கும் பேய் வடிவு பெற்றாள் பெண்ணின் துறவு ஆணின் குற்றத்தை உலகம் அங்கீகரிக்க ஒரு வழியாக காலந்தோறும் தொடர புனிதவதி புதியதொரு வழிபாட்டு மரபை உருவாககினாள் இறைவன் கோலத்தை இயற்கையிலே கண்டு வழிபடும் தூய்மையான பக்தியின் வடிவம் ஒன்றைச் சமைத்தாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அற்புதத்திருவந்தாதியும் திருவிரட்டை மணிமாலையும் இறைவன் மீது பாடிப் பாமாலை புனையும் பணியைத் தொடக்கிவைத்தாள் இறைவன் உறையும் இடம் சென்று வழிபடும் மரப அவர் காட்டியதே கைலையில் வீற்றிருக்கும் இறைவன் கோலம் காணத்தலையால் நடந்து சென்ற அவள் பக்தி உறுதியானது பேய்வடிவுடன் சென்ற புனிதவதியை இறைவன் தேவியாரென வினவ "இவள் நம்மைப் பேணும் அம்மை காண்" என இறைவன் அறிமுகம் செய்கிறார் இறைவழி பேணுவதே பக்திநெறி என்பதை உலகமுணர வைத்த புனிதவதி அன்றிலிருந்து அம்மைவடிவு ஆனார் பேய்வடிவத்தைப் பெருமை சேர் வடிவமாக்கிய அம்மை காட்டிய பக்திநெறி அன்பின் ஊற்றாக சொல்மாலையாக புதிய பக்தி இலக்கியமரபாக உருவெடுத்தது "பக்தியின் மொழி தமிழ்" என்று பிறமதத்தவர் புகழ வைத்தது. உள்ளத்திலே உறுதியை வளர்க்க வழிபாடு ஒன்றே சிறந்தது என்பதைப் புனிதவதியின் வாழ்வியல் உணர்த்தியது மனிதப் பிறவியின் நோக்கத்தை அம்மையார் தன் விருப்பால் வெளிப்படுத்தினார்.

*"இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்.*
*பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்*
*மறவாமை வேண்டும் இன்னும் வேண்டு நான் மகிழ்ந்து பாடி*
*அறவா நீ ஆடும் போதுன் அடியின் கீழ் இருக்க என்றார்"*

பிறவியால் ஏற்பட்ட துன்பத்தை நன்குணர்ந்த அம்மை அதிலிருந்து மீளும் வழியையும் காட்டுகிறார் இறைவன் புகழ்பாடுவதில் உள்ள இன்பத்தை அனைவரும் அறிய வைக்கின்றார் இவர் வழிநின்று பாடிய பின்னவர் பலர் உளர். அம்மை யாருடைய வேண்டுகோளை இறைவன் ஏற்றுக் கொண்டார். தன்னைப் பாடும் பணியை அவரிடம் ஒப்படைக்கிறார்.

*"கூடு மாறருள் கொடுத்துக் குலவு தென் திசையில் என்றும்*
*நீடுவாழ் பழனமுதூர் நிலவிய ஆலங்காட்டில்*
*ஆடுமா நடமும் நீ கண்டானந்தஞ் சேர்ந்தெப்போதும்*
*பாடுவாய் நம்மை என்றான் பரவுவார் பற்றாய் நின்றான்."*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனுடன் ஒன்றியிருக்கும் பக்தி நிலையைக் காரைக் காலம்மையார் பெற்றார். பக்தி நெறியின் உன்னத நிலை இது புனிதவதியாக வாழ்ந்த வணிகப்பெண் வழிபடும் அம்மையாக உயர்நிலைபெற்றார். கணவன் அவரை தொழுது எழுந்தமையால் உயர்ந்தார் வள்ளுவர் சொன்ன குறள் ஒன்றின் ஆழமான பொருள் புனிதவதியின் வாழ்வியலால் விளக்கம் பெறுகிறது.

*"தெய்வம் தொழாள் கொழுநன் தொழுது எழுவாள்*
*பெய்யெனப் பெய்யும் மழை"*

இக்குறளில் கூறப்படும் பெண் கொழுநன் தொழுதமையால் தெய்வீக ஆற்றல் பெற்ற பெண்தான் என்பதனைப் புனிதவதியார் காட்டுகிறார். இல்லற நிலையில் கணவன் அவரைத் தொழ நேர்ந்த போது அவருடைய பக்தியின் வலிமையை உலகம் கண்டது. வாழ்க்கையைச் செம்மை செய்ய அம்மையாரின் பக்தி நெறி உதவியது. அவருடைய துறவு பரமதத்தனுடைய வாழ்க்கையை நேர் செய்தது. இரண்டாவது திருமணம் செய்த பரமதத்தன் அவரைத் தொழ எண்ணியது தன்னை மன்னிக்கும் தெய்வகுணத்தை அவரிடம் வேண்டிப் பெறுவதற்கே எனவே பேய்வடிவம் பெற்று அழகை ஒழித்த அம்மையை அவர் இளமை நிலையை வெறுத்தபோது இறைவன் அருள் செய்தான். ஆணுக்குத் துணையாக நிற்கும் இவ்வாழ்க்கையை அன்பு வாழ்க்கையென்றார். காரைக் காலம்மையார் இறைவனைப் பாடி வாழும் பக்திவாழ்க்கையை இறவாத இன்ப அன்பு வாழ்வென விளக்கிநின்றார். இது பட்டறிவினால் பெற்ற ஞானமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகளந்த நாயகிதாள் உரைப்பாய் நெஞ்சே!

(கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்)

மக்கள் கவிஞன் பாரதி பாடிய பாடல்களுள் "தெய்வப்பாடல்கள்" மக்களை நல்வழிப்படுத்தும் தன்மையானவை. இன்று ஏறக்குறைய 80 பாடல்கள் தெய்வப்பாடலாகக் கிடைக்கின்றன. பாரதி வழிபாட்டு நெறியினை மக்களுக்கு அறிவுறுத்த விரும்பிப் பாடிய பாடல்கள் இவற்றுள் அடங்கும் தன்னுடைய தெய்வீக அனுபவத்தைப் பாடல்களிலே பாரதி வெளிப்படுத்தும் முறைமை சிறப்பானது "பாட்டுத் திறத்தாலே இவ்வையத்தைப் பாலித்திட வேணும்" எனப் புதிய வரம் கேட்ட பாரதி அதனைத் தெய்வீகப்பாடல்களிலே தெளிவாக விளக்கியுள்ளான். தனது நெஞ்சத்தையே அழைத்து அவன் கூறும் அறிவுரை இன்று எமக்கும் பொருந்துவதாயுள்ளது.

*"இன்னுமொரு முறைசொல்வேன் பேதை நெஞ்சே!*
*எதற்கு மினி உளைவதிலே பயனொன்றில்லை*
*முன்னர் நம திச்சையினாற் பிறந்தோ மில்லை*
*முதலிறுதி இடைநமது வசத்தில் இல்லை*
*மன்னுமொரு தெய்வத்தின் சக்தியாலே*
*வையத்தில் பொருளெல்லாம் சலித்தல் கண்டாய்*
*பின்னையொரு கவலையுமிங் கில்லை......"*

மக்களுடைய வாழ்க்கையில் ஏற்படும் உலகியல் ரீதியான துன்பங்களை வெல்வதற்குப் பாரதி காட்டும் வழிபாட்டு நெறியே சிறந்ததாகும். எமக்கு ஏற்படும் துன்பங்களை நாமே தீர்க்க முடியும். அதற்கு வழிபாடே துணை செய்யும். பிறரால் எமக்கு ஏற்படும் துன்பங்களை நாம் எமது மனப்பக்குவத்தால் தீர்த்துக் கொள்ள முடியும். அன்புநெறியிலே எமது வாழ்க்கையை நாம் வாழும் போது எமது மனம் பக்குவப்படும் மனிதப்பிறவி பற்றிய உண்மை நிலையைத் தெளிவாக நாம் விளங்கிக் கொண்டால் எமது செயற்பாடுகளிலும் சிக்கல் இருக்காது. பாரதி அதனைத் தமது பாடலிலே குறிப்பிட்டுள்ளான். எமது பிறப்பு எம்முடைய விருப்பினால் பெற்றதன்று. அதனால் பிறப்பின் தொடக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Prof. V. SIVASAMY
UNIVERSITY OF JAFFNA

நடு இறுதி நிலைகளும் எம்முடைய பொறுப்பில் இல்லை. யாவும் தெய்வசக்தியால் நடைபெறுகின்றன உலகத்தில் எமக்குக் கிடைக்கும் பொருட்கள் எல்லாமே தெய்வத்தின் அருளால் கிடைக்கின்றன. இந்த உண்மைநிலைபற்றிய தெளிவையும் மக்களுக்குப் பாரதி உணர்த்தப் பாடினான். பாரதி உள்ளத்தில் வழிபாட்டு நெறி பற்றிய தெளிவு இருந்தது அதனைத் தனது பாடலிலே பதிவு செய்துள்ளான்.

*"சந்திர னொளியில் அவளைக் கண்டேன்*
*சரண மென்று புகுந்து கொண்டேன்*
*இந்திரி யங்களை வென்று விட்டேன்*
*எனதென் ஆசையைக் கொன்று விட்டேன்*
*பயனெண் ணாமல் உழைக்கச் சொன்னாள்"*
*பக்தி செய்து பிழைக்கச் சொன்னாள்*
*துயரி லாதெனைச் செய்து விட்டான்*
*துன்பமென்பதைக் கொய்து விட்டாள்."*

வாழ்க்கையில் துன்பங்களை எதிர்கொள்ளும் வேளையில் தெய்வம் பற்றிய எண்ணம் அதனைத் தாங்கும் ஆற்றலை நல்கும் மனத்திலெழும் ஆசைகளை வென்று பயன்கருதாமல் பிறருக்காக உழைக்கும் வாழ்க்கையை நாடவேண்டும் பயனை எதிர்பார்த்துச் செயலாற்றும் போது நாம் நினைக்கின்ற பயன் கிடைக்காதபோது துன்பமடைகின்றோம். இப்பலவீனமான மனித குணஇயல்பை மாற்றுவதற்குப் பாரதி காட்டும் வழியே "பக்தி செய்து பிழைத்தல்" இளமையில் வறுமையில் வாடிய பாரதி தெய்வத்தையே நம்பி வாழ்ந்தவன். அவனுடைய பிறப்புச் சூழல் வழிபாட்டுச் சூழல், அதனால் பக்தி செய்து பிழைக்க முடியும் என பாரதி நம்பினான். அவனுடைய பக்தி உணர்வு கவிதை என்னும் ஊற்றாக ஓடியது.

இயற்கையின் எல்லையற்ற ஆற்றல்களை எல்லாம் காளியின் அற்புத ஆற்றலாக எண்ணினான் பாரதி. அவன் பாடிய காளிப்பாட்டு பக்திநிலையின் தன்னையே அடைக்கலமாகத் தந்த உயர்ந்த நிலையை விளக்கி நிற்கிறது. ஐம்பூதங்களினதும் ஐம் பொறிகளினதும் ஆற்றலைக்காணும் போது காளியையே நேரில் காண்பது போன்ற ஓர் அற்புதமான பக்தி உணர்வு எம்மை வந்து ஆட்கொள்கிறது. உள்ளத்திலே தெளிவு மிக்கிருந்தால் நாம் இறைவனை உணர்ந்து கொள்வது மிக எளிது இந்த அநுபவத்தைப் பாரதி செந்தமிழால் காளிப்பாட்டாக்கினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"யாதுமாகி நின்றாய் காளி எங்கும் நீ நிறைந்தாய்
தீது நன்மையெல்லாம் காளி தெய்வலீலை யன்றோ
பூத மைந்துமானாய் காளி பொறிகளைந்துமானாய்
போதமாகி நின்றாய் காளி பொறியை விஞ்சி நன்றாய்.
இன்பமாகி விட்டாய் காளி என்னுளே புகுந்தாய்
பின்பு நின்னை யல்லால் காளி பிறிது நானுண்டோ
அன்பளித்து விட்டாய் காளி ஆண்மை தந்துவிட்டாய்
துன்பம் நீக்கிவிட்டாய் காளி தொல்லை போக்கிவிட்டாய்.

உலகம் எங்கும் நிறைந்திருக்கும் ஐம்பூதங்கள் பற்றிய தெளிவு மனிதனுக்கு மிகவும் இன்றியமையாதது. அவற்றை ஐம்பொறிகளாலும் உணர்கின்ற ஆற்றல்தான் இறை வழிபாடாகும். மனிதனுடைய ஐம்பொறிகளான மெய், வாய், கண், மூக்கு, செவி என்பவற்றால் ஐம்பூதங்களை அறியமுடியும். நமது கண்முன்னே தோன்றும் ஒரு அழகிய மலரை இந்த ஐம்புலன்களாலும் உணர்கின்றோம். கண்ணால் உற்றுப் பார்த்து அந்த மலரின் அழகை அறிகிறோம். அதன் நறுமணத்தை மூக்கினால் உணர்கிறோம். கைகளால் தடவிப் பார்த்து மலரின் மென்மை கண்டு வியக்கிறோம் செவியினால் அதன் உதிர்வின் ஒலியை உணர்கிறோம் மலரின் இதழ்களை உண்ணும் போது அதைச் சுவைக்கிறோம். இந்த இயற்கையின் தோற்றமான அழகிய மலர் பேராற்றல் கொண்டதல்ல. மனிதனால் கட்டுப்படுத்தக்கூடிய ஒரு தோற்றமே. ஆனால் மழை, வெயில் பனி, காற்று போன்ற இயற்கையின் வெளிப்பாடுகளில் இணைந்திருக்கும் பேராற்றல் மனிதனால் கட்டுப்படுத்தமுடியாத போது மனிதன் அவற்றிற்குப் பணிந்து வழிபாடு செய்யத் தொடங்கினான். இது வழிபாட்டு மரபாக இன்று வரையும் நிலைத்து நிற்கின்றது. இத்தகைய இயற்கை நிலையையே பாரதி காளியாகக் காண்கிறான்.

பாரதி கண்ட காளி பெண்மையின் வடிவாய் தாய்மையின் உருவமாய் தோற்றுகிறாள். சந்திரனின் ஒளியிலே அவளைக் கண்ட பாரதி தன் மனத்திலிருந்திக் கொண்டான். மகா சக்தியாக அவள் உலகெங்கும் நிறைந்திருப்பதைப் பாடினான் தாய் எனத் தன் மனத்தில் இருத்தி வழிபடும் முறைமையை விளக்கினான். ஏனையவர்களிடமிருந்து தன்னை வேறுபடுத்தி காளிக்கு முன்னே நின்று பேசுவது போலப் பாடுகிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*"தேடிச் சோறு நிதந் தின்று - பல*
*சின்னஞ் சிறுகதைகள் பேசி - மனம்*
*வாடித் துன்பமிக உழன்று - பிறர்*
*வாடப் பலசெயல்கள் செய்து - நரை*
*கூடிக் கிழப்பருவ மெயதி - கொடுங்*
*கூற்றுக் கிரையெனப் பின் மாயும் - பல*
*வேடிக்கை மனிதரைப் போல் - நான்*
*வீழ் வேனென்று நினைத்தாயோ"*

பக்தி வழி செல்லாத மனிதர்களின் செயற்பாடுகளை பாரதி வரிசைப்படுத்திக் கூறுகிறான் சோறு தின்பதே சிலருடைய முக்கிய குறிக்கோள் சோறு கிடைத்தால் அதை உண்டு விட்டுப் பிறரைப் பற்றியே குறைபேசிப் பொழுதைக் கழிக்கும் மனிதர்களே இன்று பலராயுள்ளனர். அதற்கும் மேலாகப் பிறரை மனம் நோகச் செய்யும் செயற்பாட்டிலும் ஈடுபடுவோர் பலருளர். பாரதியின் பார்வையில் இத்தகைய மனிதர்கள் யாருக்குமே பயன்படாதவர். பிறந்தது முதல் கிழப்பருவம் எய்தும் வரை பயனற்ற வாழ்வு வாழும் நிலை மாற வேண்டும் என்பதே பாரதியின் விருப்பம். "வேடிக்கை மனிதர்கள்" என பாரதி இனம் காட்டும் மனிதர்கள் இன்று வரையும் உள்ளனர். பிறருக்கு நன்மை செய்யாத சுயநலவாதிகளால் சமூகத்திற்கு எவ்வித நன்மையும் இல்லை. எனவே சமூகப் பயன்பாட்டிற்கு தான் உழைக்க எண்ணுகிறான். காளியிடம் அதற்காக வரம் கேட்கிறான்.

*"நின்னைச் சிலவரங்கள் கேட்பேன் - அவை*
*நேரே இன்றெனக்குத் தருவாய் - என்றன்.*
*முன்னைத் தீயவினைப் பயன்கள் - இன்னும்*
*மூளாதழிந்திடுதல் வேண்டும்.*
*என்னைப் புதியவுயராக்கி - எனக்*
*கேதுங் கவலையுறச் செய்து - மதி*
*தன்னை மிகத் தெளிவு செய்து - என்றும்*
*சந்தோஷங் கொண்டிருக்கச் செய்வாய்."*

தன்னுடைய முன்னைய பயனற்ற வாழ்க்கையைப் பாரதி தொடரவிரும்பவில்லை பக்தி நெறி நின்று பணியாற்ற வரம் வேண்டுகிறான். தன்னை ஒரு புதியவனாக மாற்றுவதற்கு இறையருள் துணை நிற்கும் என பாரதி எண்ணிச் செயற்படுகிறான். சமூகத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலவும் சீர்கேடுகளைத் தனது பாடல்களால் சுட்டிக்காட்டிய பாரதி ஒரு புதிய உயிரைத் தாங்கிய கவிஞனாக மாறிவிடுகிறான் தமிழ்க் கவிதை வரலாற்றில் புதிய மரபு ஒன்றைத் தொடக்கி வைத்த புரட்சிக் கவிஞன் பாரதியின் பாடுபொருள் தெய்வத்தைப் பாடுவதாக அமைந்த போது புதியதொரு கவிதை மரபையும் தொடக்கி வைக்கின்றது. பாமரமக்களும் எளிதில் விளங்கிக் கொள்ளக் கூடிய எளிய தமிழில் கவிதைகளை இயற்றினான் அவனுக்கு முன்னே தோன்றிய வழிபாட்டுநெறியில் நின்றவர்களுடைய கவிதைகள் விருத்தப்பாவால் அமைந்தவை. ஆனால் பாரதியின் தெய்வீகப்பாடல்கள் எளிதில் விளங்கிக் கொள்ளக்கூடிய யாப்புநெறியில் அமைந்தன. காளியிடம் அவன் வேண்டிப் பெற்ற புதிய உயிர் இப்பணியை ஆற்றத் துணைநின்றது. எனவே அதனைத் துலக்கமாகக் கேட்கிறான்.

*"நண்ணும் பாட்டினொடு தாளம் - மிக*
*நன்றா வுளத்திலமுந்தல் வேண்டும் - பல*
*பண்ணிற் கோடிவகை இன்பம் - நான்*
*பாடத் திறனடைதல் வேண்டும்."*

பாரதி தான் பாடும் பாடல்களை இறையருள் பெற்றுப் பாட விரும்புகிறான். பாட்டினால் உலகத்தை ஆற்றுப்படுத்த எண்ணும் பாரதிக்கு "வழிபாடு" வழிகாட்டுகிறது. புரட்சிக் கவிஞன் மக்கள் கவிஞன் மகாகவி என்றெல்லாம் பிற்காலத்தில் புகழப்பட்ட பாரதியின் கவிதை ஆற்றலுக்குக் காளியின் அருளே காரணமாயமைந்தது எனலாம் காளியைப் போற்றிப் பாரதி பாடிய கவிதைகள் இதற்குச் சான்றாயுள்ளன. தாயெனைக் காத்தல் உன் கடனே" எனக் கேட்கும் பாரதியின் பக்தி வைராக்கியம் அவனை யாருக்கும் அஞ்சாத கவிஞனாக்கிற்று காளியை மகாசக்தியாக மனதில் நிறுத்தி பாரதி வழிபட்ட புதிய வழிபாடு பின் வந்த வழிபாட்டு நிலைகளை விளக்க உதவியது. "மகாசக்தி வாழ்த்து" என்னும் பாரதியின் கவிதை இயற்கையில் இறை நிலையைக் காண்பதற்கு வழிகாட்டுகிறது. விரிந்த வான் வெளியாக பரிதியாக கரிய மேகத்திரளாக, காலும் மின்னென, விரியும் நீள்கடலாக, வாயுவாக, தேயுவாக, ஆயிரம் சக்தியாக வடிவம் கொண்டு விளங்கும் பேராற்றலைப் பாரதி எடுத்து இயம்புகிறான். அந்தச் சக்தி தன்னுடைய உள்ளக்கடலில் இருப்பதை உணர்ந்தான் பக்தி நிலையில் பாரதி இயற்கையோடு இணைந்து வாழும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறைமையையும் விளக்கி நிற்கிறான். உருவ வழிபாட்டிற்கு முன்னர் இருந்த இயற்கை வழிபாட்டு நிலையைப் பாரதி மீட்டுருவாக்கம் செய்து மக்கள் மனதிலே இருந்த முயல்கிறான். பாரதி வாழ்ந்த காலத்தில் புதிய சமயச் சிந்தனையும் நடை முறைகளும் இந்தியாவிலே வந்து செல்வாக்குச் செலுத்தின. மக்கள் மனத்தை மாற்றின. கருத்து நிலையில் சமயம் கற்பிக்கும முயற்சிகள் நடைபெற்றன. இத்தகைய புதிய வழிபாடு முன்னர் இருந்த வழிபாட்டை அநாகரிகமெனப் புறந்தள்ள முயன்றது. வடமொழியினால் இறைவனை வாழ்த்திக் கிரியா பூர்வமாகச் செய்யப்படும் வழிபாட்டு நடைமுறைகள் மூட நம்பிக்கைகள் என இழித்துரைக்கப்பட்டன. இப்புதிய சமய நெறிப்பரம்பல் விஷம் போல மக்கள் மனதிலே படிவதைப் பாரதி கண்டான். எனவே வழிபாடு செயற்கை நிலையில் செல்வதைத் தடுக்க எண்ணினான் தனது முன்னோர்களால் மரபு மரபாகப் பேணப்பட்டு வந்த வழிபாட்டுநெறி ஒரு வாழ்வியலுக்கான செந்நெறி என்பதை உணர்த்த எண்ணிக் கவிதை இயற்றினான். விஞ் ஞானம் விளக்கும் ஐம்பூதங்களின் இயற்கை நிலைகளே முன்னோரால் வழிபட்டவை என்பதை விளக்கப் பாடினான் அந்த அற்புதத்தை , அவன் உணர்ந்ததைப் பாடலில் பொதிந்து பாடினான் இயற்கையின் ஆற்றலைக் காளியின் தோற்றமாகக் காட்டினார். அந்தக் காளியின் ஆற்றல் பாரதி கண்ட அற்புதங்கள் அதையே போற்றிப் பாடினான்.

*"நிலத்தின் கீழ் பல் லுலகங்கள் ஆயினை*
*நீரின் கீழ் எண்ணிலா நிதி வைத்தனை*
*தலத்தின் மீது மலையும் நதிகளும்*
*சாருங் காடுஞ் சுனையும் ஆயினை*
*குலத்தில் எண்ணற்ற பூண்டு பயிரினம்*
*கூட்டி வைத்துப் பலநலந்துய்த்தனை*
*புலத்தை யிட்டிங் குயிர்கள் செய்தாய் அன்னே*
*போற்றி! போற்றி! நினதருள் போற்றியே!*

இயற்கையோடு ஒன்றிய வாழ்க்கையே மக்களுக்கு ஏற்றது என்பதைப் பாரதி தன்னுடைய பாடல்கள் மூலம் விளக்கிக் காட்டும் புதிய வழிபாட்டு நிலையைக் காட்டினான். காளியை இயற்கையின் எல்லையில்லாத ஆற்றலின் பெருவடிவமாக சொல்லோவியமாக வரைந்து காட்டினான் வேதங்கள் சொன்ன வழியும் இதுவே எனப் பாரதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கிக் காட்டினான். பாரதியின் வடமொழிப்புலமையும் வேதநெறிப் பயிற்சியும் முன்னோரது வழிபாட்டு நெறியை எடுத்து விளக்க உதவின ஆனால் மக்கள் அறியாத வடமொழியில் இறைவனைத் துதிப்பது பயனற்றது. இயற்கை நிலையிலே தான் உணர்ந்த ஆற்றல் நிலையை அந்த அநுபவத்தைத் தான்பேசும் மொழியிலே போற்றி வழிபடுவதே பொருத்தமானது என்பதைப் பாரதி உணர்த்தினான். மறைகளைக் கற்ற முனிவர் வழிபட்ட காளியைப் பற்றி பாரதி வருமாறு பாடியுள்ளான்.

*"காலமாம் வனத்தில் அண்டக் கோலமா மரத்தின் மீது*
*காளி சக்தி யென்ற பெயர் கொண்டு - ரீங்*
*காரமிட்டு உலவும் ஒரு வண்டு - தழல்*
*காலும் விழி நீலவன்ன மூல அத்து வாக்களெனும்*
*கால்களாறு உடையதெனக் கண்டு - மறை*
*காணும் முனிவோர் உரைத்தனர் பண்டு"*

இப்பாடலில் மறைவல்லோர் வழிபடும் தத்துவப் பொருளான காளியைப் பாரதி "வண்டு எனக் குறிப்பிடுகிறான் . விண்ணும் மண்ணுமாய் நிற்கும் சக்தி வெள்ளத்தை இயற்கையான தோற்றத்தைச் சாதாரணமான பொது மக்களும் உணர்ந்து கொள்ள பாரதி வழிகாட்டினான். இன்று கோயில்களிலே குடி கொண்டிருக்கும் காளியின் ஆற்றலை உணரச் செய்தான். வேதமாய் அதன் முன்னுள்ள நாதமாய் விளங்கும் வீரசக்தியை அன்பு வடிவமாகக் காணப்பாடினான் உண்மையான சக்தியின் தோற்றத்தை இயற்கை நிலையில் நின்று கண்டவர்க்குத் துன்பமில்லை. இயற்கையின் போக்கை ஊன்றிக் கவனித்தால் அதை ஆய்ந்திடில் துயரமெல்லாம் போகும். காளித்தாயின் அருளால் எல்லாவற்றையும் நாம் அடையலாம். பாரதியின் பாட்டு எம்மை வழிநடத்துகிறது.

*"நித்திய மிங் கவள் சரணே நிலையென் றெண்ணி*
*நினக்குள்ள குறைகளெல்லாந் தீர்க்கச் சொல்லி*
*பக்தியினாற் பெருமையெல்லாம் கொடுக்கச் சொல்லி*
*பசிப்பிணிகளில்லாமற் காக்கச் சொல்லி*
*உத்தம நன்னெறிகளிலே சேர்க்கச் சொல்லி*
*உலகளந்த நாயகிதாள் உரைப்பாய் நெஞ்சே!*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனத்திலுள்ள சிறுமைகளை நீக்கிக் கல்வியினால் பக்தி நெறி செல்லுவதே சிறந்தது கருணை உள்ளத்தோடு கடமைகளைச் செய்யவேண்டும். காளியின் அருளே நமது வாழ்வுக்குத் துணை என்பதை உணர வேண்டும். சுதந்தர உணர்வும் மொழிப்பற்றும் கொண்ட பாரதியின் பாடல்களுக்கு அடிநாதமாக அமைவது பாரதியின் வழிபாட்டுச் சிந்தனையே. காலத்தால் அள்ளுண்டு போகாத வழிபாட்டு நெறியை பாரதி மீண்டும தன் கவிதைகளில் பாடிய போது அவனுடைய இலக்குத் தெளிவாகத் தெரிகின்றது. எம்மைப் பிற மொழியும் பண்பாடும் ஈர்க்கின்ற வேளையில் எமது இருப்பு நிலையை மீண்டு நினைவில் நிறுத்திக் கடமையாற்ற வேண்டும் என்ற செய்தியே பாரதியின் காளி பற்றிய பாடல்களில் பொதியப்பட்டுள்ளது. பக்தி நிலையில் நாம் ஒரு நல்ல பயிற்சியைப் பெறுகிறோம். நமது முன்னோர்களது வழிபாட்டு நெறியே இயற்கையானது என்பதைப் பாரதி கவிதையால் எடுத்துரைத்தான் காளியிடம் அடைக்கலமாகி இயற்கையின் பேராற்றலை உணர்ந்து வாழும் வாழ்வே பாரதி காட்டும் புதிய வழிபாட்டு நெறி அதுவே எக்காலத்திற்கும் ஏற்ற செம்மையான செல்நெறி என்பதில் ஐயமில்லை.

□□□

12486 SC



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னையவள் வையமெலாம் ஆதரிப்பாள்

(கலாநிதி, மனோன்மணி சண்முகதாஸ் )

உலகமெங்கும் அன்னை பெரு மதிப்புடன் போற்றப்படுகின்ற உறவாகும். கருவாக எம்மை வயிற்றிலே சுமந்து பெற்றெடுத்து பாலூட்டி சீராட்டி வளர்த்து மனிதராக உலகிலே மதிப்புடன் வாழ வைப்பவள் அன்னையே அவளுடைய அன்புக்கு ஈடாக இறையன்பு தான் உண்டு ஆனால் மாணிவாசகர் தாய் அன்பை விட இறையன்பே மேலானது எனக் கூறியுள்ளார் "பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிவுடையவள்" இறைவன் என இறையன்பை விளக்கியுள்ளார். குழந்தையின் பசிநேரத்தை நன்கு உணர்ந்து பாலூட்டும் தாயை விட இறைவன் உயிர்கள் மீது கொண்ட அன்பு உயர்வானதென்கிறார்.

அன்னையின் அன்பை விட, அகில உலகத்திற்கும் மாதாவான பராசக்தியை வழிபட என ஒரு சிறப்பான காலத்தை நம்முன்னோர் கணித்து உள்ளனர். அந்த வழிபாட்டுக்கென ஒதுக்கப்பட்ட பத்து நாட்களைப் பகுத்து வழிபாடு செய்யும் நடைமுறையையும் செயற்படுத்தி வந்துள்ளனர். முதல் ஒன்பது நாட்களையும் "நவராத்திரி" என்றும் பத்தாவது நாளை "விஜயதசமி" என்றும் அழைத்தனர் வட நாட்டில் இப்பத்து நாட்களையும் "தசரா" எனக் குறிப்பிடுவர்.

புதுமைக் கவிஞன் பாரதி நவராத்திரிப் பாட்டு என்று ஒரு கவிதை மூலம் பராசக்தி வாணி, ஸ்ரீதேவி, பார்வதி என்னும் பெண் தெய்வங்களைப் பணிந்து வழிபாடு செய்ய வேண்டியதன் இன்றியமையாமையை உணர்த்தி உள்ளான். பாரதியின் எண்ணத்தில் பெண் தெய்வம் பற்றிய தெளிவு மிக்கிருந்தது. அதனால் பாடலை அச்சிந்தனை வெளிப்பாட்டிற்கமைய வடிவமைத்துள்ளான் வாணி, ஸ்ரீதேவி, பார்வதி என்னும் மூன்று தெய்வங்களையும் மாதா பராசக்தியாகக் காண்கிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Prof. V. SIVASAMY
UNIVERSITY

*"மாதா பராசக்தி வையமெல்லாம் நீ நிறைந்தாய்*
*ஆதாரம் உன்னையல்லால் ஆரெமக்குப் பாரினிலே*
*ஏதாயினும் வழி நீ சொல்வாய் எமதுயிரே*
*வேதாவின் தாயே மிகப் பணிந்து வாழ்வோமே."*

பாரதி எல்லோருக்கும் வாழும் முறைமையைக் கற்பிக்க விரும்பிய கவிஞன் பாப்பாப் பாட்டிலே குழந்தைக்கு வாழும் முறைமையைச் சொல்லிக் கொடுக்க விரும்பியவன் உயிர்களிடத்தில் அன்பு செலுத்தித் தெய்வம் உண்மையென்பதை உணர்ந்து வயிரமுள்ள நெஞ்சோடு வாழ வேண்டும் என்று அப்பாடலில் விளக்கியுள்ளான். மனிதருக்குத் தெய்வத்தைப் பணிந்து வாழுவதே சிறந்தது எனக் கூறுகிறான். இந்த உலகமெல்லாம் நிறைந்திருக்கின்ற பேராற்றலை "மாதா பராசக்தி" என இனங்காட்டுகிறான். அவளையே எமக்குத்துணை எனக் கொண்டு வாழ்வதே நன்று. எமக்கெல்லாம் உயிராக விளங்கும் பராசக்தியைப் பணிந்து வாழும் காலமாக நவராத்திரியை விளக்குகிறான். எம்மைச் சுற்றியிருக்கும் உறவுகளையும் நட்புகளையும் நாம் நிலையானது என்று கொள்வதற்கில்லை அன்னை பராசக்தியே உண்மையில் எம்மைத் தாங்கி நிற்பவள் மனித வாழ்வியலுக்கு இன்றியமையாத வீரம், பொருள் அறிவு என்ற மூன்றையும் எமக்குத் தரும் அன்னையும் அவளே.

வாணி, கலைத்தெய்வம் எனப் பாரதி சிறப்பாக அடையாளம் காட்டுகிறான். நாவன்மையையும் சொல்வன்மையையும் எமக்குத் தரும் அன்னை அவளே. உலகியலில் எமது பெற்ற தாயே எமது முதலாசிரியர் தாயின் அறிவூட்டலே அடிப்படையானது. அதே போல மணிபோன்ற சொற்களைப் பேசும் ஆற்றலை வாணி எமக்கு நல்குவாள். சிறந்த பொன்னும் மதிப்புள்ள முத்தும் விரவிய மாலை ஒருவருடைய கழுத்திற்கு எவ்வாறு அழகூட்டுகிறதோ அதே போல அறிவுமுத்துமாலை தந்து எமது உள்ளத்தை அழகாக்குபவள் இவளே. உலகிலுள்ள காட்சிகளை யெல்லாம் சொல் ஓவியமாக வடித்துக் காட்டும் ஆற்றலுக்குச் சாட்சியாக உள்ள கலைத் தெய்வத்தை அவளுடைய பாதம் பணிந்து வழிபாடு செய்ய வேண்டும் என முதலில் வழி காட்டுகிறான் அறிவுத் தெய்வமாகிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் மாட்சியுடையவள். இங்கே மனித வாழ்வியலில் அறிவூட்டல் பணியைச் செய்யும் அன்னையரை நினைக்க வைக்கின்றான்.

அடுத்துச் செல்வத்தை நல்கும் தெய்வம் ஸ்ரீதேவியைப் பற்றிப் பாடலில் வருமாறு கூறுகிறான்.

*"பொன்னரசி நாரணார்தேவி புகழரசி*
*மின்னுநவ ரத்தினம் போல் மேனியழகுடையாள்*
*அன்னையவள் வையமெல்லாம் ஆதரிப்பாள் ஸ்ரீதேவி*
*தன்னிரு பொற்றாளே சரண் புகுந்து வாழ்வோமே"*

பொன்னுக்கு அரசி நாராயணனின் தேவி. புகழுக்கு அரசி மின்னுகின்ற நவரத்தினம் போன்ற திருமேனியழகுடையவள் உலகம் முழுவதையும் ஆதரிக்கும் அன்னை அவளுடைய பொன்தாள் சரணமாகி வாழவேண்டும் என்பதே பாரதி காட்டும் நவராத்திரி வழிபாடு "பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை" என்ற வள்ளுவன் கூற்றையும் பாரதியும் எடுத்தியம்பியுள்ளான் . ஸ்ரீதேவியின் அழகான தோற்றம் அவள் செல்வத்தின் தெய்வம் என்பதைக் காட்டி நிற்கிறது. பொருளால் உலகிலுள்ள அனைவரையும் பாதுகாக்க முடியம் எனவே பொருள் வேண்டின் அவளுடைய பொற்றாளிலே சரண்புக வேண்டும என்பதே பாரதியின் வழி காட்டலாகும்.

பார்வதி தேவியைப் பற்றி அடுத்துப் பாடும் போது அவள் மலையரசன் மகளாக மலையிலே பிறந்ததை முதலில் குறிப்பிடுகிறான். எல்லோருக்கும் சுகத்தைச் செய்யும் சங்கரனை மாலையிட்ட செய்தியை அடுத்துக் கூறுகிறான். இந்த அறிமுகதின் பின்னர் பார்வதியின் மிகச் சிறந்த செயற்பாட்டைப் பாடலிலே பதிவு செய்துள்ளான்.

*"உலையூதி உலகக் கனல் வளர்ப்பாள்*
*நிலையிலே உயர்த்திடுவாள் "*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணவிடும் கடமை பெண்ணுக்குரியது "தாய்" என்ற சிறப்புப் பெயரும் இயற்கையாகக் கொண்டுள்ள கொடை மனமும் இப்பணியைச் செவ்வனே பெண் செய்யத் துணைநிற்கிறது உலை ஏற்றிய அடுப்பிலே நெருப்பை மூளச் செய்ய அவள் ஊதுகின்ற செயலால் தான் உலகமக்கள் யாவரும் வயிற்றுப்பசிப்பிணி தீர்கின்றனர் இந்த உணவூட்டும் செயலால் ஒருவன் தன் நிலையில் உயர்ந்து மனிதனாகின்றான். அதனால் பார்வதியின் பாதத்தை எமது தலையிலே தாங்கி வாழ வேண்டும் எனப் பாரதி பாடியுள்ளான்.

இந்த நவராத்திரிப் பாட்டில் பாரதியின் பக்தி நெறி தெளிவாகப் புலபப்படுத்தப்பட்டுள்ளது. மாதா பராசக்தியை என்றும் பணிந்து வாழச் சொன்னான். ஆனால் மற்றய மூன்று தெய்வங்களையும் வழிபடும் முறைமை ஒன்று காட்டியள்ளான் "மலரடி சூழ்தல்", "பெற்றாள் சரண்புகுதல்", "பாதம் தலையிலே தாங்கல்" எனப்பகுத்துப் பாடியுள்ளான் கோவிலுக்குச் சென்று இறைவன் திருவடிகளைக் கண்ணாரக் கண்டு தொழும் நிலை முதலாவது மனப் பக்குவ நிலை. அடுத்தது இறைவன் திருவடிகளை அடைக்கலமாகக் கருதி முற்றும் திருவடியே என முழுமனதோடு வழிபடல். மூன்றாவது இறைவன் பாதத்தைத் தலையிலே சுமப்பது போன்ற மனப்பக்குவத்துடன் புலன் ஒன்றி வழிபடல் இராமாயணத்தில் பரதன் இராமன் பாதுகைகளைத் தலையிலே சுமந்து சென்ற போது இத்தகைய மனப்பக்குவத்துடன் சென்றான்.

பாரதி பெண் தெய்வங்களை வழிபடும் நடைமுறையைக் கவிதையிலே ஆவணப்படுத்த முயன்ற பொது மக்கள் கவிஞன் அவனுடைய காலத்தில் மக்களிடையே இருந்த வழிபாட்டு நடைமுறைகள் நம்பிக்கைகள் யாவும் மூடத்தனமானவை என்ற கருத்து மேலைத் தேசத்தவரால் பரப்பப்பட்டு வந்தது. ஆங்கிலப் பண்பாட்டின் செல்வாக்கும் கிறிஸ்தவ மதப்பரம்பலும் இதற்கு முக்கிய காரணங்களாக இருந்தன. இதனால் பரவுகின்ற பிற நாட்டுப் பண்பாட்டைத் தடுக்கக் கவிதையைக் கையில் எடுத்துக் கொண்டான் "செய்யும் கவிதை பராசக்தியாலே செயப்படுங்காண் வையத்தைக் காப்பவள் அன்னை சிவசக்தி" என்ற கவிதைக்குரல் சமூகத்தை நெறிப்படுத்தும் குரலாகவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒலித்தது இதனால் மூன்று விடயங்களைத் தன் மனத்திற்கு செய்யச் சொல்லிக் கட்டளையிட்டான்.

*"நமக்குத் தொழில் கவிதை நாட்டிற்குழைத்தல்*
*இமைப் பொழுதுஞ் சோரா திருத்தல் - - உமைக்கினிய*
*மைந்தன் கண நாதன் நங்குடியை வாழ்விப்பான்*
*சிந்தையே இம்மூன்றும் செய்"*

உலகத்து நடைபெறும் தொழில்கள் எல்லாமே சக்தியின் அருளால் நடைபெறுகின்றன. எனவே அவளையே சார்ந்து நின்றால் சஞ்சலம் வராது என்பது பாரதியின் நம்பிக்கை. வேண்டுவன எல்லாம் பராசக்தியிடம் கேட்டுப் பெறலாமென ஆற்றுப்படுத்துகின்றான். உலகியல் வாழ்க்கைக்குத் தேவையான எல்லாவற்றையும் பரா சக்தியிடம் கேட்டுப் பெறலாம் என எல்லோருக்கும் நம்பிக்கை யூட்டுகிறான். பராசக்தியின் காவலுடன் தனது பாட்டுத்திறத்தாலே இவ்வையத்தைப் பாலித்திட வேண்டுமென்று பாரதி பராசக்தியிடம் கேட்பது மக்களை வழிபாட்டுநெறியில் புகுத்த வேண்டும் என்ற நோக்கத்தையே உணர்த்துகிறது.

ஒரு பொது மகனாக நின்று வழிபாடு செய்யும் பாரதி அன்னையிடமே வேண்டுதல் செய்கிறான்.

*எண்ணிய முடிதல் வேண்டும்*
*நல்லவே எண்ணல் வேண்டும்*
*திண்ணிய நெஞ்சம் வேண்டும்*
*தெளிந்த நல் லறிவு வேண்டும்*
*பண்ணிய பாவ மெல்லாம்*
*பரிதிமுன் பனியே போல*
*நண்ணிய நின்முன் இங்கு*
*நசித்திடல் வேண்டும் அன்னாய்!"*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதி பெண்மையின் தெய்வீக ஆற்றலைப் பற்றி நன்கு உணர்ந்தமையால் பாடல்களில் பயன்படுத்தும் சொற்களும் பலவாயுள்ளன. மாதா, தாய், அன்னை அம்மா என்னும் சொற்களை உலகியல் வாழ்வுக்கூடான நிலை நின்று பயன்படுத்துகின்றான். மாதா தாய் அன்னை என்ற சொற்களை நாட்டோடு இணைத்து தேசப்பற்றை ஊட்டுகிறான்.

*“வந்தே மாதரம் என்போம் - எங்கள்*
*மாநிலத் தாயை வணங்குதும் என்போம்”*
*“அன்னை பயங்கரி பாரத தேவி”*
*“மாதா பராசக்தி வையமெலாம் நீ நிறைந்தாய்”*
*“வேண்டுமடி எப்போதும் விடுதலை அம்மா”*

எனவே பாரதி உலக வாழ்க்கையில் நாம் காணும் அன்னையை உலக மகா சக்தியாக விளக்கிக் காட்டுகிறான் எனலாம். சக்தியின் வடிவமாக அதையே பக்தி நெறி நின்று பாடுகிறான். நவராத்திரி வழிபாட்டின் உலகியல் பண்பைப் பாரதியின் பாடல்களில் காணலாம் “அம்பிகையைச் சரண்புகுந்தால் அதிக வரம் பெறலாம். நம்பினார் கெடுவதில்லை” என எமது வாழ்வியலுக்கு ஒரு அடித்தளம் அமைத்துக் காட்டியுள்ளான் பாரதியின் “முத்துமாரி” பற்றிய பாடலில் ஒரு உலகுதழுவிய வழிபாட்டை வற்புறுத்துகிறான். முத்துமாரியை “உலகத்து நாயகி” என்றும் “தேசமுத்துமாரி” என்றும் எல்லோருக்கும் பொதுவான தெய்வமாக்கியுள்ளான். தாயின் அன்பின் வழிநின்று சக்தியின் அருளுக்கு வழிகாட்டும் பாரதியின் ப்க்திநெறி எல்லோரையும் வழிப்படுத்தும்.

❑❑❑



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேச முத்துமாரி

(கலாநிதி, மனோன்மணி சண்முகதாஸ்)

தேசிய மகாகவி பாரதியாரின் பாடல்களின் பக்திப் பாடல்களும் உண்டு மேலைத்தேயப் பண்பாடு தமிழ்நாட்டிலே செல்வாக்குப் பெற்றகாலத்தில் தமிழர் பண்பாடு பற்றிய தெளிவை ஊட்டப் பாடியவன் பாரதி பாட்டுக்கொரு புலவன் பாரதி என்ற சிறப்புப் பெற்றுத் தமிழ் மொழியுணர்வை ஊட்டியவன். இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற கவிஞனாக நவீன தமிழ்க்கவிதையை இலக்கிய உலகிற்கு அறிமுகம் செய்து வைத்தவன். பாரதி பாடிய தோத்திரப் பாடல்கள் வழிபாட் டுணர்வைப் பரப்பும் தெய்வீகப் பாடல்களாகும். அப்பாடல்களில் "முத்துமாரி" பற்றிய இரு பாடல்கள் இடம் பெற்றுள்ளன. அப்பாடல்களில் பாரதியின் பக்தியுணர்வு வெளிப்படும் பாங்கினையே இக்கட்டுரை எடுத்துரைக்கவுள்ளது.

பாரதிபாடிய முத்துமாரி, தேசமுத்துமாரி என்றும் இருபாடல் களும் ஒரு வழிபாட்டு நிலையை உணர்த்தும் பாடல்களாகும். பாரதியினுடைய வாழ்க்கையில் புதுச்சேரியில் வாழ்ந்த காலம் மிகவும் முக்கியமானதாகும். தன்னுடைய சொந்த இடத்திலே வாழ முடியாத நிலையில் இன்னொரு இடத்திலே சென்று வாழும் போது வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கி நிற்பது இயல்பே சொந்த மண்ணில் வாழ முடியாத அவலநிலையை எண்ணும் போது அந்த வேதனையைப் போக்க இறைவனிடம் வேண்டுதல் செய்யும் மன இயல்பு மனித இயல்பாகும் பாரதியும் இத்தகைய தொரு வேதனையைத் தீர்க்கவே முத்துமாரியைச் சரணபுகுந்திருந்தான். அதனால் தான் வழிபடும் முத்துமாரியைப் பற்றி அனைவரும் அறிய வேண்டுமென விரும்பினான். எனவே தனது பாடலில் முதலிலேயே முத்துமாரியை "உலகத்து நாயகியே" என விளித்துப் பாடுகிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*"உலகத்து நாயகியே - எங்கள் முத்து*
*மாரியம்மா எங்கள் முத்துமாரி*
*உன்பாதம் சரண்புகுந்தோம் - எங்கள் முத்து*
*மாரியம்மா எங்கள் முத்துமாரி"*

எல்லா உலகங்களுக்கும் நாயகியான முத்துமாரியின் பாதங்களிலே முழுமையாக அடைக்கலம் புகுந்து விட்டால் எல்லாத்துன்பங்களிலிருந்தும் விடுத்லை பெற்று விடலாம் என்ற நம்பிக்கை பாரதியிடம் இருந்தது. இப்பாடல் பாரதியார் புதுச்சேரியில் வாழ்ந்த வீட்டிற்கு அண்மையில் இருந்த முத்துமாரி கோயில் மீது பாடப்பட்டதென்பர் (பாரதி நூற்றிருபத்தைந்தாவது ஆண்டு சிறப்பு விழாவின் போது கட்டுரையாளருக்கும் இத்தலத்தைச் சென்று வழிபடும் பேறு கிடைத்தது). மிகச் சிறிய தொரு கோயிலாக இருந்தாலும் பாரதியின் மனமாற வழிபாடு செய்ய ஏற்ற கோயிலாக இருந்தது "முத்துமாரி" என்னும் பாடலில் முத்துமாரி என்ற சொல் பாரதியால் 32 முறை பயன்படுத்தப்பட்டுள்ளது. முத்துமாரி என்ற சொல்லைச் சொல்கின்ற போது ஒரு மந்திரத்தை உச்சரிக்கின்ற உணர்வைப் பாரதி பெற்றிருப்பான் போலும் மிக அன்னியோன்யமாக "எங்கள் முத்துமாரி" என்றே பாரதி அழைத்துப்பாடுகிறான்.

மனித வாழ்வியலின் குறைகளை யெல்லாம் பாடலிலே சொல்லிக் காட்டுகிறான். தனது வாழ்க்கையில் பெற்ற அநுபவங்கள் பாரதிக்கு ஒரு தெளிவான சிந்தனையை ஏற்படுத்தியுள்ளன. கலகத்து அரக்கர், பல கற்றும் கேட்டும் பயனற்ற நிலை. நிலையெங்கும் காணாமை, மனம் வெளுக்க வழியின்மை, பேதமை போன்ற மனித இயல்பான நிலைகளையெல்லாம் பாடலிலே சொல்லி முத்துமாரியிடம் மன்றாடுகிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*"நிலையெங்கும் காணவில்லை எங்கள் முத்து*
*மாரியம்மா எங்கள் முத்துமாரி*
*நின்பாதம் சரண் புகுந்தோம் எங்கள் முத்து*
*மாரியம்மா எங்கள் முத்துமாரி"*

எல்லாச் சிக்கல்களையும் முத்துமாரி தீர்த்து வைப்பாள் என்ற நம்பிக்கை எல்லோருக்கும் ஏற்பட வேண்டுமெனப் பாரதி விரும்பினான். மனத்துள்ளே புகுந்துள்ள தீய எண்ணங்களை ஒழிப்பதற்கு வழிபாட்டுப் பயிற்சி ஒன்றுதேவை. இந்தியாவிலே அந்நிய மொழியும் அந்நியமதமும் செல்வாக்குப் பெறும் வேளையில் சுதேசிகள் தமது மொழியையும் மதத்தையும் கைவிட்டு அவற்றைக் கடைப்பிடிக்க விரும்பினர். இதனைப் பாரதி தடுக்க எண்ணினான். "கலகத்தரக்கர்" என்று அவற்றைக் குறிப்பிட்டுள்ளான். தவறான வழியிலே செல்லும் மக்களை நெறிப்படுத்தப் பாரதி செய்த முயற்சிகள் பல பலவற்றைக் கற்றும் பலவற்றைக் கேட்டும் எந்தவிதமான பயனும் ஏற்படவில்லை மனத்தைத் தெளிவுபடுத்த வழியில்லை. பிணிக்கு மருந்து இருந்த போதும் எங்கள் பேதமைக் குணம் மாற மருந்தில்லையே என மாரியிடம் பாரதி முறை யிடுகிறான். எனவே அடைக்கலம் புகுந்து விடுவதாகக் கூறுகிறான்.

வழிபாட்டு நிலையில் மாரியைப்பற்றிப் பாரதி சிந்திக்கும் போது அவளை உலகத்து நாயகியாகக் காண்பது, அவனுடைய வழிபாட்டு நிலையின் தனித்துவத்தைக் காட்டுகிறது. "ஞானபூமி" என்னும் பத்திரிகையில் உலகெங்கும் "மாரி" என்ற சக்தியின் நாமம் துலங்குகிறது. என பாரதி ஓர் கட்டுரை எழுதியுள்ளான். அதில் கீழ்க்காணும் பகுதி மாரி வழிபாட்டை பாரதி ஓர் உலக வழிபாடாக எண்ணியதை விளக்குகிறது. உதாரணமாக கிறீஸ்து நாதரின் மாதாவுக்கு மாரி என்று பெயர் (இதனை ஆங்கிலேயர் மேரி என்று பிழையாக உச்சரிக்கிறார்கள்) இந்த மாரி என்னும் பெயர் பலஸ்தீனா தேசத்தில் கிறிஸ்து பிறப்பதற்கு முன் எத்தனையே நூற்றாண்டுகளாக வழங்கி வந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கு மாத்திரமன்று அங்கிருந்து வடக்கே நெடுந்தூரம் கருங்கடல் வரையும் உள்ள நிலமுழுவதிலும் மிகவும் பழமைக் காலங் களிலே மாரி என்பதோர் தெய்வப் பெயர் வழங்கிற்று. கருங்கடலுக்கும் தர்தாநெல் (இங்கிலிஷ் டார்டானெல்ஸ்) ஜலசந்திக்குமிடையே (ஸங்கரியுஸ் என்று கிரேக்க பாஷையில் சொல்லப்படும் சங்கரி நதிக்கரையில் முற்காலத்தில் பிஸ்கேனு (Piscenus) என்றதோர் பெரிய நகரமிருந்தது. அங்கு பெருங் கோயிலொன்று கட்டி மாரியம்மா என்ற தெய்வத்தை வணங்கினார்கள்.

அதற்கருகே மாரியாந்தினி என்றோர் நகரம் இருந்தது. இந்த மாரியை உலகத்தின் தாயென்றும் எல்லாத்தேவர்களுக்கும் ஆதாரமான மகாசக்தியென்றும் அந்த நாட்டிலும் சுற்று வட்டங்களிலுமுள்ளோர் கொண்டாடினார்கள். இயற்கைத் தெய்வமே மகாசக்தி என்று சொல்லப்படுகிறது. அதனையே பூர்வகாலத்தில் பல்வேறு தேசத்தார் பல பெயர் கூறி ஈசிஸ் (ஈசி) என்றும் மாரி யென்றும் துர்க்கை யென்றும் வணங்கி வந்தார்கள்.

இக்கட்டுரை பாரதியின் தேச முத்துமாரி என்ற பாடலின் உருவாக்கத்திற்கான காரணத்தைக் காட்டுகிறது. இப்பாடல் பாரதி வழிபாட்டுணர்வின் தன்மையை நன்கு விளக்குகின்றது.

*"தேடியுனைச் சரணடைந்தேன் தேசமுத்துமாரி*
*கேடதனை நீக்கிடுவாய் கேட்ட வரந்தருவாய்*
*பாடியுனைச் சரணடைந்தேன் பாசமெல்லாங்களைவாய்*
*கோடி நலஞ் செய்திடுவாய் குறைகளெல்லாந் தீர்ப்பாய்"*

தேசத்தைக் காக்கும் முத்துமாரியைத் தேசமுத்துமாரி எனப் பாரதிகுறிப்பிடுவது வழிபாட்டின் வளர்ச்சி நிலையைக் காட்டுகிறது. வீட்டுநிலை, சமூகநிலை, நாட்டுநிலையென வழிபாடு பரவலாக்கம் பெற்றது. தனியொருவரிடம் தோன்றும் பக்தியுணர்வு கோவில் வழிபாட்டு நிலை சமூகத்தவரிடம் பரவி- நாடெங்குமே பரவிவிடுகிறது. பாரதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்துமாரி வழிபாட்டைப் புதியதொரு நிலையில் கடைப்பிடிக்கப் பயிற்றுகிறான். பாசத்தைக் களைந்து விட்டால் பல்வேறு துன்பங்களிலிருந்து தப்பலாம். கோடி நலங்கள் பெறலாம் குறையின்றி வாழலாம். வழிபாட்டின் உன்னதமான பயன் இதுவே தன்னுடைய பக்தி நிலையைப் பற்றிக் கூறும் போது வருமாறு கூறுகிறான்.

*சக்தியென்று நேரமெல்லாந் தமிழ்க்கவிதை பாடி*
*பக்தியுடன் போற்றி நின்றால் பயமனைத்தும் தீரும்*

வாழ்க்கையில் எதிர் கொள்ளும் பயத்தைப் போக்க வழிபாடே சிறந்தது என்பதே பாரதியின் முடிவு இதனை அவன் பாடிய எல்லாப் பக்திப்பாடல்களிலும் அடிநாதமாக அமைத்துள்ளான் பக்தியுடையவர் எதற்கும் பதறமாட்டார்கள். மிகுந்த பொறுமையுடன் காரியம் செய்வார்கள். சக்திமீது தமிழிற் கவிதைபாடி வழிபாடு செய்தால் எல்லாமே கிடைக்கும் தேச முத்துமாரியின் தெய்வீகத்தை வருமாறு பாடியுள்ளான்.

*"ஆதாரம் சக்தி யென்றே அருமறைகள் கூறும்*
*யாதானுந் தொழில் புரிவோம் யாதுமவள் தொழிலாம்*
*துன்பமே இயற்கையெனும் சொல்லை மறந்திடுவோம்*
*இன்பமே வேண்டி நிற்போம் யாவுமவள் தருவாள்*
*நம்பினோர் கெடுவதில்லை நான்கு மறைத்தீர்ப்பு*
*அம்பி கையைச் சரண்புகுந்தால் அதிகவரம் பெறலாம்"*

இவ்வடிகளில் பாரதி காட்டும் பக்தி நெறியும் தெய்வீக உணர்வும் பாமர மக்களும் விளங்கிக் கொள்ளக்கூடியவை. நான்கு வேதங்களும் எல்லாவற்றிற்கும் ஆதாரம் சக்தியென்றே கூறுகின்றன. பாரதி காட்டிய சமத்துவ நிலையான பக்தி நெறி போற்றுதற்குரியது. நாம் செய்கின்ற தொழிலிலே எந்த விதமான வேறுபாடும் கிடையாது. எல்லாமே தேசமுத்துமாரியின் அருளால் பெற்றவை என எண்ணும் மனப்பக்குவம் எல்லோரிடமும் இருக்கவேண்டும். இத்தகைய எண்ணம் தொழிலால் ஏற்படும் ஏற்றத்தாழ்வுகளையும் முரண்பட்ட எண்ணங்களையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீக்கிவிடும். எல்லோரும் ஒருகுலம், எல்லோரும் ஓர் இனம் என்ற உயர்ந்த கோட்பாட்டை உருவாக்கும். பாரதி வாழ்ந்த காலத்தில் இந்தியாவி லிருந்த மேலத்தேய கலாசாரம் காட்டிய தொழில் நிலையான ஏற்றத் தாழ்வுகளைப் பாரதி ஆன்மீக நிலையில் நின்று விளக்குகிறான்.

உலக வாழ்க்கை துன்பமானது என்ற நினைப்பு அகலப் பாரதி சொல்லும் வழியே உகந்தது. இன்பத்தையே நாம் என்றும் எதிர்கொள்ள விரும்பினால் முத்துமாரியிடம் சரண்புகுதலே சிறந்தது. அதற்கான நம்பிக்கை ஒன்றை மனதிலே வளர்த்துக் கொள்ள வேண்டும். நம்பியவர்கள் என்றுமே கெடுதலுக்கு ஆளானதில்லை. அம்பிகையிடம் அடைக்கலம் புகுந்தால் யாவற்றையும் அவள் தருவாள் என்ற நம்பிக்கையை பாரதி பாடலின் மூலம் ஊட்டுகிறான். பாரதியின் இந்த வழிகாட்டல் உலகத்து மக்கள் அனைவருக்குமே பொருத்தமானது. நம்மை நல்வழிப்படுத்த ஒரு சக்தி உண்டு என்பது மனித மனங்களை ஆறுதல் படுத்தும். மக்கள் கவிஞனான பாரதியின் பாட்டு மக்களிடையே நிலவி வந்த முத்துமாரி பற்றிய வழிபாட்டு நம்பிக்கையை மீண்டும் கிளர்ந்தெழச் செய்யும் அற்புதமான பாட்டாகும்.

பாரதி புதுச்சேரியிலே வாழ்கின்ற காலத்தில் மகான் அரவிந்தருடன் தொடர்பு கொண்டிருந்தான். அதனால் சக்தி வழிபாட்டிலே மிகுந்த ஈடுபாடு கொண்டான். சர்வம் சக்தி மயம் என்பதே பாரதியின் நம்பிக்கையாக இருந்தது. அவன் சக்தி பற்றிப் பாடிய பாடல்களில் இந்நம்பிக்கை இழையோடுகிறது. அன்னை பராசக்தியை எல்லோரும் வணங்கினால் எல்லாவற்றையும் பெறலாமெனப் பாடியுள்ளான்.

*"அன்னை வடிவமடா! இவள்*
*ஆதிபராசக்தி தேவியடா- இவள்*
*இன்னருள் வேண்டுமடா- பின்னர்*
*யாவும் உலகில் வசப்பட்டுப் போகுமடா"!*

என்று எல்லையற்ற நம்பிக்கையோடும் பாடும் பாரதியின் பக்தியுணர்வு உலகு தழுவியதாக உள்ளது. தாய்த்தெய்வ வழிபாடு உலகப் பொதுமையானதொரு வழிபாடாகும். ஆனால் முத்துமாரி வழிபாடு பொது மக்கள் வயப்பட்ட வழிபாடாக இருந்தமையால் பாரதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதைச் சிறப்பித்துப் பாடியுள்ளான்.

பாரதிக்கு முன்னர் முத்துமாரி அம்மன் பற்றிய மக்களுடைய வழிபாட்டுச் சிந்தனைகள் காத்தான் கூத்துப் பாடல்களிலே பதிவு செய்யப்பட்டுள்ளன. இதைவிட அம்மன் கதை கூறும் குளிர்த்திப் பாடல்களும் உள்ளன. இவை நாட்டுப் புறப்பாடல்களாக மக்களிடையே பரவலாக்கம் பெற்றிருந்தன. இப்பாடல்களின் குறிப்பின்படி முத்துமாரி சிவனின் மைத்துனியாக வணங்கப்பட்டாள். காத்தான் கூத்துப் பாடல்களில் முத்துமாரி சிவனை "அத்தார்" என்றே அழைக்கின்றாள். அத்துடன் சின்னமுத்து, பொக்குளிப்பான், அம்மை போன்ற நோய்களை ஏவி விடுவதும் அவற்றை நீக்குவதும் ஆகிய ஆற்றல் பெற்றவளாகவும் பேசப்படுகிறாள். பொங்கல் மடை செய்வதன் மூலம் நோய் நீக்கம் பெறலாம் என்ற நம்பிக்கையும் பொது மக்களிடையே நிலவியது இன்னும் முத்துமாரி இரக்கம் உள்ள அன்னையாக மட்டுமன்றி தீமைகள் செய்வோரைத் தண்டிக்கும் சீற்றம் கொண்டவளாகவும் விளங்கினாள் அவளை உரியவாறு மடைபோட்டு வணங்கினால் கோபம் தீர்ந்து மகிழ்வாள். வேண்டுகோளை நிறைவேற்றுவாள். அதிக வரங்களைக் கொடுப்பாள் என்னும் பண்பாட்டு மரபும் தோன்றியிருந்தது.

ஆனால் பாரதியின் இரு பாடல்களிலும் பேசப்படும் முத்துமாரி உலகத்து நாயகியாக விளங்குகிறாள். இறைவனையே உலகத்து முதல்வன் என்று பேசப்படும் சமயமரபைப் பாரதி மாற்றியமைத்துள்ளான். முத்துமாரியை உலகநாயகியாக, தேசமுத்து மாரியாகவே கருதிப் பாடியுள்ளான்.

உலகத்து மக்கள் அனைவரது சார்பாக முத்துமாரியிடம் பேசும் பிரதிநிதியாக விளங்குகிறான். மனித மனங்களின் மனங்களிலே படிந்த அழுக்கைப் போக்குவதற்கு முத்துமாரியே அருள வேண்டும் என விண்ணப்பம் விடுத்துள்ளான். மனிதனுடைய மனத்திலுள்ள மாசுகள் அவனுடைய வளர்ச்சிக்கு இடையூறு செய்பவை எனவே அவற்றையே முதலில் களைய வேண்டும். இதுவே பாரதியின் பக்தி நெறியின் இலக்காக இருந்தது.

"மாரி" என்ற சொல் மழையைக் குறிப்பதாகும். உலகத்திலே மாரி இல்லாவிட்டால் எந்த வளமுமே இருக்காது மழையின் சிறப்புப் பற்றி வள்ளுவர் ஒர் அதிகாரமே அமைத்துள்ளார். மழை பெய்யாவிடில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகிலே பசுமையைக் காணமுடியாது. மழை பொழியாவிட்டால் நெடிய கடலும் வளங்குன்றும் மழை இல்லாவிட்டால் இவ்வுலகில் தேவர்களுக்கும் பூசை நடவாது உலகத்தில் தருமமும் தவமும் நடைபெறாது நீரில்லாமல் உலகமே இயங்காது. அதனால் மழையை "மாரி" என்ற பெயரில் வழிபட்டு வணங்கும் மரபு தோன்றியது. மழையால் உலகிலே விளைபொருட்கு மூலமான கருவளம் ஏற்படுகிறது. அந்தக் கருவளம் பெண்ணிடமும் காணப்பட்டது. எனவே மழையை மாரியாகப் பெண் தெய்வமாக பாவனை செய்து வழிபாடு செய்வது சாத்தியமாயிற்று.

இத்தகைய வழிபாட்டில் வேப்பமரம் குறியீடாக அமைந்தது. அம்மரத்தின் பிணிதீர்க்கும் பண்புகள் மாரியின் அருட்பண்புகளாக அமையவே வேப்பமரத்தையே முத்துமாரித் தெய்வமாகக் கருதி வழிபாடு செய்யும் புதியமரபும் தோன்றியது. முத்துமாரிக்கு வேப்பிலை சாற்றி அவளை வேப்பிலைக்காரி எனச் சிறப்புப் பெயரால் அழைக்கும் பண்பாடும் தோன்றியது. வழிபாட்டுடன் ஆடல், பாடல், கும்மி, கரகம், காவடி போன்ற கலைகளும் இணைந்து கொண்டன. உடுக்கு அம்மனுக்கு இசைந்த இசைக்கருவியாகிற்று மடையிட்டுப் பொங்கல் விழாச் செய்யும் போது உடுக்கு அடித்துப் பாடும் பண்பாடும் தொடரலாயிற்று.

நோய் நீக்கம் வேண்டி குளிர்த்திப் பாடல்கள் மாரியம்மன் மீது பாடப்பட்டன. முத்துமாரியின் நோய் நீக்கும் சிறப்பு நிவேதனமாக "தயிர்ப் படையல்" இடம் பெற்றது. கிராமப்புறங்களிலே இந்நிவேதனத்தைத் "தயிர்ப்பாளயம்" என்றழைப்பர். மக்கள் கவிஞனான பாரதி முத்துமாரியை மக்கட் சார்புடைய தெய்வமாக அறிமுகம் செய்து தேச முத்துமாரியாக எம்முன்னே காட்டுகிறான் இடம் பெயர்ந்து வாழ்ந்த பாரதியின் இன்னல்கள் தீர வழிபட்ட முத்துமாரியை எல்லாத் தேசத்தவரும் வழிபடத் தேசமுத்துமாரியாகப் பாடியுள்ளான். இன்று எம் நாட்டிலிருந்து புலம் பெயர்ந்து வாழும் மக்களுக்கு தேசமுத்துமாரியை வழிபட்டால் யாவும் அவள் தருவாள் என்ற உண்மையையும் அன்றே உணர்த்திச் சென்றுள்ளான்.

பாரதியின் முத்துமாரி பற்றிய இருபாடல்களும் எளிமையான சொற்களால் பாடப்பட்டுள்ளன. சரண்புகுதல், அடைக்கலம் புகுதல் என்ற இரு தொடர்களைப் பாரதி இப் பாடல்களில் பயன்படுத்தியுள்ளான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“சரண்” என்பது வடசொல் அடைக்கலம் என்பது தமிழ்ச் சொல் பாரதியின் வட மொழிப் பயிற்சியை இதன் மூலம் அறியமுடிகிறது. “சரண்” என்ற சொல் மூன்று தரம் பயன்படுத்தியுள்ளான். அடைக்கலம் என்று ஒரு தரம் மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளது. கேட்ட வரம் தரும் முத்துமாரியின் திரு வருட் சிறப்பைப் பாரதி சிறப்பாக எடுத்துக் கூறுவது கவனத்திற் குரியது. அந்த அருள் நிலையை மேலும் வருமாறு அடுக்கிக் கூறியுள்ளான்.

*“பாசமெல்லாங் களைவாய்”*
*“கோடி நலம் செய்திடுவாய்”*
*“குறைகளெல்லாம் தீர்ப்பாய்”*
*“கேடதனை நீக்கிடுவாய் ”*

மனித நிலையிலே தேவையானவற்றை யெல்லாம் மேற்காட்டிய அடிகளில் அடக்கிக் காட்டியுள்ள பாவலன் பாரதியின் கவிச்சிறப்புக்கு இது ஓர் எடுத்துக் காட்டாகும். மனித வாழ்வுபற்றிய தன்னிலைப்பாட்டை பாரதி வருமாறு காட்டுகிறான்.

*“எப்பொழுதும் கவலையிலே இணங்கி நிற்பாள் பாவி*
*ஒப்பியுள தேவல் செய்வேன் உனதருளால் வாழ்வேன்“*

இதுவே பாரதி தனது வாழ்வியலூடாகப் பெற்ற தெளிவாகும் பாரதி பாடிய முத்துமாரி பற்றிய பாடல்கள் ஒரு வாழ்வியலனு பவத்தி னூடாகப் பெற்ற தெளிவாகும். இதுவே பக்தி உணர்வாகும். தான் என்ற அகந்தை அகன்று தனக்கு மேலே ஒருவன் தன்னை எப்போதும் காப் பாற்றுவதற்குக் காத்திருக்கிறான் என்ற திடமான முடிவு ஒன்றின் வயப்பட்டு நிற்பது. இதுவே பக்தியின் கோலமும் நினைப்புமாகும். இந்த பக்திநிலை எல்லோருக்கும் வரவேண்டும் என்பதே பாரதியின் முத்துமாரி பற்றிய பாடல்கள் கூறும் செய்தியாகும். மணிவாசகர் இந்நிலையை “அவனருளாலே அவன் தாள் வணங்கி” என்று கூறிப்போந்தார். பாரதி அத்தகைய ஒரு அனுபவத்தைப் பெற்றவன் அதனால் தேசமுத்துமாரியை வழிபட வழிகாட்டினான். அதை உலகப் பொதுமையான பக்தி நெறியாக்க விரும்பிப்பாடுகிறான்.

*“அல்லா! யெஹோவா! எனத்தொழு தன்புறும்*
*தேவருந்தானாய் திருமகள் பாரதி*
*உமையெனுந்தேவியர் உகந்தவான் பொருளாய்*
*உலகெலாங் காக்கும் ஒருவனைப் போற்றுதல்*
*இருநான் கேயிப் பூமியி லெவர்க்கும்*
*கடமையெனப்படும்.”*

❑❑❑



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் வழிபாட்டில் இளமையின் செவ்நெறி

(கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்)

மனித வாழ்வியலில் இளமைப்பருவம் என்பது ஒரு சிறப்பான பருவமாகும் . நாலடியார் என்னும் தமிழ் நூலுக்கு உரைவகுத்த தருமர் என்னும் தமிழறிஞர் இளமைப் பருவத்தை வருமாறு விளக்கிக் கூறுகிறார்.

"பதினாறு வயதுக்கு மேல் முப்பத்திரண்டு வயதுக்குள் விடயங்களிலே முயங்கப்பட்ட காமக்குழவிப் பருவம்".

இக்குறிப்பிட்ட வயதெல்லையுள் மனித வாழ்வியலுக்கான சிறந்த பயிற்சி ஒன்று நடைபெறுகிறது. உயர்கல்வி, தொழில்பேறு மணவாழ்வு, குழந்தைப்பேறு என்னும் பல பேறுகளைப் பெறுங் காலமும் இதுவாகும் 16 வயதிலிருந்து 32 வயது வரை ஏறக்குறைய 16 ஆண்டுகள் தமிழர் வாழ்வியலில் மிக இன்றியமையாத காலமாகக் கருதப்பட்டது. இளமைக் காலம் பற்றிய பண்டைய கால இலக்கியப் பதிவுகள் இதற்குச் சான்றாக உள்ளன. அவற்றை மீள நோக்குவது இன்று பயனுடைத்து விஞ்ஞான தொழில் நுட்பக் கருவிக் கையாட்சியின் முன்னேற்றம் இன்று மனிதனை வழிநடத்துகிறது. முன்னோர்களின் கருத்துகளை அறிவதற்கு இவற்றின் வழிகாட்டல் போதுமானதன்று. மனிதவாழ்வியலை இயற்கையோடு இணைத்து நோக்கிய நமது முன்னோர் பட்டறிவால் உணர்ந்தவற்றைப் பாடல்களிலே பதிவு செய்துள்ளனர். எந்திரப் பொறியின் இயக்கம் போலவே இன்று மனிதன் வாழ்கிறான். குறிப்பாக இளைஞர்களிடையே எதிர்கால வாழ்க்கையின் சீரிய செல்நெறியைத் திட்டமிடும் ஆற்றல் குறைவாக உள்ளது. எனவே அவர்களுக்கு இன்று நமது முன்னோர்களின் வாழ்வியல் பற்றிய கருத்துக்களைத் தெளிவு படுத்தும் பாரிய பொறுப்பு எம்முடையதாகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலக்கியத்தில் இளமை:

தமிழில் தோன்றிய இலக்கியங்களில் மிகப் பழையவை எனக் கருதப்படும் சங்க இலக்கியங்களிலே இளமை பற்றிப் பல கருத்துக்கள் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன. பெண்ணின் இளமைத் தோற்றத்தை அகநானூறு வருமாறு காட்டுகிறது.

*"சுடர்ப்பூந்தாமரை நீர் முதிர் பழனத்து*
*அம் தூம்பு வள்ளை ஆய்தொடி மயக்கி*
*வாளை மேய்ந்த வள்ளெயிற்று நீர்நாய்*
*முள்ளரைப் பிரம்பின் மூதரிற் செறியும்*
*பல்வேல் மத்தி கழாஅர் அன்ன எம்*
*இளமை ..............."* *(அகநானூறு : 6)*

தீச்சுடர் போலத் தோன்றுகின்ற அழகிய தாமரை மலர்களை யுடைய நீர்வளம் மிகுந்த வளமான வயல்களிலே அழகிய உள் துளைகளையுடைய வள்ளைக்கொடிகளை உழக்கிக்கொண்டு வாளை மீனைத்தின்னும் கூர்மையான பற்களையடைய நீர்நாய், பின்னர் முட்கள் பொருந்திய தண்டினையுடைய பிரப்பஞ் செடியின் பழைய புதரிலே சென்று தங்கும். இத்தகைய நீர்வளம் பொருந்திய மத்தி என்பானது வேல் வீரர் நிறைந்த "கழார்" என்னும் ஊரைப் போன்ற என்னுடைய இளமைக்கோலம் என ஒரு பெண்ணின் இளமை வளம் பேசப்படுகிறது.

பெண்ணின் இளமைக்கோலம் வீட்டிற்கு வளம் என இன்னொரு பாடல் குறிப்பிடுகிறது.

*"ஓங்கு நிலைத் தாழி மல்கச் சார்த்திக்*
*குடை அடை நீரின் மடையினள் எடுத்த*
*பந்தர் வயலைப் பந்து எறிந்து ஆடி*
*இளமைத் தகைமையை வளமனைக் கிழத்தி!"*

(அகநானூறு 275 )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லத்திலே வாழும் இளம்பெண்ணின் செயற்பாட்டை இப்பாடல் நன்கு விளக்கிக் காட்டுகிறது. உயர்ந்த நிலையினதாகிய தாழியிலே நீரை நிறையக் கொணர்ந்து நிரப்பிப் பின்னர் பனை ஓலையால் செய்யப்பட்ட குடையால் அந்நீரை முகந்து வயலைக் கொடிக்குச் சொரிந்து பேணி வளர்க்கிறாள். அந்த வயலைப் பந்தரின் கீழே பந்து எறிந்து விளையாடுகிறாள். இளமைக் காலத்தில் எல்லா வற்றையும் பேணும் ஆற்றல் ஒன்று பெண்ணிடம் இயற்கையாகவே இருந்ததையே இப்பாடல் குறிப்பிடுகின்றது. அத்துடன் இளமைக்கும் அழகிற்கும் இடையே இருந்த ஒரு உறவையும் எடுத்தக் காட்டுகிறது.

இளமைப் பருவத்தின் இன்னொரு பண்பை ஐங்குறுநூறு பதிவு செய்துள்ளது.

*"இனிதுடன் கழிக்கின் இளமை*
*இனிதா லம்ம இனியவர்ப் புணர்வே"* (ஐங்குறுநூறு 415)

தமக்கு இனியவரோடு கூடிக் காலத்தைக் கழிப்பதால் இளமைப்பருவம் இனிமையாக இருக்கும். திருமணம் செய்து வாழும் பருவமான இளமைப்பருவம் மனித வாழ்வியலின் வளர்ச்சி நிலையின் மிகச் சிறப்பான காலமாகவும் கருதப்பட்டது.

மனித வாழ்க்கைக்குப் பொருள் தேட்டம் இன்றியமையாதது ஆனால் அதையும் ஏற்ற காலத்திலே தேட வேண்டும் இளமையும் பொருள் தேட்டமும் இணையும் போது ஏற்படும் சிக்கலை நற்றிணை எடுத்துக்கூறுகிறது.

*".... பாழ் நாட்டு அத்தம்*
*இறந்து செய் பொருளும் இன்பம் தரும் எனின்*
*இளமையின் சிறந்த வளமையும் இல்லை*
*இளமை கழிந்த பின்றை வளமை*
*காமம் தருதலும் இன்றே அதனால்*
*நில்லாப் பொருட் பிணிச் சேறி*
*வல்லே - நெஞ்சம் - வாய்க்க நின் வினையே"*

(நற்றிணை 126)



Prof. V. SIVASAMY
UNIVERSITY OF JAFFNA
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடு கடந்து சென்று ஈட்டுகின்ற பொருள் இன்பந்தரும் ஆனால் இளமைப்பருவத்தை விட வளமானது எதுவுமே இல்லை. எனவே இளமைப் பருவம் கடந்த பின்பு காமத்தையும் அனுபவிக்கவும் முடியாது. அதனால் இப்போது பொருளீட்டச் செல்வதை நீ நினைப்பது தகாது நெஞ்சே! எனப் பொருளீட்டத்திற் போக எண்ணும் நெஞ்சிற்கு இளந்தலைவன் கூறுகிறான்.

இதே போன்று பெண்ணொருத்தி பொருள் தேட்டத்திற்குச் சென்ற தன் கணவன் இளமைக்கால இன்பத்தை விடப் பொருள மீது ஆசை கொண்டானே எனக் கூறுகிறாள்.

*"இளமை பாரார் வளம்நசைஇச் சென்றோர்*
*இவணும் வாரார் எவணரோ? எனப்*
*பெயல் புறந் தந்த பூங்கொடி முல்லைத்*
*தொகுமுகை இலங்கு எயிறு ஆக*
*நகுமே தோழி நறந்தண் காரே!"*

(குறுந்தொகை 126)

இன்பத்திற்குரிய இளமைப் பருவத்தை அதன் அருமையை எண்ணிப்பாராது பொருள் வளத்தையே விரும்பிச் சென்று இன்னும் திரும்பிவராத மனைத்தலைவனின் செயலைத் தலைவி சுட்டிக் காட்டுகிறாள். பொருள் தேட்டத்திற்காகச் செல்பவர் கார் காலத்தே வீடு திரும்பும் ஒரு ஒழுங்குமுறை கடைப்பிடிக்கப்பட்டது. ஆனால் அக் காலத்தே மீண்டு வராத போது கார் காலத்திலே மலர்கின்ற முல்லையரும்புகள் தன்னைப் பார்த்துச் சிரிப்பதாகக் கூறுகிறாள். மனித வாழ்வியல் இயற்கையோடு ஒட்டியிருந்த போது மனித உணர்வுகளோடு இயற்கையும் உறவாடுவதாக எண்ணி வாழ்ந்தனர். காலக்கழிவினை இயற்கையே மனிதர்க்கு உணர்த்தி அவர்களை நெறிப்படுத்தியது. வெளிவாழ்க்கையில் ஆண் காலம் கழிக்கும் போது இளமைப் பருவம் வீட்டு வாழ்வை நினைவூட்டும். இப்பாடலில் வந்துள்ள "நகுமே" என்ற சொல் மனிதனின் சீர்மையற்ற செயற்பாட்டை எண்ணிச் சிரிப்பதையே புலப்படுத்துகின்றன. பொருள்வளம், இளமை வளம் என்னும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டனுள் எதனை முன்னிறுத்திச் செயற்பட வேண்டும் என்பதையே இப்பாடல் வலியுறுத்துகின்றது.

ஆனால் கலித்தொகை என்னும் நூலில் இளமை பற்றிய பிறிதொரு கருத்தினைக் காணமுடிகிறது. "வறியவன் இளமை போல வாடிய சினை" (கலித்தொகை10) என்னும் தொடர் இளமைக் காலத்தில் வறுமை இன்னல் தருமென்பதையுணர்த்துகிறது. ஔவைப்பிராட்டியும் கொடிது கொடிது "இளமையில் வறுமை" எனக் கூறிப்போந்தார். எனவே இளமைப் பருவத்திலே ஒரு திட்டமிட்ட செயற்பாடு தேவையென்பது புலனாகின்றது. கழிந்த இளமையை மீளப்பெற முடியாது இளமைக் காலத்தில் இவ்வாழ்க்கையில் பிரியாதிருப்பதே நன்று. எனக் கலித் தொகைப் பாடல் சுட்டிக்காட்டுகிறது.

*"ஒன்றினார் வாழ்க்கையே வாழ்க்கை அரிதரோ*
*சென்ற இளமை தரற்கு"*

(கலித்தொகை18)

என்னும் கலித்தொகைப் பாலடிகள் இக்கருத்தைத் தெளிவுபடுத் துகின்றன. இளமைக்காலம் விரைவில் கழிந்துவிடும் என்பதை ஒருவரும் உணர்வதில்லை. ஆற்றுநீர் ஒடுவது போல இளமைக்காலம் கழிந்துவிடும்.

இவ்வாறு இளமைக்காலம் விரைவாய்க் கடந்ததை எண்ணி இரங்கும் முதுமையைப் புறுநானூற்றுப் பாடலொன்று சுட்டிக்காட்டுகிறது.

*" உயர்சினை மருதத்துறை யுறத் தாழ்ந்து*
*நீர் நணிப் படிகோடேறி சீர்மிகக்*
*கரையவர் மருளத் திரையகம் பிதிர*
*நெடுநீர்க் குட்டத்துத் துடுமெனப் பாய்ந்து*
*குளித்து மணல் கொண்ட கல்லா இளமை*
*அளிதோதானே யாண்டுண்டு கொல்லோ"*

(புறநானூறு 243)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளமைக்காலச் செயற்பாடுகளை மீள நினைவுபடுத்தும் போது முதுமை தன் தவறுகளைத் தெளிவாக உணர்கிறது. இளைஞர்களோடு கூடி உயர்ந்த கொம்பர்களையுடைய மருதமரத்துத் துறையிலே வந்து தாழ்ந்து நீருக்கு அணித்தாக உள்ள கிளையிலே ஏறிக் கரையிலே நிற்பவர் வியக்கும்படி நீர்த்துளிகள் தெறிக்கும்படி துடுமெனப்பாய்ந்து குதித்து மூழ்கி மணலை அள்ளிக்காட்டும் இளமைக்கோலம் இரங்கத்தக்கது. கல்வியறிவில்லாத இளமையின் செயற்பாடு இரங்கு தற்குரியது. இளமை கழிந்த பின்பு முதுமைக் காலத்தில் தான் இவ்வுண்மைநிலை புலப்படுகின்றது. பிறர் வியக்க வேண்டு மென்ப தற்காகப் பயனற்ற செயல்கள் செய்யும் இளமையின் குணவி யல்பை இப்பாடல் நயமாக உணர்த்தியுள்ளது.

இளமைக்காலத்து இழப்புகள் மிகவும் துன்பந்தருவன கணவனை இழந்த இளம் மனைவியின் துன்பத்தையும் புறநானூறு சுட்டிக் காட்டியுள்ளது. காவலையுடைய நாட்டிலே வாழ்ந்தாலும் இளமைப் பருவத்தில் கணவன் துணையின்றி வாழ்வது கடினம் அதனால் அத்தகைய இளம் பெண் தன் உயிரையே மாய்க்கத் துணிகிறாள்.

*"நீர்வார் கூந்தல் இரும்புறம் தாழப்*
*பேரஞர்க் கண்ணள் பெருங்காடு நோக்கி*
*தெருமரும் அம்மதானே தன்கொழுநன்*
*முழவு கண் துயிலாக் கடியுடை வியனகர்*
*சிறுநனி தமியளாயினும்*
*இன்னுயிர் நடுங்கும் தன் இளமை புறங்கொடுத்தே"*

(புறநானூறு 247)

புலவர் பெண் தன் இளமையைத் துறக்க எடுத்த முடிவைக் கண்டு பெருந்துன்பம் அடைகிறார். ஆனால் பெண்ணோ கணவன் இறநத பின்னர் தன் இளமைப் பருவத்தைத் தனியே கழிக்க விரும்பவில்லை. கணவனோடு உடன்கட்டை ஏறத்துணிந்து நிற்கிறாள். அவள் இளமைக் கால இன்பங்கள் எல்லாம் பொருளற்றவை என்பதை உணர்ந்து உயிர் துறக்கச் சித்தமாகின்றாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமுருகாற்றுப்படை என்னும் முருகன் வழிபாடு பற்றிக்கூறும் நெடும்பாட்டு இளமைக் காலம் வழிபாட்டிற்குரியதெனக் கூறுகிறது. முருகன் உறையும் ஆறுபடை வீடுகளில் ஒன்றான திருவேரகத்தில் வாழும் மக்களின் வாழ்வியலில் இளமைக்காலம் தொட்டு வழிபாடு இடம் பெற்றிருந்ததைப் புலவர் குறிப்பிடுகிறார்.

*"இரு மூன்ற எய்திய இயல்பினில் வழா அ*
*இருவர்ச் சுட்டிய பல்வேறு தொல்குடி*
*அறுநான்கு இரட்டி இளமை நல்லியாண்டு*
*ஆறினில் கழிப்பிய அறனில் கொள்கை*
*மூன்று வகைக் குறித்த முத்தீச் செல்வத்து*
*இரு பிறப்பாளர் பொழுது அறிந்து நுவல*
*ஒன்பது கொண்ட முப்புரி நுண்ஞாண்*
*புலராக் காழகம் புலரவுடீஇ*
*உச்சிக் கூப்பிய கையினர் தற்புகழ்ந்து*
*ஆறு எழுத்தடக்கிய அருமறைக்கேள்வி*
*நாவியல் மருங்கின் நவிலப்பாடி*
*விரையுறு நறுமலர் ஏந்திப் பெரிது வந்து*
*ஏரகத் துறைதலுமுரியன் ...............*

(திருமுருகாற்றுப்படை 177 189)

ஏரகம் என்னும் ஊரிலே வாழும் அந்தணர் வாழ்வியல் பற்றிய செய்திகளை மேற்காட்டிய பகுதி விளக்கிக் கூறுகிறது. அவர் தமக்குரிய அறுவகைத் தொழிலையும் குற்றமறச் செய்பவர் தம் தாயும் தந்தையும் ஆகிய இருவர் குலமும் மிகவும் உயர்ந்தவையென்று உலகினரால் போற்றப்படும் பழங்குடியிற் பிறந்தவர் தமது இளமைக்காலம் தொட்டு 48 ஆண்டுகளும் மெய்ந்நூல் கூறும் விதிப்படி பிரமச்சரியத்தில் ஒழுகியவர். அதனால் எப்பொழுதும் அறம் செய்வதையே விரும்பும் கொள்கையை யுடையவர் முத்தீயோம்பும் செல்வமுடையவர் இத்தகைய இருபிறப்பாளர் இறைவழிபாட்டிற்குரிய காலமறிந்து தவறாது வழிபாடு செய்வர். எப்பொழுதும் பூணூல் அணிந்திருப்பர். இவர் நீராடிய உடையுடன் தலைமேல் குவித்த கையினராகி ஆறெழுத்து மந்திரத்தை வாய்க்குள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறி மணமுள்ள நறிய மலரைத் தூவி வணங்குவர். இதனால் மிகவும் மகிழ்ந்து ஏரகம் என்னும் ஊரிலே முருகன் உறைவான் இளமைக் காலம் முழுவதையுமே வழிபாட்டில் கழிக்கும் வாழ்வியல் ஒன்று இருந்ததை இப்பாடற்பகுதி தெளிவாய் விளக்குகிறது.

இலக்கியப்பதிவுகள் காட்டும் இளமைப்பருவம் பற்றிய கருத்துகள் மனித வாழ்வியலில் இப்பருவம் தனித்துவமான தென்பதை நன்கு உணர்த்துகின்றன. இப்பருவம் தான் எதிர்கால வாழ்வியலின் சிறப்புக்கான அடித்தளமான செயற்பாடுகளைச் செய்யும் பருவம் என்பதை நம்முன்னவர் உணர்ந்திருந்தமை இச்செய்திகளால் புலனாகின்றது.

## வழிபாட்டில் இளமை

வழிபாட்டில் இளமை எவ்வாறு இயைபு பெற்றிருந்தது என்பதை அறிவதற்குத் தமிழ்மொழியில் தோன்றிய தேவாரப் பாடல்கள் சான்றாக உள்ளன. சைவசமய குரவர்களான திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்திகள் ஆகிய மூவரும் பாடிய பாடல்களே தேவாரம் என வழங்கப்படுகின்றன. தேவாரம் என்ற சொல் தே + வாரம் என இரு சொற்களாகப் பிரிந்து இறைவன் மேல் பாடப்படும் சொல்லொழுங்கும் இசையொழுங்கும் கொண்ட பாடல் எனப் பொருள்படும் இதற்குச் சான்றாக சிலப்பதிகாரம் ஊர்காண் காதையில் வரும் "வாரம் பாடும். தோரிய மடந்தையும்" என்னும் அடி கொள்ளப்படுகிறது. "வாரம்" என்பது அன்பு என்னும் பொருளிலும் பயன்படுத்தப்படுகிறது. தற்கால வழக்கில் "வாரப்பாடு" என்னும் சொல் அன்பைக் குறிக்கப் பயன்படுகிறது. இச் சொல்லைத் தே+ஆரம் எனப்பிரித்து கடவுளுக்குச் சூட்டப்படும் பாமாலை எனவும் பொருள் கொள்ளப்படுகின்றது. சம்பந்தர் பாடல்களில் வரும் சொல்மாலை, தமிழ்மாலை போன்ற சொற்கள் இதனை உறுதி செய்கின்றன. தேவாரம் என்ற சொல் பிற் காலத்திலேயே பயன்படுத் தப்பட்டுள்ளது. பிற்காலத்தில் கி.பி14ஆம் நூற்றாண்டளவில் வாழ்ந்த இரட்டையர் பாடிய ஏகாம்பர நாதருலாவில் வரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*"மூவாத பேரன்பின் மூவர் முதலிகளும்*
*தேவாரம் செய்த திருப்பாட்டும் ..."*

என்னும் அடிகளில் தேவாரம் என்ற சொல் பயன்படுத்தப் பட்டுள்ளது. இதைவிட கி.பி 11ஆம் 12ஆம் நூற்றாண்டுகளில் கல்வெட்டுகளில் "தேவாரம்" என்ற சொல் காணப்படுகிறது. ஆனாலது வழிபாடு நடந்த இடத்தைக் குறிப்பதாக உள்ளது.

"நம் தேவாரத்துக்கு திருப்பதியம் பாடும் பெரியோான்"
(திருக்களர்க்கல்வெட்டு (SII: Vol .VIII , No. 260)

"தேவாரத்துக்கு திருப்பதியம் விண்ணப்பம் செய்யும் அம்பலத்தாடி"
(அல்லூர்க்கல்வெட்டு SII: VoL. VIII, No. 675)

இங்கு தேவாரத்துக்குத் திருப்பதியம் என்ற தொடரே தேவாரம் வேறு திருப்பதியம் வேறு என்பதைக் காட்டுகிறது. இறைவழிபாட்டிலே ஓதப்பெற்றமையால் மூவர் பாடல்கள் "தேவாரம்" என வழங்கப் பெற்றிருத்தல் வேண்டும் தேவாரம் பாடிய மூவரில் சுந்தரமூர்த்திகளின் இளமைப் பருவம் குறிப்பிடுவதற்குரியது 18 ஆண்டுகளே இவ்வுலகில் வாழ்ந்தவர் சுந்தரர் அவருடைய வாழ்வியல் வழிபாட்டில் இளமையின் நிலையை நன்குணர்த்துகின்றது.

சடையனார் என்னும் சிவப்பிராமணரின் மகனாகப் பிறந்து நரசிங்க முனையரையரின் வளர்ப்பு மகனாக வாழ்ந்த நம்பி ஆரூரரே பின்னர் சுந்தரமூர்த்தி நாயனார் என்ற பெயர் பெற்றார். கல்விகற்கும் பருவம் முடிந்து ஆரூரருக்குத் திருமணம் செய்யும் இளமைப் பருவம் எய்திய போது அந்நாட்டுப் புத்தூரைச் சேர்ந்த சடங்கவி என்னும் சிவப்பிராமணர் மகளுக்கு அவரை மணம் செய்து கொடுக்கப் பெரியோர் நிச்சயம் செய்தனர் புத்தூரிலே மணமகள் இல்லத்திலே திருமணச் சடங்கு நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேளையில் அங்கு வந்த முதியவர் ஒருவர் மணமகன் தனக்கு அடிமையென வாதிட்டார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணமகனான் ஆரூரர் அதை மறுத்துரைத்தார் முதுமைக்கும் இளமைக்கும் இடையே நடந்த வாதில் முதியவர் கொணர்ந்த ஆவணச் சீட்டை ஆரூரர் கிழித்தெறிந்தார். முதியவரைப் "பித்தன்" என்றும் "பேயன்" என்றும் கடிந்துரைத்தார். ஆனால் முதியவரோ மூல ஆவணத்தைக் காட்டி ஆரூரரைத் தன்னுடைய வழிபாட்டு அடிமையென நிறுவினார். முதியவர் இருக்குமிடத்தைக் காட்டும்படி கேட்ட போது அவர் திருக்கோயிலினுள்ளே புகுந்து மறைந்தார் அப்போது தான் ஆரூரருக்கு உண்மை தெளிவாயிற்று இளமையின் மிடுக்கால் தான் தனது மூதாதையரின் வழிபாட்டு மரபை மறந்தமையை உணர்ந்தார் மீண்டும் வழிபாட்டு உணர்வு மீதூரப் பெற இறைவனைப் பாட வேண்டுமென விரும்பினார். இறைவனே அவரிடம் "என்னை நீ ஏசியவாறே அடியெடுத்துப்பாடு" எனப் பணித்தார். நம்பியாரூரரும் "பித்தா பிறை சூடி" எனத் தொடங்கிப் பதிகம் பாடி இறைவனுக்குத் தான் வழிவழி அடிமையே என்பதை எடுத்தோதினார்.

ஆரூரர் பாடிய திருவெண்ணெய் நல்லூர்த்திருப்பதிகம் 10 பாடல்களில் அவருடைய வழிபாட்டுணர்வைப் புலப்படுத்துகிறது. இளமைப்பருவத்தில் வழிபாடு பற்றிய நினைப்பு எழாது மூத்தோர் செய்யும் வழிபாடு மூட நம்பிக்கையாகத் தெரியும் ஆனால் இந்த மறந்த நிலையைச் சீர் செய்யச் சுந்தரரே வழிகாட்டுகிறார். தமது சிறுவயது தொடக்கம் இளவயதுவரை கடைப்பிடித்த மூத்தோர் வழிபாட்டை மீண்டும் தொடர்வதே சிறந்தது என்பதைத் தனது வாழ்வியல் அனுபவத்தால் அறிந்தவர் சுந்தரர். தன் தவறை உணர்ந்து இறைவனை வேண்டும் அவருடைய உணர்வை அவர் பாடலடிகளே தெளிவாகப் புலப்படுத்துகின்றன.

*"எத்தான் மறவாதே நினைக்கின்றேன் மனத்துன்னை"*
*(பாடல்:1)*

*"நாயேன் பலநாளும் நினைப்பின்றி மனத்துன்னை"*
*(பாடல்: 2)*

*"மன்னே மறவாதே நினைக்கின்றேன் மனத்துன்னை"*
*(பாடல்: 3)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளமைப்பருவத்தில் வேறு செயற்பாடுகளில் மூழ்கி இறைவனை வழிபட மறந்ததை அவர் பாடலில் சுட்டிக் காட்டியுள்ளார் உலக வாழ்க்கையில் கொண்ட பற்றுதல் இளமையில் வழிபாட்டை மறக்கச் செய்கின்றது. சிறு வயதிலே பெற்றோரால் அளிக்கப்பட்ட வழிபாட்டுப் பயிற்சிகளை இளமையில் கைவிடும் நிலையும் உண்டு ஆரூரர் இனிமேல் உன்னை மறவேன் என உறுதி மொழியினால் பரவுகிறார். உனக்கு ஆட்செய்வதே எனது பணி என்பதைப் பின்வரும் பாடல் அடிகளால் வலியுறுத்தியுள்ளார்.

*"அத்தா உனக்கு ஆளாயினி அல்லேன் எனலாமே"*
*"ஆயா உனக்கு ஆளாயினி அல்லேன் எனலாமே"*
*"அன்னே உனக்கு ஆளாயினி அல்லேன் எனலாமே"*
*"அடிகேள் உனக்கு ஆளாயினி அல்லேன் எனலாமே"*
*"ஆதீ உனக்கு ஆளாயினி அல்லேன் எனலாமே"*
*"அண்ணா உனக்கு ஆளாயினி அல்லேன் எனலாமே"*
*"ஆனாய் உனக்கு ஆளாயினி அல்லேன் எனலாமே"*
*"ஆற்றாய் உனக்கு ஆளாயினி அல்லேன் எனலாமே"*
*"அழகா உனக்கு ஆளாயினி அல்லேன் எனலாமே"*
*"ஆரூரன் எம் பெருமாற் காளல்லேன் எனலாமே"*

தனது உறவுகளாக இறைவனைப் பாடுகிறார். அத்தா, ஆயா, அன்னே, அடிகேள், ஆதி, அண்ணா, எனத் தனது நெருக்கமான உறவுகள் எல்லாவற்றையும் இறைவன் உருவிலே காண்கின்ற மனப்பக்குவம் அவருக்கு வந்து விட்டது. வழிபாடு பற்றிய தனது முன்னோர் பயிற்றிய எல்லாவற்றையும் மீண்டும் நினைவு படுத்துகின்றார். இறைவன் தோற்றம், அழகு, அருட் செயல் எல்லாவற்றையும் அறிந் திருந்தும் மறந்திருந்தார். அது அவர் உள்ளத்தைப் பெரிதும் வாட்டியது முதுமைக் கோலத்தை எள்ளிநகை யாடியதை எண்ணி வருந்துகிறார். தான் பல பொய்யுரைத்ததை ஏற்றுக் கொள்கிறார் இப்போது இறைவனே எல்லாம் என்பதை உணர்ந்து வருமாறு பாடுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*"ஊனாய் உயிரானாய் உடலானாய் உலகானாய்*
*வானாய் நிலனானாய் கடலானாய் மலையானாய்"*

இறைவனே எங்கும் இருப்பதை ஆரூரர் இளமைப் பருவத்திலேயே நன்கு உணர்ந்து கொண்டார். இளைஞர்க்கு ஓர் வழி பாட்டு நெறியை காட்டினார்.

இவர்பாடிய திருமுறைகள் சைவத்திருமுறைகளுள் ஏழாந்திரு முறையாக வகுக்கப்பெற்றுள்ளன. 100 திருப்பதிகங்களாகத் தொகுக்கப பெற்றுள்ளன. இத்திருப்பதிகங்களில் ஏறக்குறைய 84 திருப்பதிகள் பாடப் பெற்றுள்ளன. ஆரூரரின் வழிபாட்டனுபவம் பாடல்களில் வெளிப் பட்டுள்ளது. இறைவனுடைய இயல்பு, உயிர்களின் இயல்பு, உயிர் வாழ்க் கையின் இயல்பு, உயிர்கள் இறைவன் திருவருவளைப் பெறுதலின் இயல்பு என்பன இனிய தமிழ் நடையில் பாடப்பட்டுள்ளன. சுந்தர வேடங்கள் புனைந்தமையால் ஆரூரர் சுந்தரர் என அழைக்கப்பட்டார். இளமைப்பருவத்தில் தான் பெற்ற கல்வியறிவினால் புராண வரலாறு களையும் நன்கு அறிந்திருந்தார். அவற்றைப் பாடலிலே பொருத்தமுற இணைத்துப்பாடியுள்ளார் இவற்றைவிட இளமை செய்ய வேண்டிய பாரிய பணி ஒன்றையும் செய்துள்ளார். அடியவர்களுடைய வரலாற்றைத் திருத்தொண்டத் தொகை என்னும் நூலாக அமைத்தார் தனி அடியார் 63 பேருடைய வரலாற்றையும் தொகையடியார் 9 பேர் பற்றிய குறிப்பும் இந்நூலிலே குறிக்கப்பட்டுள்ளன. இன்னும் இவருடைய பதிகங்களில் ஈழநாடு குறுக்கை நாடு கொண்டல் நாடு தென்னாடு நறையூர்நாடு நாங்கூர்நாடு புரிசை நாடு, பொன்னூர் நாடு மருகல் நாடு, மிழலைநாடு, விளத்தூர் நாடு, வெண்ணிக் கூற்றம் வெண்ணிநாடு, வேளா நாடு என்னும் நாடுகள், பற்றிய குறிப்புகள் வந்துள்ளன. இவற்றுள் கொண்டல் நாடு தவிர்ந்த ஏனைய நாடுகள் பற்றிய குறிப்பு கல்வெட்டுகளிலும் உள்ளன. ஈழநாட்டிலுள்ள மாதோட்டத்துக் கேதீச்சரம் பற்றியும் பதிகம் பாடியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இளமைக்காலம் இயற்கையழகில் மனம் செல்லும் சுந்தரரும் இறைவனை வழிபாடு செய்யும் போது இயற்கைக் காட்சியிலும் மனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றியதைப் பாடல்களிலே குறிப்பிட்டுள்ளார். விலங்குகளின் வாழ்விலும் காதலன் பால் நிகழும் பூசலைக் காணும்படி சீபருப்பதமலையிலே வாழும் யானையின் வாழ்வியலைக் காட்டுகிறார்.

*"மாற்றுக் களிறடைந்தாய் என்று மதவேழம் கையெடுத்து*
*முற்றிக் கனல் உமிழ்ந்து மதம் பொழிந்து முகம் சுழிய*
*தூற்றத் தரிக்கில்லேன் எனறு சொல்லி அயலறியத்*
*தேற்றிச் சென்று பிடி சூளறும் சீபர்ப்பத மலையே."*

இப்பாடலில் யானை ஒன்று மதங்கொண்டு அறிவுநிலை திரிந்து தன்னுடைய பெண்யானையை நோக்கி "நீ இன்னொரு ஆண்யானையை அடைந்தாய்" எனத் தன்கையை மேலெடுத்துப் பிளிறிப் பூசலிட்டு மதம் ஒழுக்கி நின்றது அது கண்ட பெண்யானை "இது கேட்கத் தரியேன்" என்று சொல்லி அயலவர் அறியத் தூற்றி நின்றது. ஆண்யானை உண்மையை உணர்ந்து தன்னுடைய அறிவற்ற செயலுக்கு வருந்திப் பெண் யானையைத் தேற்றி தான் இனிமேல் அவ்வாறு செய்வ தில்லையென சூளுறவு செய்தது. இக்காட்சி இளமைக்காலத்து மனித வாழ்வியலிலும் வந்தமையக் கூடும். சுந்தரர் விலங்குகளின் வாழ்வியலூடாக இச்செய்தியைக் கூறுகிறார். மக்களுக்குப் பல அறிவுரைகளையும் பாடல்களுடே கூறுகிறார்.

சுந்தரர் இருமனைவியரோடு வாழ்ந்தவர். மனித வாழ்வியலில் விரும்பும் எல்லாவற்றையும் இறைவழிபாட்டால் பெறலாம் என எண்ணிக் கருமம் செய்தவர் முதலில் பரவையை இறையருளால் மணஞ்செய்தவர் பின்னர் சங்கிலியாரையும் திருமணம் செய்தவர் பரவை அவர் மீது கோபம் கொண்ட போது அவளிடம் இறைவனையே தூது போகும்படி வேண்டியவர். அவரது இளமைக்குணவியல்புகளைப் பதிகங்களிலே பரக்கக் காணலாம் இறைவன் மீது அவர் கொண்டிருந்த பக்தி அநுபவம் இளமைப்பருவத்தின் குணவியல்பைக் காட்டுவதாக உள்ளது. வழி பாட்டினால் என்ன பயன்? என்று இன்றைய இளந்தலைமுறை கேட்பது போல அன்று சுந்தரர் பாடியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*"வாரமாகித் திருவடிக்குக் பணிசெய் தொண்டர் பெறுவதென்னே
ஆரம் பாம்பு வாழ்வதார் ஊர் ஒற்றியூரேலும் உம்மதன்று
தாரமாகக் கங்கையாளைச் சடையில் வைத்தவடி கேளும் உம்தம்
ஊருங்காடு உடையும் தோலே ஓணகாந்தன் தளியுளீரே"*

இளமை நிலையில் சுந்தரர் இறைவனைக் கேலி செய்வது போலப்பாடுகிறார். அன்போடு இறைவன் திருவடியை வணங்கிப் பணிசெய்யும் தொண்டருக்கு இறைவனிடம் கொடுப்பதற்கு ஒன்றுமே இல்லை என்ற பொருட்படப் பாடலை அமைத்துள்ளார். இறைவனின் ஆரமாக அமைந்தது பாம்பே. அவர் வாழும் ஊரும் ஒற்றியூர். சொந்தமான ஊரும் இல்லை. இன்னொரு தாரமாக கங்கையைச் சடையில் வைத்திருக்கிறார். மேலும் அவருடைய இன்னொரு ஊர் காடு உடுக்கும் உடையும் தோல்தான். ஓண காந்தன் தளி என்னும் தலத்தில் உறையும் இறைவனோடு நேரில் பேசுவது போல சுந்தரரது பாடல் அமைந்துள்ளது. சுந்தரர் இறைவனோடு மிக நெருக்கமான தோழமையுடன் இருப்பதாகப் பாவனை செய்து பாடுகிறார். இதனால் அவருக்குத் "தம்பிரான் தோழர்" என்ற பெயரும் வழங்கப்பட்டது.

அடியார்களை வணங்கும் புதிய வழிபாட்டு மரபு ஒன்றைச் சுந்தரர் தொடக்கி வைத்துள்ளார் இது வழிபாட்டில் இளமையின் செல் நெறியை உணர்த்தும் செயற்பாடாகும். அடியார்க்கு அடியானாக வேண்டும் என்ற சுந்தரரது விருப்பினை இறைவன் நிறைவேற்ற "தில்லைவாழ் அந்தணர தம் அடியார்க்கும் அடியேன்" என்று அடியெடுத்துக் கொடுத்தார். "திருத்தொண்டத்தொகை" என்ற அந்தப் பதிகமே பிற்காலத்தில் சேக்கிழார் "பெரியபுராணம" என்ற நூலை எழுதுவதற்கு அடிப்படையாக அமைந்தது. வழிபாட்டு முன்னோர் வழிச் செல்ல விரும்பிய இளைஞர் சுந்தரரே. தனக்கு முன்னே வாழ்ந்த மெய்யடியார்கள் பற்றிய செய்தியைப் பதிவு செய்து இளமையின் பாரிய கடமை ஒன்றினை நிறைவேற்றினார். இளமைக்குணங்களையெல்லாம் வழிபாட்டு நெறியிலே பணிய வைத்த சுந்தரரது பாடல் அவரது புதிய வாழ்வியல் நெறியை விளக்கி நிற்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*"பத்தராய்ப் பணிவார்க ளெல்லார்க்கு மடியேன்*
*பரமனையே பாடுவாரடி யார்க்குமடியேன்*
*சித்தத்தைச் சிவனப்பாலே வைத்தார்க்கு மடியேன்*
*திருவாரூர்ப் பிறந்தார்களெல்லார்க்கு மடியேன்.*
*முப்போதுந் திருமேனி தீண்டு வார்க்கடியேன்*
*முழுநீறு பூசிய முனிவர்க்கு மடியேன்*
*அப்பாலுமடிச் சார்ந்த வடியார்க்குமடியேன்*
*ஆரூரன் ஆரூரில் அம்மானுக்காளே."*

மனித குலத்தை மேம்படுத்தும் வழிபாட்டை நெறிப்படுத்தும் சுந்தரர் 18 ஆண்டுகளே இந்த உலகில் வாழ்ந்தார் அவருடைய வாழ்க்கை உலகியல் இன்பங்களையே நாடும் சாதாரண மனிதர்களின் மனங்களில் என்றும் நிலைத்து நிற்கும். உலகில் இன்பங்களை நாடும் உள்ளம் படைத்த சுந்தரர் இளமை உள்ளத்தால் இறைவனை வழிபட வழிகாடடுகிறார். வாழ்க்கையில் வழிகாட்டும் அடியாரை மனத்திருத்தி வழிபட வேண்டுமென்கிறார். இறைவனை உணரமுடியாத போது உணர்ந்தவரை வழிபட்டு அவர் செல்நெறியைக் கடைப்பிடிக்க வேண்டும் என உறுதியாக நம்பினார் சுந்தரருடைய தேவாரங்களில் காணப்படும் பக்தியுணர்வு அவர் இளமையுணர்வுகளோடு இணைந்து நின்றது. உலக இன்பங்களைத் துறந்து இறைவனை அடையும் வழி ஒன்றையே சிந்திக்கும் துறவியாக அவர் வாழவில்லை மனிதனுடைய வாழ்வியல் நிலையிலே நின்று பக்தியுணர்வுடன் வழிபாடு செய்ய இறைவனே உடன் நின்று உதவுவான் என அறிவுறுத்துகின்றார். சுந்தர வேடங்கள் பூண்டு கந்தம் பூசி அழகுக் கோலத்தோடு வழிபாடு செய்தவர். இளமையின் இனிய தோற்றத்தையே இறைவனுக்கு அர்ப்பணிக்க எண்ணினார்.

சுந்தரருடைய வாழ்வியலும் வாரப்பாடல்களும் இன்றைய இளைய தலைமுறையினரை ஆற்றுப்படுத்த வல்லவை. ஆற்றலுள்ள இளமைக்காலத்தில் அனைத்துச் செயல்களும் சிறப்பாக நடைபெற வழிபாடு வழிகாட்டும். அழகும் தூய்மையும் அன்பும் இளமையின் அணிகலன் துள்ளும் உள்ளத்தை இக்குணங்கள் அடக்கி ஆளும்போது வழிபாடு செயற்படும் சுந்தரவேடம் பூண்டு கந்தம் பூசி இறைவனை வழிபட்ட சுந்தரரது உள்ளத்தில் அடியவர் பற்றிய பணிவு ஏற்பட்ட போது "நாயனார்" ஆனார். நம்பி ஆரூரர் தம்பிரான் தோழன் ஆனார். இந்த

12486 SC



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றம் பக்தி நெறியால் ஏற்பட்டது. எனவே எமது இளைய தலைமுறையும் அடியவரை வழிபடும் செல்நெறியைத் தொடரவேண்டும் முதுமை அதற்குரிய வழிகாட்டுதலைச் செய்து முரண்படாமல் ஒதுங்கி நிற்கவேண்டும். தடுத்தாட்கொள்ளப்பட்ட நம்பி ஆரூரர் தன் பணியை உணர்ந்தது போல எமது இளைய தலைமுறையையும் தடுத்தாளும் ஆற்றலை நாம் பெற வேண்டும். எமது வாழ்வியல் நடைமுறைகளில் வழிபாட்டை நாம் கைக்கொள்ள வேண்டும் அதை இளைய தலைமுறை தானாகவே பின்பற்றும்.

காலத்துக்கும் வாழும் சூழலுக்கும் ஏற்ற வகையில் வழிபாடு அமைய வேண்டும். வழிபாட்டிடங்களை இளையதலைமுறையின் ஆற்றல் கொண்டு செம்மைப்படுத்துவதே சிறந்தது தற்கால முதுமை இளமையிடம் பொறுப்புகளைக் கையளிக்க விரும்பாது தானே தலைமைத்துவம் பேண முயல்கிறது. அதனால் இளமையும் வழிபாட்டு நெறியை விட்டு விலகி நிற்கிறது. கோயில் தொண்டுகளில் இளமையே பொறுப்பை ஏற்று முன்னின்று உழைக்க வேண்டும் பொது நலம் பேணும் குணவியல்பை இளமை தன்னகத்தே கொள்வதற்கு இதுவே சாலச் சிறந்த வழியாகும். இளமையின் உடல் உழைப்பும் செயல்திறனும் பொருளீட்டம் என்ற நிலையில் மட்டும் பயன்படாமல் அனைவரையும் ஒன்றிணைக்கும் வழிபாட்டு நடைமுறைகளிலும் பங்கு கொண்டு பயனடைய வேண்டும்.

இறைவழிபாட்டில் இளமை இணையும் போது உலக நடைமுறைகளில் ஒழுங்கைப் பேணும் தகுதிப்பாட்டைப் பெறும் வழிபாட்டினால் பெறும் ஒழுங்கும் அமைதியும் வன்முறை உணர்வை அடக்கி அன்புநெறியில் செலுத்தும் கோயில் அறங்காவல் பணியும், சைவ நிறுவனப் பணியும், அறநெறிக்கற்கைநெறியும் இளமையுடன் இணையவேண்டும். இளைஞர்களின் கைகளிலேபொறுப்பை முதுமை கையளித்து இணைந்து பணி செய்வதால் செயற்பாடுகளில் சீர்மையும் சிறப்பும் மேலோங்கும் "சைவநீதி விளங்குக உலகமெல்லாம்". என்ற கொள்கையை இளமையே எடுத்துரைக்க வேண்டும் மேன்மை கொள் சைவநீதியை உலகமெல்லாம் விளங்க வைக்க இன்று உலகமெல்லாம் பரந்து நிற்கும் தமிழ் இளைஞர்கள் காத்து நிற்கிறார்கள். அவர்களின் உரமான கைகளிலே வழிபாட்டு நெறியைப் பரப்பும் பொறுப்பாள் கையைக் கொடுத்து முதுமை பக்கபலமாக அருகிலே நின்று இணைந்து பணி செய்வதே தமிழர் வழிபாட்டின் செல்நெறி என்பதை எல்லோரும் உணரவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தை உணர்த்தும் கன்னியர் நோன்பு

(கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்)

தமிழ் மொழியிலே தோன்றிய இலக்கியங்கள் தமிழர் பண்பாட்டு மரபுகளை நன்கு பதிவு செய்து வைத்துள்ளன. குறிப்பாகத் தமிழிலே எழுந்த பக்தி இலக்கியங்கள் தமிழர் வழிபாட்டு நடைமுறைகளை நன்கு விளக்கியுள்ளன. இயற்கையோடியைந்த அக்கால மக்களின் வாழ்வியல் இன்று நாம் மீள நோக்க வேண்டிய ஒரு பதிவாகவே உள்ளது. காலத்தின் செல்நெறி உணர்ந்து கடமைகளை ஆற்றுகின்ற ஒரு வாழ்வியல் வழிபாட்டு நடைமுறைகளுடன் ஒன்றியிருந்தது. இயற்கையின் வெளிப் பாடான வெப்ப தட்ப நிலைகளுக்கு ஏற்ற ஒரு வாழ்வியலை வகுத்துக் கொண்ட முறைமையும் தெளிவாகப் புலப்படுகின்றது. காலத்தின் ஓட்டத்தைக் கண்காணித்து அதற்கேற்ற வாழ்வியல் நடைமுறைகளை உருவாக்கி வாழ்ந்த வாழ்க்கையையும் உணர்த்துகிறது. தமிழ் இலக்கியத்தில் ஆண்டாள் பாடிய திருப்பாவையும் மணிவாசகர் பாடிய திருவெம்பாவையும் இதனை இன்று நன்குணர்த்துகின்றன இவர்கள் வாழ்ந்த காலம் வழிபாட்டால் மனித வாழ்வு செம்மையுற்றிருந்த காலம். அக்காலத்தை அவர்களுடைய பாடல்களினூடே காண விழையும் போது இக்கட்டுரை உருவாகிற்று.

ஆண்டாள் பாடிய திருப்பாவை 30 பாடல்களில் ஒரு வழிபாட்டு அநுபவத்தைக் காட்டுகின்றது. மணிவாசகர் பாடிய திருவெம்பாவை 20 பாடல்களில் ஒரு வழிபாட்டு முறையை விளக்குகின்றது. ஆண்டாள் பாடல்களிலே வழிபாட்டில் பெண்களின் பங்களிப்பும் உணர்வு நிலையும் பட்டறிவாகவே வெளிப்பட்டுள்ளன. மணிவாசகர் பாடல்களில் அவை பாவனைப் பாடல்களாகப் பாடப்பட்டுள்ளன. “பக்தி நிலை” என்ற தூய்மையான உணர்வு இருவருடைய உள்ளத்திலும் இருந்தது காலத்தால் முற்பட்ட ஆண்டாள் பாடல்கள் தான் மணிவாசகரையும் திருவெம்பாவைப் பாடல்களைப் பாடத் தூண்டியிருக்கலாம். ஆண்டாள் பண்பாட்டு நிலையிலே மார்கழி மாதத்திலே சிறப்பாகப் பெண்களால்



Prof. V. SIVASAMY
UNIVERSITY OF JAFFNA
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடைப்பிடிக்கப்பட்ட வழிபாட்டு நடைமுறையைப் பாடினாள் இந்த வழிபாட்டு நடைமுறை மணிவாசகருடைய காலத்திலும் நடைமுறையாக இருந்தமையால் அவரும் அதைப் பாடியுள்ளார். எனவே ஆண்டாளின் வழிகாட்டல் ஆய்வுக்குரியதாகின்றது. திருப்பாவைப் பாடல்களின் உட் பொருள் அவள் கண்ணன் மீது கொண்ட உயர்ந்த அன்பு நிலையாகும். அந்த அன்பு நிலையைப் பெண்கள் அனைவரும் பேணும் ஒரு பக்தி நெறியாக ஆண்டாள் காட்டினாள். எனவே அது இன்றுவரை ஒரு வழிபாட்டு நடைமுறையாக நிலைத்து நிற்கிறது.

30 பாடல்களில் திருப்பாவையில் பதிவு செய்யப்பட்ட பாடல்கள் கூறும் செய்திகள் நாட்டார் பண்பாட்டையும் உணர்வு நிலையும் தெளி வாகக் காட்டுகின்றன. காலத்தின் கணிப்பீடும் இயற்கையின் தோற்றமும் செய்ற்கையின் போக்குகளும் வழிபாட்டு நடைமுறைகளும் அவற்றின் பயன்பாடும் எனப் பல்வேறு செய்திகளின் தொகுப்பாக ஆண்டாளின் திருப்பாவை பாடப்பட்டுள்ளது. பாடல்களை ஆழமாக நோக்கும் போது ஆண்டாளின் புலமைத்திறன் தெளிவாக வெளிப்படுகின்றது.

மாதங்களில் சிறந்த மாதமாகக் கருதப்படும் மார்கழியைப் பற்றி ஆண்டாள் கூறும் குறிப்பு மிகவும் முக்கியமானது

*"மார்கழித்திங்கள் மதிநிறைந்த நன்னாளால்*
*நீராடப் போதுவீர் போதுமினோ நேரிழையீர்!*
*சீர்மல்கு மாய்ப்பாடிச் செல்வச் சிறுமீர்காள்!"*

(திருப்பாவை 1:1- 3)

மாதம் என இன்று வழங்கப்படும் சொல் ஆண்டாளால் பயன் படுத்தப்படவில்லை. "திங்கள்"என்ற தூய தமிழ்ச் சொல்லே பயன் படுத்தப்பட்டுள்ளது. இச்சொல்லை மேலும் ஒரு பாடலில் பயன் படுத்தியுள்ளாள்.

*"ஒங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி*
*நாங்கள் நம்பாவைக்குச் சாற்றி நீராடினால்*
*தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்து..."*

(திருப்பாவை 3: 1 - 3)

மார்கழி என்னும் சொல்லை இருபாடல்களில் குறிப்பிட்டுள்ளாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*"வாழ உலகினில் பெய்திடாய் நாங்களும்*
*மார்கழி நீராட மகிழ்ந்தேலோர் எம்பாவாய்"*

(திருப்பாவை 4:7 - 8)

*"மாலே! மணிவண்ணா! மார்கழி நீராடுவான்*
*மேலையார் செய்வனகள் வேண்டுவன கேட்டியேல்...."*

(திருப்பாவை 26:1 -2)

இக்குறிப்புகள திங்களில் சிறந்த மார்கழியின் பெயரை ஆண்டாள் ஆவணப்படுத்த முயன்றதை விளக்குகின்றன. மணிவாசகர் பாடிய திருவெம்பாவையில் இருபதாம் பாடலில் மட்டுமே "போற்றியாம் மார்கழி நீராடேலோர் எம்பாவாய்" என மார்கழி பற்றிய ஒரு குறிப்பு மட்டுமே உள்ளது. ஆண்டாள் பாடும் போது காலத்தைக் கருத்திற் கொண்டு பாடியுள்ளாள். அவள் பாடிய 30 பாடல்கள் மார்கழித்திங்களில் 30 நாட்கள் அடங்கியிருந்ததையும் உணர்த்துகின்றன. திங்களின் தொடக்கம் மதிநிறைந்த நன்னாளாகக் குறிப்பிடப்படுவதால் அதனைத் தொடர்ந்த 30 நாட்கள் மார்கழியில் அடங்க அடுத்த மதி நிறைந்த நாள் அடுத்த மாதத்தின் தொடக்கமாக அமையும் நடைமுறை விளக்கப்படடுள்ளது. ஆண்டாள் பாடிய "நாச்சியார் திருமொழியின்" முதற் பாடல் தொடரும் மாதங்களின் பெயரைப் பதிவு செய்துள்ளது. அதிற்காணும் செய்தி

*"தையொரு திங்களும் தரைவிளக்கித் தண்மண்டலமிட்டு மாசி முன்னாள்*
*ஐயநுண்மணற் கொண்டு தெருவணிந்து அழகினுக் கலங்கரித்தனங்கதேவா!"*

இதற்குச் சான்றாகவுள்ளது ஆண்டாள் காலத்தைக் கணித்து வழிபாடு செயத மரபைத் தன்பாடலிலே நன்கு தெளிவுபடுத்தியுள்ளாள்.

மார்கழி மாதத்தில் வழிபாடு செய்யப்பட்ட வேளையையும் ஆண்டாள் விளக்கிக் கூறியுள்ளாள் பெண்கள் வழிபாடு செய்ய உகந்த நேரம் விடிகாலைப் பொழுதேயாகும் அப்பொழுதினை இயற்கை நிலையிலும் செயற்கை நிலையிலும் ஆண்டாள் காட்டியிருப்பது திருப் பாவையின் தனிச்சிறப்பாகும் பறவைகளின் ஒலி வேறுபாடும் வானத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளுப்பும், மலர்களின் மலர்வும், கோழியின் கூவலும், குயிலின் குரலும் வழிபாட்டுக்குரிய வேளையை அறிவிக்கின்றன. இயற்கையோ இணைந்து வாழும் மனிதன் தன்னைச் சூழ வாழும் உயிரினங்களாலும் நெறிப் படுத்தப்பட்டதை ஆண்டாள் மிக நுணுக்கமாகப் புலப்படுத்துகிறாள்.

*"கீசு கீசென்றெங்கும் ஆனைச்சாத்தன் கலந்து*
*பேசின பேச்சரவம் கேட்டிலையே பேய்ப்பெண்ணே!"*

(திருப்பாவை 7 : 1 - 2)

ஆனைச்சாத்தன் என்னும் பறவை இனம் தமக்குள் பேசிக் கொள்ளும் நிலையில் பொழுதின் விடிவை மனிதன் உணர்ந்த காலம் அது. புட்களின் ஒலியால் தூக்கம் கலையும் நிலை ஆண்டாள் குறிப்பிடும் போது மனிதன் இயற்கையோடு இணைந்திருந்த பாங்கினை நன்கு உணர்த்துகிறாள். பக்திநெறியில் மக்களை ஆற்றுப்படுத்த இயற்கையும் துணைபுரிந்ததை விளக்குகிறாள். கீழ் வானம் வெளுத்துப் பகலின் வரவை அறிவிக்கும் புள்ளினம் சிலம்பி துயில்கலைக்கும், கோழி கூவி எழுப்பும், குயில் கூவியெழுப்பும் இப்பறவைகள் மனிதனுடைய உறை விடங்களுக்கு மிக அணித்தே தங்கியிருந்து அவனை காலத்தோடு இயங்க வைத்தன.

இதே போன்றுசெயற்கையான ஒலிகளும் துயிலெழுப்பப் பணி செய்தன. வீட்டு நிலையில் வாச நறுங்குழல் ஆய்ச்சியர் மோர் பெறத் தயிர்கடையும் மத்தின் ஒலி தூக்கத்தைக் குலைக்கிறது. அவர்கள் கைவளை ஒலியும் சேர்ந்து எழுப்புகின்றது. சமூக நிலையில் கோயில்களிலே வழிபாட்டிற்கான நேரத்தை அறிவிக்கும் சங்கொலி எழுப்பப்படுகின்றது. எருமைகளின் காலடி ஓசை கேட்கிறது. மேய்ச்சலுக்காகக் கூட்டமாக செல்லும் அந்த எருமைகளின் கால்கள் எழுப்பும் ஒலி மக்களின் தூக்கத்தைக் குழப்பி எழுப்புகிறது. இன்னும் ஒரு காலடி ஓசையும் இப்பணியைச் செய்கிறது.

*"செங்கல் பொடிக் கூறை வெண்பல் தவத்தர்*
*தங்கள் திருக்கோயில் சங்கிடுவான் போதந்தார்"*

(திருப்பாவை 14 : 3- 4)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செங்கற்களைப் பொடி செய்த சிவப்பு நிறத்திலே ஆடையணிந்த வெண்ணிறமான பற்களை உடைய தவக்கோலத்தவர் திருக்கோயிலை நோக்கி நடந்து செல்லும் காலடி ஓசை காதில் கேட்கின்றது கோயிலிலே சங்கு ஊதுவதற்காகத் தமது வழிபாட்டுக் கடமையை நிறைவேற்று வதற்காக விரைந்து செல்லும் அவர்களுடைய காலடி ஓசை வீடுகளிலே காலத்தை மறந்து துயில்வோருக்குக் கடமையை நினைவூட்டும் ஓசையாகவுள்ளது. கடிகாரப் புழக்கமில்லாத அக்காலத்தில் சமூகம் காலத்தோடு எவ்வாறு இயைந்து நின்ற தென்பதை ஆண்டாள் காட்டும் பாங்கு அற்புதமானது.

வழிபாட்டு நடைமுறைகளைச் செயற்படுத்தும் பொறுப்பைப் பெண்களே ஏற்றிருந்ததை ஆண்டாள் பாடல்கள் தெளிவாய் உணர்த்துகின்றன. பெண்களை விளிக்கும் சொற்கள் இதற்குச் சான்றாக உள்ளன. நேரிழையீர், செல்வச்சிறுமீர்காள், பிள்ளாய், பெண்பிள்ளாய், பாவாய், மாமன்மகளே, பொற்கொடியே, நங்காய், செல்வப்பெண்டாட்டி, நங்கைமீர், இளங்கிளியே யாசோதாய், மருமகனே, அம்மா நப்பின்னை நங்காய், அறியாத பிள்ளைகள் எனப் பாடல்களிலே பயன்படுத்தப்பட்ட சொற்கள் பெண்களின் பருவநிலைகளையும் உறவு நிலைகளையும் குறிப்பிட்டு நிற்கின்றன. மார்கழி நோன்பு என்னும் வழிபாட்டு நடைமுறை சிறப்பாகப் பெண்களால் செயற்படுத்தப்பட்டது. பெண்களே காலத்தை யுணர்ந்து தமது நாளாந்தக் கடமைகளை நிறைவேற்றும் திறனுடையவர் எனவே வழிபாட்டு நடைமுறைகளையம் அவர்களே பேணும் மரபு உருவாகியிருந்ததை ஆண்டாள் பாடி வைத்தாள் பின் வந்த மணிவாசகரும் அதனைப் பாடினார்.

இருவரும் "மார்கழி நீராடல்" எனும் வழிபாட்டு நடைமுறையைப் பாடினர். "மழைவளம் வேண்டுதல்" என்ற நிலையில் இருவரும் ஒன்றுபட்டுள்ளனர். பெண்களின் நோன்பு மழைவளம் தரும் நலமுடையது பெண்களின் நோன்பின் இலக்கு மக்களை வழிபாட்டு நெறியில் ஆற்றுப்படுத்துவதே. இதனை ஆண்டாளின் வேண்டுகோள் வருமாறு கூறுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*"எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன்றன்னோடு*
*உற்றோமே யாவரும் உனக்கே நாம் ஆட்செய்வோம்*
*மற்றை நம் காமங்கள் மாற்றேலோர் எம்பாவாய்!"*

(திருப்பாவை 29: 6 -8)

மணிவாசகர் பாடலின் விண்ணப்பம் வருமாறு

*"எங்கள் பெருமான் உனக்கொன்று உரைப்போம் கேள்*
*எங்கொங்கை நின்னன்பரல்லார் தோள் சேரற்க*
*எங்கை உனக்கல்லா தெப்பணியும் செய்யற்க*
*கங்குல் பகலெங்கண் மற்றொன்றுங் காணற்க*
*இங்கிப் பரிசே எமக்கு எங்கோன் நல்குதியேல்*
*எங்கெழிலென் ஞாயிறு எமக்கு ஏல் ஓர் எம்பாவாய்"*

(திருப்பாவை 19: 2 -4)

பெண்கள் இறைபணியில் தம்மை இணைத்துக்கொள்ள விரும்பிய காலத்தையே ஆண்டாள் திருப்பாவையும் மணிவாசகர் திருவெம்பாவையும் உணர்த்துகின்றன. ஆண்டாள் திருமால் வழிபாட்டையும் மணிவாசகர் சிவன் வழிபாடடையும் பாடியுள்ளனர். ஆண்டாள் தொடக்கி வைத்த நாட்டுபுற வழிபாட்டு நடைமுறையை மணிவாசரும் தொடர்ந்து உள்ளார் இது பெண்மையின் பக்தி நெறி ஆற்றுப்படுத்தலைச் சமூகம் ஏற்றதையும் ஆண்மை அதனுடன் இயைபு பட்டதையும் தெளிவாய்ச் சுட்டி நிற்கின்றது. பெண்களின் வழிபாட்டுக்கடமைகள் செவ்வனே நிறைவேற்றப்பட வேண்டும் சிறுமியர் முதல் முதியோர் வரை வழிபாட்டு நடைமுறைகளை ஒருங்கிணைந்து செயற்படுத்தும் பண்பட்ட வாழ்வியலை மார்கழி நீராடல் காட்டுகிறது. காலத்தையுணரும் மனப் பக்குவமும் செயற்பாட்டுத்திறனும் கொண்ட பாவையரின் நோன்பு நாடுதழுவிய, உலகு தழுவிய நன்மையை வேண்டிநிற்பது அதுவே எல்லோரையும் வழிநடத்தவல்லது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபுராணம் காட்டும் சிறப்பு வழிபாடு

(கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்)

இறைவனைவழிபடுதல் எல்லோர்க்கும் உரியதாகும். ஆனால் அவ் வழிபாடு எப்படிச் செய்யப்பட வேண்டும் என்பதில் இன்று பல கருத்து நிலைகள் தோன்றியுள்ளன. பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் தோன்றிய பக்தி இலக்கியங்களில் வழிபாட்டின் வகைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. உலக இன்பங்களில் அமிழ்ந்து கிடக்கும் மனிதன் இறைவழிபாட்டில் இயைபுபட மறுக்கின்றான் தன் முயற்சியால் தான் பெற்ற இன்பங்களையே நிலையானது என எண்ணி வாழ்கிறான் ஆனால் இன்ப வாழ்க்கையென்பது பொருளால் பெறப்படுவதல்ல மனப்பக்கு வத்தால் வழிபாட்டால் பெறப்படுவது. கோயில் வழிபாடு என்ற ஒரு வழிபாட்டு நடைமுறை தோன்றிய போது வழிபாட்டிலும் வகைப்பாடுகள் தோன்றலாயின இறை உருவங்களை வழிபடும் போது அவற்றைப் பற்றிய பல்வேறு விளக்கங்களும் வேண்டப்பட்டன.

இயற்கையில் இறைவனைக் கண்டு வழிபட்ட முறைமையும் பண்டைக்காலத்தில் இருந்துள்ளது. காரைக் காலம்மையாரின் பாடல்களில் இதற்கான சான்றுகளைக் காணலாம் அவரைத் தொடர்ந்து நாயன்மார்களும் இயற்கை வழிபாடு பற்றிய செய்திகளைத் தேவாரப் பாடல்களில் குறிபபிட்டுள்ளனர். மணிவாசகர் வழிபாட்டில் இறையுருவத்தை வழிபடும் முறைமையை எடுத்துக் காட்டியுள்ளார் அவர் பாடிய சிவபுராணத்தில் இறைவனைப்பாடி வழிபடும் போது ஒரு தனித்து வமான பக்திப்புலப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளார் இன்று அவரால் இயற்றப்பட்ட சிவபுராணம் வழிபாட்டில் சிறப்பாக இடம் பெறும் பாடலாக உள்ளது தனிமனித வழிபாட்டு நிலையிலன்றிக் கூட்டு வழிபாட்டு நிலையிலும் சிவபுராணம் பாடப்படுகிறது.

சிவபுராணத்தில் மணிவாசகர் சிவனுடைய அருட் கோலத்தை எல்லோரும் காண வைக்கின்றார் திருப்பெருந்துறையிலே குருந்த மரநீழலிலே குருவடிவாய் வந்த சிவனால் ஆட்கொள்ளப்பட்ட அநுபவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரைப் புதியதொரு வழிபாட்டு நிலையிலே செல்ல வைத்தது "நமச்சிவாய" என்ற மந்திரச் சொல்லை வாழ்த்திப் பாடி இறைவனை வாழ்த்தும் போது தாள், அடி கழல், என்ற மூன்றம்சங்களை வழிபடப் பயிற்றியுள்ளார் அவருடைய அந்த மூவகைப்பாடும், இறைவன் தோற்றத்தை எல்லோரும் காணும் ஒரு பக்திப்பரவசத்தை ஏற்படுத்து கின்றது. நமச்சிவாய என்பது இறைவனது ஐந்தெழுத்து மகாமந்திரமாகும். இதனைத் தூலபஞ்சாட்சரம் என்றும் குறிப்பிடுவர் நம சிவாய என்பது வடமொழி விதிப்படி நமச்சிவாய எனப் புணர்ந்தது என உரையாளர் கூறுவர் "வணக்கம் சிவனுக்கு" என்பதே இதன் பொருளாகும் சைவ சித்தாந்த நூலார் இந்தஐந்தெழுத்து மகாமந்திரத்தின் ஒவ்வொரு எழுத்தும் ஒவ்வொரு பொருளை உணர்த்துமென்பர் நமச்சிவாய என்பதில் நகரம் திரோதான சக்தியையும் மகரம் மலத்தினையும் சிகரம் இறைவனையும் வகரம் திருவருட் சக்தியையம் யகரம் உயிரையும் குறிக்கும் இது பந்த நிலையிலுள்ள உயிர்களை பிறவிக் கண்ணுய்த்து இருவினைப் படுத்தி மல நீங்கும் நிலை வருவித்து அருள் வாயிலாக வீடடைதலை உணர்த்துவது எனவே நமச்சிவாய என்று சொல்வதே ஒரு வழிபாடு ஆகும்.

மணிவாசகர் சிவபுராணம் பாடும் போது இறைவன் தோற்றத்தில் தாள் அடி, கழல் என்னும் மூன்றையும் முன்னிலைப்படுத்தி வழிபடுகிறார். எனவே அவைபற்றிய செய்திகளை நோக்குவது வழிபாட்டிற்கு எம்மையும் ஆற்றுப்படுத்தும்.

**தாள் :**

*"நாதன் தாள் வாழ்க"*
*"இமைப்பொழுதும் என்னெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க"*
*"கோழியாண்ட குருமணிதன் தாள் வாழ்க"*
*"ஆகமமாகி நின்றண்ணிப்பான் தாள் வாழ்க"*
*"அவனருளாலே அவன் தாள் வணங்கி"*

இவ்வடிகளின் தொகுப்பு நிலையான பொருள் வருமாறு. எப்பொருட்கும் தலைவனாகிய இறைவனுடைய தாள் வாழ்க கண்ணி மைக்கும் நுண்ணிய கால அளவிலும் என் மனத்தினின்றும் நீங்காத வனுடைய தாள் வாழ்க. திருவாடுதுறை என்னும் தலத்தினை அரசாட்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்த இறைவனாகிய பரமாசாரியனது தாள் வாழ்க. வீட்டு நெறி கூறும் ஆகமப் பொருளாகி நின்று உயிர்களைத் தன்பால் அணுகச் செய்து அருள் புரிபவனாகிய இறைவனது தாள் வாழ்க.

இவ்வடிகளில் "தாள்" என்பது உள்ளங்காலைக் குறிக்கும் குருவடிவாக இறைவன் திருவடி தீட்சை பெற்றபோது இறைவன் தாள் மணிவாசகர் தலையிற்பட்டது. அந்த அநுபவம் அவர் மட்டும் உணர்ந்தது. வலியவந்து தனக்குத் திருவடி தீட்சை தந்த இறைவனைப் பாடிப்புகழும் மணிவாசகர் அதை எல்லோரும் உணர வைக்கின்றார். சிவனுடைய தூக்கிய திருவடியில் தாளை நாம் கண்டு வணங்கலாம். அதனை எம் தலைமேல் வைத்து வழிபடல் வேண்டும் அதற்கும் அவனுடைய திருவருளே வேண்டும். இறைவன் எம்மை வலிய வந்து ஆட்கொண்டு அருள்புரிய நாம் அவன் தாளை வழிபட வேண்டும் சிறப்பியல்பாகும்.

**2. அடி**

*"ஏகன் அநேகன் இறைவன் அடி வாழ்க"*
*"வேகம் கெடுத்தாண்ட வேந்தன் அடி வெல்க"*
*"ஈசனடி போற்றி எந்தை அடி போற்றி"*
*"தேசனடி போற்றி சிவன் சேவடி போற்றி"*
*"நேயத்தே நின்ற நிமலன் அடி போற்றி"*
*"மாயப்பிறப்பறுக்கும் மன்னன் அடி போற்றி"*
*"சீரார் பெருந்துறை நம் தேவன் அடி போற்றி"*
*"மெய்யே உன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்"*
*"செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடி"*

இவ்வடிகளின் தொடுப்பு நிலையான பொருள் வருமாறு

ஒருருவானவனும் ஒன்றல்லாத பலவுருவானவனும் எப்பொருளிலும் தங்குகின்ற இறைவனது திருவடி வாழ்க. ஆணவ மலத்தின் வெம்மையைக் கெடுத்து அடியேனை ஆண்டருளிய இறைவனுடைய திருவடிகள் வெற்றி பெறுக. ஐசுவரியத்தையுடையவனது திருவடிக்கு வணக்கம் எமது தந்தையினது திருவடிக்கு வணக்கம் ஞான ஒளி வடிவையுடைய பரமாசாரியனது திருவடிக்கு வணக்கம் அன்பரது அன்பின் கண் அன்புருவாய் நின்ற மாசற்றவனது திருவடிக்கு வணக்கம் மாயையினால் உண்டாகும் பிறவியை வேரோடு அறுக்கும் அரசனது



Prof. V. SIVASAMY
UNIVERSITY OF JAFFNA
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவடிக்கு வணக்கம் சிறப்புப் பொருந்திய திருப்பெருந்துறையின் கண் பரமாசாரியராய் எழுந்தருளிய நமது கடவுளது திருவடிக்கு வணக்கம் உண்மையாகவே உன் அழகிய திருவடிகளைக் கண்டு இப்பொழுது அப்பிறவித் துன்பங்களினின்றும் விடுபட்டேன். சிவன் திருவடிக்கீழ்ச் சென்று இன்புற்றிருப்பர்.

மேற்காட்டிய அடிகளில் "அடி" என்பது பாதத்தைக் குறிக்கின்றது. இறைவன் அடிகளை வழிபடுவது ஒரு வழிபாட்டு முறைமையாகும். பாசங்களை நீக்கத் திருவடிகளையே வழிபட வேண்டும். இறைவன் எம்மைவிடப் பேராற்றல் வாய்ந்தவன். அவனுடைய திருவடிகளிலே நாம் பணிந்து நின்றால் அருள் செய்வான். சிவனுடைய திருவடியை மணிவாசகர் நேரில் காணும் வாய்ப்புப் பெற்றவர். அதனால் சிவந்த திருவடி என்று குறிப்பிட்டுள்ளார். அதே போன்று இறைவன் திருப்பெருந்துறையில் குருந்தமர நீழலிற் பரமாசாரியனாக அமர்ந்து தம்மை ஆட்கொண்டமையால் "நம்தேவன்" என்று குறிப்பிட்டுள்ளார். மேலும் இறைவன் திருவடியைப் பொன்னடி எனச் சிறப்பாக உரைத்துள்ளார். பொன்னடி என்பது பொன் போலும் அருமையும் தூய்மையும் ஒளியுமுடைய திருவடி எனச் சிறப்பாகக் கூறியுள்ளார். மணிவாசகர் உள்ளத்தில் இறைவன் திருவடிக்கோலம் அழியாத கோலமாக இருந்தது அதையே வழிபாடு செய்கிறார்.

**3 கழல்**

*"பிறப்பறுக்கும் பிஞ்ஞகன் தன் பெய்கழல்கள்வெல்க"*
*"புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க"*
*"கரங்குவிவார் உள்மகிழுங் கோன்கழல்கள் வெல்க"*
*"சிரங்குவிவார் ஓங்குவிக்குஞ் சீரோன் கழல் வெல்க."*
*"நிலந்தன் மேல் வந்தருளி நீள் கழல்கள் காட்டி"*
*"எண்ணுதற் கெட்டா எழிலார் கழல் இறைஞ்சி "*

இவ்வடிகளின் தொகுப்பு நிலையான பொருள் வருமாறு

பிறவியாகிய மரத்தை வேரோடறுக்கும் சடைமுடியாகிய தலைக் கோலத்தையுடைய இறைவனது இடப்படப்பட்ட வீரக் கழல்களை உடைய திருவடிகள் வெற்றி பெறுக. தன்பால் அன்பரல்லாதார்க்குத் தூரத்தே யுள்ளவனான இறைவனது பூப்போன்ற திருவடிகள் வெற்றி பெறுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைகள் குவிய வணங்கும் அன்பர்களது மன மகிழ்தற்கேதுவாகிய இறைவனது திருவடிகள் வெற்றி பெறுக. தலைகள் தன் தாளில் ஒடுங்கப் பெறுவாரை உயர்வடையச் செய்யும் சிறப்பையுடைய இறைவனது திருவடிகள் வெற்றி பெறுக. இந்நிலவுலகத்தே குருவடிவில் எழுந்தருளி வந்து எல்லை காண்டற்கரிய நீண்ட திருவடிகளை எனக்குக் காட்டியருளியவர். நினைத்தற்கும் எட்டா அழகு பொருந்திய வீரக்கழல் அமைந்த திருவடிகள் அருமையாய் எளியவாய்ப் பூமியில் தாழ்ந்து திருப்பெருந்துறையிலே பரமாசாரியனாய் வலிய எழுந்தருளி வந்தமை.

மேற்காட்டிய அடிகளில் "கழல்" என்பது திருவடிக்கு ஆகுபெயராக அமைந்துள்ளது. கழல் அணிந்த திருவடிகளிலே ஒரு புதிய பொலிவு இருப்பதை மணிவாசகர் உணர்த்துகிறார். சிவனின் திரு நடனக் கோலத்தில் கழலின் பொலிவை அறியலாம் ஆனால் வழிபாட்டு நிலையில் கழலையும் மணிவாசகர் வாழ்த்துவது அவருடைய பக்திவயப்பட்ட நிலையையே நன்கு உணர்த்தி நிற்கிறது. கழல் ஒரு அடைமொழியாக இறைவன் அருட் சிறப்பை உயர்த்துவதாக உள்ளது. பெய் கழல், பூங்கழல், கோன் கழல், சீரோன் கழல், நீள்கழல் எழிவார் கழல் என இறைவன் திருவடிபற்றியே பாடியுள்ளார். வழிபாட்டு நிலையில் இறைவன் திருவடிகளையே நினைந்து வழிபட்டால் போதும் திருக்கோலம் முழுவதையும் கண்டு வழிபட நாம் கோயிலுக்குச் செல்ல வேண்டும் ஆனால் திருவடிக்கோலத்தை மட்டுமே நினைவில் வைத்து வழிபாடு செய்யும் ஒரு முறையையும் மணிவாசகர் காட்டியுள்ளார். அதனால் அவர் பாடிய ஏனைய பாடல்களிலும் திருவடிபற்றிச் சிறப்பாகப் பாடியுள்ளார்.

(வேவிலந்தை முத்துமாரி வெள்ளோட்ட மலர்)

திருச்சதகம் என்னும் பகுதியில் இறைவன் தன்னை வலிய வந்து ஆட்கொண்டதைக் குறிப்பிடும் போது வருமாறு குறிப்பிடுகிறார்.

*"மலர்க்கழல்கள் அவை காட்டி வழியற்றேனைத்*
*திண்ணந்தான் பிறவாமற் காத்தாட் கொண்டாய்"*

இங்கும் கழல் ஆகுபெயராக இறைவனது தாமரை மலர்போன்ற திருவடிகளைக் குறித்து நிற்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*"கண்ணினை நின் திருப்பாதப் போதுக்காக்கி
வந்தனையும் அம்மலர்க்கே யாக்கி"*

இங்கு என் இரு கண்களையும் நின் திருவடி மலர்களுக்கே அமையச் செய்து வழிபாட்டையும் அம்மலரடிகளுக்கே உரிய தாக்கியுள்ளேன் என்கிறார். இங்கு "பாதம்" என்ற சொல்லைப் பயன்படுத்தியுள்ளார். பல பாடல்களில் பாதமலர், பாதநன்மலர் போன்ற சொற்கள் வந்துள்ளன. இதே போலக் கழல் என்ற சொல்லையும் பயன்படுத்தியுள்ளார். திருச்சதகத்தில் "கழல்" என்ற சொல்லும் அடி என்ற சொல்லும் பல பாடல்களில் வந்துள்ளன. தாள் என்ற சொல்லும் வந்துள்ளது "ஒண் மலர்த்தாள்" என்ற தொடரைச் சான்றாகக் காட்டலாம்.

மணிவாசகர் இவ்வாறு தாள், அடி, கழல், பாதம் என்னும் சொற்களைத் தனித்துவமாகப் பயன்படுத்துவதற்கு முக்கிய காரணம் அவர் பெற்ற திருவடி தீட்சையேயாகும். திருவுருவ வழிபாட்டில் முழு உருவையும் வணங்கும் போது முதலில் தாளையே பார்த்து வணங்க வேண்டும் அதன் பின்னர் படிப்படியாக இறைவன் உருவத்தைப் பார்த்து வணங்க வேண்டும் என்ற மரபும் உண்டு இறைவனைப் பாடும் போது பாதாதிகேச வர்ணணையே இடம்பெறும் இம்மரபையும் மணிவாசகர் பாடிய சிவபுராணம் தெளிவாய் உணர்த்தி நிற்கிறது.

இன்று உருவ வழிபாடு பற்றிய பல ஐயங்கள் தோன்றிய நிலையில் மணிவாசகரது வழிபாட்டு முறைமை ஒரு விளக்கமாக உள்ளது. ஒருவரை நாம் மதிக்கும் போது அவர் பாதங்களில் வீழ்ந்து வணங்குகிறோம். அதனை எமக்கு ஒரு இழிவான செயல் எனப் பலர் எண்ணுகின்றனர் ஆனால் எம்மை நாம் மற்றவர் முன்னிலையில் தாழ்த்தி நிற்பது ஒரு உயர்ந்த குணமாகும். அத்னையே மணிவாசகரின் வழிபாட்டு நடைமுறையும் கூறுகிறது. அவரது உண்மையான வாழ்வியலனுபவம் ஒரு பக்திநிலையை எல்லோருக்கும் உணர்த்துகிறது. எமது வழிபாட்டு மரபில் மணிவாசகரது உண்மை அநுபவம் பாடல்களிலே பரவியிருப்பதால் திருவாசகப் பாடல்களாக முக்கிய இடத்தைப் பெற்றுள்ளன. சிவபராணம் எல்லா வழிபாட்டு நடைமுறைகளிலும் இடம் பெற்றுள்ளது. இதனை எமது இளந்தலைமுறையினர் தெளிவாக அறிந்து கொள்ளவேண்டும்.

□□□



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கார்த்திகை விளக்கீடு

## விளக்கின் வரலாறு

எமது வழிபாட்டு நடைமுறைகள் யாவும் மனித வாழ்வியலுக்குத் துணையாக நிற்பவை உள்ளத்தைச் செம்மைப்படுத்துவதற்காக மட்டுமன்றி வாழ்வியற் சூழலையும் தூய்மையும் அழகும் சேர வைப்பதற்கும் சில நடைமுறைகள் எமது முன்னோர்களால் காலங்காலமாகப் பேணப்பட்டு வந்துள்ளன. அவை இயற்கையுடன் இயைபுபடுத்தப்பட்டுள்ளன. இன்று வழிபாட்டு நடைமுறைகள் பற்றிய ஐயமும் தெளிவின்மையும் இளந்தலைமுறையினரிடையே தோன்றி யுள்ளது. விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் உலகெங்கும் வளர்ந் திருக்கும் நிலையில் வழிபாட்டு நடைமுறைகள் தேவையற்றவை என்ற கருத்தும் தோன்றியுள்ளது எனவே இத்தகைய சிக்கல்களைத் தீர்க்க வேண்டிய கடமை எமக்குண்டு அதனால் வழிபாட்டு நடைமுறைகளில் ஒன்றான திருக்கார்த்திகை விளக்கீடு பற்றிய செய்திகளையும் விளக்கங்களையும் இக்கட்டுரையில் தொகுத்துத் தரும் முயற்சியில் இவ்வெழுத்துரு தோன்றியது.

மனித வாழ்க்கையில் ஆதி மனிதனுடைய வாழ்வியற் செயற் பாடுகளில் இருளைப் போக்கும் முயற்சியாக விளக்குத் தோன்றியுள்ளது அகல்போன்ற அமைப்பிலே உள்ள காய்களின் காய்ந்த மேற்புறத்தை அகலாகப் பயன்படுத்தி கொழுப்பை எரிபொருளாக்கிப் பண்டைக்கால மக்கள் விளக்கேற்றினர் எகிப்தியர் உட்கூடான கல்லிலே கொழுப்பை நிரப்பி பஞ்சாலான திரியை அதனூடே செலுத்தி அதனை நெருப்பால் பற்ற வைத்து விளக்கை எரித்துள்ளனர். கிரேக்கர்களும் ரோமானி யர்களும் சுட்டமட்பாண்டம் (Terra cotta) வெண்கலம் ஆகியவற்றால் செய்யப்பட்ட விளக்குகளில் ஆளி விதை நெய்யை எரிபொருளாகப் பயன்படுத்தி விளக்கை ஏற்றியுள்ளனர்.

காலத்தின் கடப்பில் மேலை நாட்டில் விளக்கின் அமைப்பின் மாற்றம் ஏற்பட்டது. ஏம் ஆர்கான் (Aime ARGAND) என்னும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவிற்செலாந்து நாட்டு அறிஞர் குழாய் வடிவான திரியை விளக்கில் பயன்படுத்தும் முறையை ஏற்படுத்தினார் இவருடைய உதவியாளர் சிம்னி என்னும் புகைபோக்கியை விளக்குகளில் அமைத்தார் 1800 ஆம் ஆண்டில் மண்ணெய் கண்டு பிடிக்கப்பட்ட பின் அதன் பயன்பாடு பரவலாக்கம் பெற்றது. காற்றினால் அணைந்து போகாத HURRICANE என்னும் விளக்குஅமைப்புப் பெற்றது. அதன் பின்னர் ஆவி விளக்கு என அழைக்கப்பட்ட பெட்ரோமாக்ஸ் (PETROMAX) என்னும் விளக்குப் பயன்பாட்டுக்கு வந்தது. எனவே விளக்கின் வரலாற்றை நோக்கும் போது தேவை கருதியும் கிடைத்த செய்பொருட்களுக்கு ஏற்பவும் பல்வேறு வகையான விளக்குகள் தோன்றியதை அறிய முடிகின்றது. மண், பித்தளை, வெண்கலம் வெள்ளி என்பவற்றாலும் கண்ணாடியாலும் விளக்குகள் செய்யப்பட்டுள்ளன. யவன நாட்டிலிருந்து பல கண்ணாடி விளக்குகள் தமிழ் நாட்டிற்கு எடுத்து வரப்பட்டுள்ளன. சங்க இலக்கியங் களில் இது பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன.

விளக்கின் வகைப்பாடுகள் அவற்றின் தனித்துவமான பயன்பாட்டையும் வெளிப்படுத்தி நின்றன. அவற்றை வருமாறு வகைப்படுத்தலாம்.

1. அகல்விளக்கு - சடங்குகளின் போது பயன்படுத்தல்
2. குத்துவிளக்கு - வழிபாட்டு நடைமுறைகளில் பயன்படல்.
3. மெழுவர்த்தி - மேலை நாடுகளில் சடங்குகளில் பயன்பாடு
4. சிம்னி விளக்கு - வீட்டில் இருளகற்றப்பயன்படல்
5. ஆவி விழாக்கள் - விழாக்களில் பயன்படல்
6. மின் விளக்கு -எல்லா இடங்களிலும் பயன்படுத்தப்படுகிறது.

## தமிழர் பண்பாட்டில் விளக்கு

தமிழர் பண்பாட்டில் விளக்கு தனித்துவமானசில பயன் பாடுகளைக் கொண்டுள்ளது. வீடு, சமூகம், நாடு என்ற நிலையில் இருளைப் போக்கும் கருவியாக விளக்கைப் பயன்படுத்தல் ஒரு பொது நிலையான பயன்பாடாகும். ஆனால் விளக்கு வழிபாட்டு நடைமுறையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறப்பு நிலையில் பண்டைக்கால முதலாகப் பயன்படுத்தப்படுவது சிறப்பு நிலையாகும். திருக்கோயில்களில் ஏற்றப்டும் விளக்கு "திருவிளக்கு" என சிறப்புப் பெயரால் அழைக்கப்பட்டது. தொடக்கத்தில் மண்ணாலான அகல்விளக்குகளே பயன்பட்டுள்ளன. பின்னர் பல்வேறு உலோகங்களாலானவிளக்குகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

விளக்கின் ஒளியிலே இறைவனைக் கண்டு வழிபடும் தனித்துவமான பண்பாடும் நீண்ட காலமாகத் தமிழரிடையே நிலவி வந்துள்ளது. விளக்கை ஏற்றி வைத்து நெல்லும்மலரும் தூவிப் பெண்கள் வழிபாடுசெய்த முறைமையைச் சங்கப்பாடல்களில் காணலாம்.

*"மடவரன் மகளிர் பிடகைப் பெய்த*
*செல்வியரும்பின் பைங்காற் பித்திகத்*
*தவ்வித ழவிழ்பதங் கமழப்பொழுதறிந்*
*திரும்பு செய் விளக்கி னீர்ந்திரிக் கொளீஇ*
*நெல்லும்மலருந் தூய்க்கை தொழுது*
*மல்ல லாவண மாலை யயர..."*

(நெடுநெல்வாடை (39- 44)

பூந்தட்டிலே இருக்கின்ற பித்திகை அரும்புகள்மலர்ந்து மணம்பரப்பும் போது மகளிர் மாலைக் காலம் வந்து விட்டதை உணர்கின்றனர் உடனே வீடு தோறும் விளக்கேற்றும் பணியை மகளிர் மேற்கொள்கின்றனர். இரும்பினால் செய்யப்பட்ட விளக்குகளில் நெய்யிலே தோய்த்த திரிகளை கொளுத்துகின்றனர். வீட்டிலே இருக்கின்ற தெய்வத்தை மாலைக் காலத்திலே வழிபாடு செய்கின்றனர். விளக்கிலெ "இல்லுறை தெய்வம்" இருப்பதாக நம்பிக்கை கொண்டு வழிபடுகின்றனர்.நெல்லையும் மலரையும் விளக்கடியிலே தூவிக் கைதொழுது அவர்கள் வணங்கிய முறைமை இன்றும் கிராமங்களிலே நிலவுகின்றது. ஆனால் தற்போது நாள் தோறும் மாலையில் வழிபாடு செய்யும் மரபு அருகிவிட்டது. எனினும் "கார்த்திகை விளக்கீடு" என்ற வழிபாட்டு நடைமுறையாக ஆண்டுக்கொருமுறை சிறப்பாக நினைவு கூரப்படுகிறது. இவ்வழிபாட்டு நடைமுறையும் பண்டைக் காலத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தே தொடர்ந்து கைக்கொள்ளப்பட்டு வருகின்றது. சங்க இலக்கியங்களில் இது பற்றிய குறிப்புகள் உள்ளன. அகநூனூறு என்னும் சங்கப்பாடல்களின் தொகுப்பு நூலிலே நக்கீரர் என்னும் புலவருடைய பாடலில் திருக்கார்த்திகை நாள் விழாவாகக் கொண்டாடப்பட்டசெய்தி உள்ளது. தலைவன் பொருளீட்டப் பிரிந்து சென்றுள்ளான். "திருக் கார்த்திகை விழாவை எம்முடன் சேர்ந்து கொண்டாட நிச்சயம் திரும்பி வந்து விடுவான்" எனத் தலைவி கூறுவதாகப் பாடலில் குறிப்பு ஒன்றுள்ளது.

*"உலகு தொழில் உவந்து நாஞ்சில் துஞ்சி*
*மழை கால் நீங்கிய மாக விசும்பில்*
*குறுமுயல் மறுநிறம் கிளரமதிநிறைந்து*
*அறுமீன் சேரும் அகல் இருள் நடுநாள்*
*மறுகு விளக்குறுத்து மாலை தூக்கிப்*
*பழவிறல் மூதூர் பலருடன் துவன்றிய*
*விழவுடன் அயரவருகதில் அம்ம"*

(அகநானூறு 141: 5 -11)

விளை நிலங்களைப் பண்படுத்துகின்ற வளைந்த கலப்பைகள் எல்லாம் ஓய்ந்திருக்க அதனாலே உலகத்துப் பிற தொழில்களும் நடவாதிருக்கும் மழைக்காலம் மழை பாட்டம் பாட்டமாகப் பெய்வதை விட்ட வானத்திலே குறுமுயல் போன்ற மறுவினது நிறம் தெளிவாகத் தெரியும் படியாக நிறை நிலா தோன்றுகிறது. கார்த்திகையாகிய ஆறு நட்சத்திரம் தோன்றும் பௌர்ணமி நாளின் நள்ளிரவில் வீதிகளிலே விளக்குகளை ஏற்றிவைத்து வாயில்களிலே மாலைகளைத் தொங்க விடும் பழைய நடைமுறையைப் பேணும் எமது ஊரிலே எல்லோரும் சேர்ந்து கொண்டாடும் திருக்கார்த்திகை விழாவினை எம்மோடுசேர்ந்து கொண் டாடுவதற்காக கட்டாயமாகத் தலைவன் திரும்பிவருவான் என்ற நம்பிக் கையுடன் தலைவி பிரிவைஆற்றிக் காத்திருக்கின்றாள்.

இச்செய்யுட் குறிப்பு திருக்கார்த்திகை நாளை வரையறை செய்துள்ளமையை எடுத்துக் காட்டியுள்ளது. அன்றைய நாளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீதிகளிலே விளக்கேற்றும் நடைமுறை பேணப்படுவதையும் விளக்கியுள்ளது. இன்றும் வீட்டு வாயிலில் தெருவில் வாழைக்குற்றிகளை நட்டு அதற்குமாலைகளால் அலங்காரம் செய்து அதன் மேல் தேங்காயப் பாதியில் நெய்யை நிறைத்து பருத்திவிதைகளை முடிச்சாகக் கட்டி வைத்து விளக்கேற்றும் நடைமுறை உண்டு.

விளக்கேற்றும் செயற்பாடு வழிபாட்டுடன் நன்கு இணைந் திருந்ததை முதலாழ்வார் மூவர் பாடல்களும் நன்கு புலப்படுத்துகின்றன. பொய்கையாழ்வார் ஏற்றிய விளக்கின் தன்மை வருமாறு.

*"வையம் தகளியா வார்கடலே நெய்யாக*
*வெய்ய கதிரோன் விளக்காக - செய்ய*
*சுடராழி யான் அடிக்கே சூட்டினேன் சொல்மாலை*
*இடராழி நீங்குகவேயென்று"*

வையகப் பரப்பையே நெய்க்கும் திரிக்கும் ஆதாரமாக இருக்கும் அகலாகக் கொண்டுள்ளார். நீண்ட கடல்நீரையே நெய்யாகப் பயன்படுத்தியுள்ளார். வெப்பமானகதிர்களையுடைய கதிரவனையே அவ்விளக்கின் ஒளியாகக் காண்கிறார். இயற்கையிலே தூங்கா விளக்கான சூரியனை அவர் கடலில் இருந்து எழும் போது கண்ட காட்சியை விளக்கேற்றும் செயற்பாட்டுடன் இணைத்து வழிபாட்டு மரபை விளக்கியுள்ளார்.

பூதத்தாழ்வார் இன்னொரு விளக்கை ஏற்றுகிறார். இவருடைய விளக்கு வித்தியாசமானது.

*"அன்பேதகளியா ஆர்வமே நெய்யாக*
*இன்புருகு சிந்தைஇடுதிரியா - நன்புருகி*
*ஞானச் சுடர் விளக்குஏற்றினேன் நாரணற்கு*
*ஞானத் தமிழ் புரிந்து நான்"*

தனது உள்ளத்து அன்பையே அகலாகக்கொண்டு அன்பின் மூலமாகப் பிறந்த ஆர்வத்தையே நெய்யாக்கி இன்பமாக உருகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தையைத் திரியாக்கி இவர் ஏற்றும் விளக்கு ஞானச் சுடர் விளக்காக அமைகிறது. புறவிருளை நீக்கப் பொய்கையாரும் அகவிருளை நீக்கப் பேயாழ்வாரும் விளக்கு ஏற்றிவழிபட அந்த ஒளியிலே இறைவனைப் பேயாழ்வார் காண்கிறார்

*"திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன் திகழும்*
*அருக்கன் அணி நிறமும் கண்டேன் - செருக்கிளரும்*
*பொன் ஆழி கண்டேன் புரிசங்கம் கைக்கண்டேன்*
*என ஆழி வண்ணன் பால் இன்று"*

இருவிளக்குகளின் ஒளியிலும் அவர் கண்டதெய்வீகக் காட்சி வழிபாட்டின் பயனை விளக்குவதாக உள்ளது. முதலில் பேயாழ்வாருக்கு அன்னை மகாலட்சுமியின் அருள் வடிவமே தெரிகிறது. அவளுடைய பொன்மேனியைக் காண்கிறார். அப்பொன்மேனியோடு அழகுறநின்ற மரகத மேனியும் பொன்மேனியாகவே தோன்றுகிறது. திருமாலின் மேனி நிறமும் மகாலட்சுமியின் மேனி நிறமும் சேர்ந்துஒரு புதிய அழகிய நிறமாக அவர்கண்ணில் தெரிந்தது பொன்போலத் தகதகக்கும் சக்கராயுதத்தையும் வலம்புரிச் சங்கையும் காண்கிறார். இம்மூன்று பாடல்களிலும் விளக்கேற்றி இறைவனைக் காணும் வழிபாட்டு நடைமுறையும் அதனால் ஏற்படும் பக்தி பரவசமும் நன்கு புலப்படுத்தப்பட்டுள்ளன.

மூவர் ஏற்றிய விளக்கு நமது மனங்களில் அன்பு, அருள் ஆகிய தீபங்களை ஏற்ற வழி காட்டுகிறது. திருவண்ணாமலையிலே ஏற்றும் மலைத்தீபமும் இதனையே உணர்த்துகின்றது. குன்றிலிட்ட தீபம் எல்லோரும் காணக்கூடியதாக இருக்கும். அடி முடிகாண முடியாத ஒளிப்பிழம்பாக இறைவன் இருப்பதை எல்லோரும் உணர்ந்து ஒளி வடிவிலே வழிபாடு செய்கின்றனர். எக்காரியத்தைச் செய்யும் போது விளக்கேற்றித் தொடங்கும் முறைமையும் இவ்வழிபாட்டு மரபின் பேணுகையையே உணர்த்தி நிற்கின்றது. "மங்கல விளக்கு" என்ற சிறப்புப் பெயரும்அதனால் வழங்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கார்த்திகை விளக்கீடு

கார்த்திகை மாத்தில் வரும் கார்த்திகை நட்சத்திர நாள் சிறப்பாகத் திருக்கார்த்திகை என அழைக்கப்படுகிறது. இந்நாளிலே விளக்கேற்றி சோதி வடிவில் இறைவனை வழிபடும் மரபு நீண்ட காலமாகவே தொடர்ந்து வருகின்றது. இத்தீபத்தின் சிறப்பைப் பின்வரும் சுலோகம் விளக்குகிறது.

*கீடா பதங்கா மச காச்ச வ்ருக்ஷா*
*ஜல ஸ்தலே யே நிவஸந்தி ஜீவா*
*த்ருஷ்டவா ப்ரதீபம் நச ஜன்ம பாஜா*
*பவந்தி நித்யம் ச்வபசா ஹி விப்ரா.*

இதன் பொருள் வருமாறு

புழுக்களோ பறவைகளோ அல்லது கொசுவோ அல்லது மரங்களோ நிலத்திலும் நீரிலும் வாழ்கின்ற உயிரினங்களோ மனிதர் களுக்குள்ளே அந்தணனோ பஞ்சமனோ யாராக அல்லது எதுவாக இருந்தாலும் சரி இத்தீபத்தைப் பார்த்து விட்டால் அந்த ஜீவனுடைய சகல பாவங்களும் அகன்று மற்றுமொரு பிறவி எடுக்காமல் நித்தியானந்தத்திற் சேரட்டும்.

இறைவன் சோதிப்பிழம்பாய் நின்ற நாளும் கார்த்திகை விளக்கீட்டு நாள் என்ற நம்பிக்கையும் உண்டு சங்கப்புலவர் இதனைப் பாடலிற் குறிப்பிடடுள்ளார்.

*“மட நடைப் பறவையும் மாய விலங்கும்*
*அடி மலர் முடிக்காடலை முறைபோகாது*
*உறழுபு காண்குமென் றுறீயித்திரிந்து*
*தேவயாண்டா யிர தேடியுமுணராய்*
*பரஞ்சுடர் மலைக்கட் கருந்தடங்கண்ணி*
*காணுபு விளக்குங் கார்த்திகை விளக்கை”*

(சங்கப்புலவர் பொய்கையார்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைப்புக் கடவுளான பிரம்மா காத்தல் கடவுளான விஷ்ணு என்னும் இரு கடவுளர்களுடைய அஞ்ஞான இருளைப் போக்குவதற்காகத் திருவுள்ளம் கொண்ட பரம்பொருள் சிவன் ஒரு பெரிய அக்னி மலையாக ஓங்கி நின்றார். இம்மலையின் முடியையும் அடியையும் யார் முதலிற் காண் கிறார்களோ அவரே பெரியவர் என்ற உடன் பாட்டின் படி பிரம்மா அன்னப்பறவையாகவும் மகாவிஷ்ணு வராகமாகவும் உருவெடுத்துக் கொண்டு அம்மலையின் முடியையும் அடியையும் காணப் புறப்பட்டுச் சென்றனர். ஆனால் அம்மலையின் முடியையோ அடியையோ அவர்களால் காணமுடியவில்லை. அப்போது இருவரும் உண்மை நிலையை நன்குணர்ந்து அக்னி வடிவத்தை மாற்றி அப்படியே அங்கு மலையாக நிற்க வேண்டும் என்றும் மலையின் கிழக்குத் திசையில் லிங்க வடிவத்தில் எழுந்தருள வேண்டும் என்றும் இறைவனை வேண்டினர். தன்னிகரில்லாத தனிப்பெரும் சோதியும் அவர்கள் வேண்டுகோளை ஏற்றுத்தம்மை ஒரு மலையாகவும் லிங்கமாகவும் ஆக்கிக் கொண்டார். இச்சோதிவடிவத்தைக் காண இறைவன் சோதியாக நின்ற காட்சியைக் காண ஆண்டு தோறும் கார்த்திகை மாதத்துக் கார்த்திகை நட்சத்திரத்தில் தீபதரிசனப் பெருவிழா நடைபெற்று வருகிறது. பஞ்சபூதத்தலங்களுள் அக்கினித்தலமாகத் திருவண்ணாமலை சிறப்பிக்கப்பட்டுள்ளது.

திருக்கார்த்திகை நாள் பற்றி சைவ நாயன்மாருள் ஒருவரான சம்பந்தரும் தனது பாடலில் குறிப்பிட்டுள்ளார். அம்பிகையே மயில் வடிவம் கொண்டு இறைவனைப் பூசித்தமையால் திருமயிலை எனப் பெயர் கொண்ட தலத்திலே கார்த்திகை நாள் சிறப்பான விழாவாகக் கொண்டாடப் பெற்றுள்ளதைச் சம்பந்தர் பாடியுள்ளார் சிவனேசச் செட்டியாரின் மகள் பூம்பாவையை எலும்புருவிலிருந்து பெண்ணாக மாற்றித் தரும்படி இறைவனை வேண்டிப்பாடிய பதிகத்தில் இக்குறிப்பையும் சேர்த்துள்ளார்.

*"வளைக்கை மட நல்லார் மாமயிலை வண் மறுகில்*
*துளக்கில் கபாலீச்சரத்தான் தொல்கார்த்திகை நாள்*
*தளந்தேந் திளமுலையார் தையலார் கொண்டாடும்*
*விளக்கீடு காணாதே போதியோ பூம்பாவாய்"*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகளிர் வழிபாட்டு நடைமுறைகளில் கார்த்திகை விளக்கீடு முக்கியத்துவம் பெற்றுள்ளமை இங்கு நன்கு உணர்த்தப்பட்டுள்ளது. திருக்கோயிலில் விளக்கேற்றி வழிபட ஒரு நாள் சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளது. சிறப்பாகக் கோலமிட்டு அகல் விளக்குகளை ஏற்றி வைத்து வழிபடும் காட்சியைப் பார்த்து மகிழாமல் பூம்பாவை போக மாட்டாள் எனச் சம்பந்தர் நம்பிக்கையூட்டுகிறார்.

பின் வந்த சீவகசிந்தாணி என்னும் நூலிலும் "குன்றிற் கார்த்திகை விளக்கிட்டன்ன" எனத் திருக்கார்த்திகை விளக்கீடு பற்றிய குறிப்புக் காணப்படுகிறது.

*"தார்ப்பொலி தரும தத்தன்*
*றக்கவா றுரைப்பக் குன்றிற்*
*கார்த்திகை விளக்கிட் டன்ன*
*கடிகமழ் குவளைப் பைந்தார்*
*போர்த்த னகல மெல்லாம்*
*பொள்ளென வியர்த்துப் பொங்கி*
*நீர்க்கடன் மகரப் பேழ்வாய்*
*மதனன் மற்றிதனைச் சொன்னாள்*

(சீவகசிந்தாமணி :256)

மதனன் என்பவனுடைய மார்பிலே இருந்த நறுமணங்கமழும் குவளை மலர் மாலையைப் பற்றிக் கூறவந்த திருத்தக்கதேவர் குன்றிலே இட்ட கார்த்திகை விளக்குப் போல என்று குறிப்பிட்டுள்ளார். மார்பு மலைபோலவும் குவளை மலர்கள் அகல்விளக்குகள் போலவும் தோன்றுகிறது. இக்குறிப்புச் சமண சமயத்தைச் சார்ந்த திருத்தக்கதேவர் அக்காலத்திலும் நடைமுறையிலிருந்த கார்த்திகை விளக்கீட்டு நடைமுறையைத் தனது காப்பியத்தில் குறிப்பிட்டிருப்பது வழிபாட்டு நடைமுறைகளில் கார்த்திகை விளக்கீடு பெற்றிருந்த சிறப்பான இடத்தை நன்கு விளக்கியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கார்த்திகைத் திருநாளன்று முருகன் உறையும் திருத் தலங்களில் மாவிளக்கு எரிக்கும் வழிபாட்டு நடைமுறை உண்டு. தினை அரிசியை நீரிலே ஊற வைத்து அதை இடித்து மாவாக்கித் தேனுடன் சேர்த்துப் பிசைந்த களியை வாழையிலையிலே வரம்பு அமைத்து அதனுள் அகல் விளக்குப் போன்ற உருவங்களை வைப்பர். அவற்றுள் நெய்யை ஊற்றித் திரியிட்டுக் கொழுத்தி வழிபடுவர். இதனை "மாவிளக்குப் போடல்" என்று சிறப்புற அழைக்கின்றனர். விளக்கு எரிந்த பின்னர் வெந்த தினை மாவைப் பிரசாதமாக உண்பர். இவ்வழக்கம் மலைவாழ் மக்கள் வழிபாடாகவே முதலில் தோன்றியிருக்க வேண்டும். பின்னர் முருகன் கோவில்களில் கார்த்திகை மாதக் கார்த்திகை நாளில் சிறப்பான வழிபாட்டு நடைமுறையாக நிலைத்து விட்டது.

வீடுகளில் திருக்கார்த்திகை விளக்கீட்டன்று தாய்மனையில் விளக்கேற்றி வைத்துத் தினைமாவில் உணவு வகைகளைச் செய்து மடையிடும் வழக்கம் கிராமப்புறங்களில் இன்னும் உண்டு தற்போது கிழங்கு வகைகளையும் அவற்றுடன் சேர்த்து வைக்கும் முறையும் சேர்ந்துள்ளது. குறிப்பாகப் பனங்கிழங்கு சிறப்புமடையாக இடம் பெறுகிறது. பனங்கிழங்கைக் காய வைத்து ஒடியலாக்கி அதை மாவாக்கிப் புட்டு அவித்து விளக்கடியில் மடையிடும் வழக்கம் இன்னம் யாழ்ப் பாணத்தில் நடைமுறையில் உள்ளது குறிப்பிடத்தக்கது.

எனவே விளக்கீடு என்பது ஒரு வீட்டு வழிபாடாக இருந்து பின்னர் திருக்கோயில் வழிபாடாக வளர்ச்சி பெற்றமையை உணரமுடிகின்றது. இருளை அகற்றும் விளக்கின் ஒளியை உள்ளத்தைப் பண்படுத்தும் ஆன்மீக ஒளியாக வணங்கும் மரபு தோன்றியுள்ளது. அத்துடன் புராணக் கதைகளும் இணைந்து கொண்டுள்ளன. ஐம்பெரும்பூதங்களில் ஒன்றான தீயின் பேராற்றலை பணிந்து வாழவேண்டும் என்பதே இவ்வழிபாட்டின் உட்பொருளாகும். "இல்லக விளக்கது இருள் கெடுப்பது" என்று திருஞானசம்பந்தர் பாடியுள்ளார். அப்பாடலில் "நல்லக விளக்கது நமச்சிவாயவே" என்று முடித்துள்ளார். இப்பாடலும் விளக்கு ஆன்மீக வழிபாட்டுடன் தொடர்புற்றிருப்பதை நன்கு உணர்த்துகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது முன்னோர்களின் வழிபாட்டு முறைகள் யாவும் அவர் களுடைய பண்பட்ட வாழ்வியல் முறையால் வரையறை செய்யப்பட்டவை கார்த்திகை மாதம் கொட்டு மழை பெய்யும் குளிர்பரந்திருக்கும் மழை முகில் இல்லாத நிறைநிலாவைக் காண்பது கடினம் எனவே எங்கும் பரவிய இருளைப் போக்க விளக்கேற்றும் நடைமுறை தோன்றியது. அதனை வழிபாட்டு நடை முறையோடு இணைத்த போது இறை உணர்வு ஏற்பட்டது. பின்னர் விளக்கின் ஒளியையே இறைவனாகக் காணும் மனப்பக்குவம் ஏற்பட்டது. அதனால் சுடர் விட்டு எரியும் விளக்கை (குத்துவிளக்கை) மகாலக்சுமியாக வணங்கும் நிலையும் தோன்றியது. ஆனால் தற்போது பலவிழாக்களில் பெரிய குத்துவிளக்குகள் எரியாத நிலையில் பொலிவிழந்து போயிருக்கின்றன. விளக்கீட்டின் விளக்கத்தை உணர்ந்து அவற்றில் சுடரேற்றிப் போலியழகை விரட்ட வேண்டுவது எமது கடனாகும்.

❑❑❑

12486 SC



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Prof. V. SIVASAMY
UNIVERSITY OF JAFFNA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Prof. V. SIVASAMY
UNIVERSITY OF JAFFNA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

GURU PRINTERS, Thirunelvely.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org